பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 26 திங்கட்கிழமை (12-11-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:351

# கருத்துக் கணிப்பில் ஐ.தே.க. முன்னணி!

## ஜே.வி.பிக்கும் ஆதரவு கூடுகின்றது

கொழும்பு,நவம்பர்12

**வடக்கு - கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பிரதேசங்களில் நடந்த தேர்தல் கருத்துக் கணிப்பின்படி, ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைவிட ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அதிகப் படியாக ஏழு வீத மக்களின் ஆதரவைப் பெற்று முன்னணியில் திகழ்கின்றது.**

**ஜே.வி.பிக்கும் கடந்த முறையைவிட இப்போது மக்கள் ஆதரவு கூடியிருப்பதை கருத்துக் கணிப்பு துலாம்பரப் படுத்தியிருக்கின்றது.**

சுயாதீன ஆய்வு மற்றும் அது தொடர்பான நிபுணத்துவ சேவைகளை வழங்கும் "நோர்வே றிசேர்ச் லங்கா லிமிட்டெட்" (Survey Research Lanka Ltd.) என்ற நிறுவனத்தினால் நாட்டில வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் கடந்த 27 ஆம் திகதி முதல் முதலாம் திகதி வரை இந்தக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. அதன் முடிவுகளை 'த சண்டே ரைம்ஸ்' பத்திரிகை நேற்று வெளியிட்டது.

சமூகத்தின் பல தரப்புகளையும் சேர்ந்த - 19 வயதுக்கு மேற்பட்ட - 2 ஆயிரத்து 400 பேரின் கருத்துக்கள இக்கணிப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்டன.

இதன்படி ஐக்கிய தேசிய முன்னணி - 40.4 வீதமும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணி 33.4 வீதமும், ஜே.வி.பி. 12.8 வீதமும் மக்கள் ஆதரவு பெற்றுள்ளன.

11.2 வீதமான மக்கீள் எந்த அணியை ஆதரிப்பது என்பதை இன்னும் தீர்மானிக்கவில்லை. ஏனைய தரப்புகளை 2.2 வீதமானோர் ஆதரிக்கின்றனர்.

இந்தப் பொதுத் தேர்தலில் ஐ.தே.கவின் வெற்றி உறுதி என்பதை வெளிப்படுத்தும் ஆரம்ப சமிக்ஞை இது என்று ஐ.தே.கட்சிப் பேச்சாளர் கருணாசேன கொடித்துவக்கு கூறினார்.

எந்த அணியை ஆதரிப்பது என்று இதுவரை தீர்மானிக்காதவர்களில் பெரும்பாலானோர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியை ஆதரிப்பர் என்றும், இதனால் வெற்றி பொ.ஐ.முன்னணி பக்கமே திரும்பும் என்றும் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி குறிப்பிட்டார்.

இந்தக் கருத்துக் கணிப்பு முடிவினால் புளகாங்கிதம் அடைந்திருக்கும்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கட்சி மாறும் படலம் தொடர்கிறது!

கொழும்பு,நவ.12

கொழும்பு அரசியல் வட்டாரத்தில் கட்சிதாவும் படலம் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றில் இருந்து மேலும் பலர் ஐ.தே.கட்சிக்கு மாறியுள்ளனர். இந்தக் கட்சிகளின் மூத்த உறுப்பினர்கள் பலரும் கூட இவ்வாறு கட்சி மாறியுள்ளனர்.

கட்சி மாறியவர்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆரம்பகால மூத்த

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தான் உருவாக்கிய கட்சியிலிருந்தே செல்லச்சாமி வெளியேற்றப்பட்டார்

கொழும்பு,நவ.12

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் மீண்டும் இணைந்து கொண்ட காரணத்தால் தான் உருவாக்கிய கட்சியில் இருந்தே எம்.எஸ்.செல்லச்சாமி வெளியேற்றப்பட்டார்.

செல்லச்சாமி உருவாக்கிய இலங்கைத் தோட்டத்தொழிலாளர் காங்கிரஸ் கட்சியிலிருந்து அவரை வெளியேற்றுவது என கட்சியின் நிறைவேற்றுக் குழு நேற்றுத் தீர்மானித்தது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளராக இருந்த செல்லச்சாமி பின்னர் அதிலிருந்து விலகி இ.தோ.தொ.காங்கரஸை உருவாக்கினார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலை முன்னிட்டு இ.தொ.காங்கிரஸ் தலைவருடன் உடன்பாடு கண்ட அவர், மீண்டும் இ.தொ.காவில் இணைந்து கொண்டார். தேர்தலில் அதன் சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியுமிடுகிறார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பொ.ஐ.மு. - ஐ.தே.க. ஆதரவாளர்கள் நாத்தாண்டியாவில் கடும் மோதல்

### நிலைமையைக் கட்டுப்படுத்த இரவு முழுவதும் ஊரடங்கு

கொழும்பு,நவ.12

சிலாபம், நாத்தாண்டியா பகுதியில் நேற்றுப் பிற்பகல் பொது மக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களுக்கும் ஐ.தே.கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையே கடும் வன்முறைகள், மோதல்கள் இடம்பெற்றன.

இதனை அடுத்து நாத்தாண்டியா பொலீஸ் பிரிவில் நேற்றுமாலை 6 மணி முதல் இன்று காலை 6 மணி வரை ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

ஆளும் தரப்பு ஆதரவாளர்களும் எதிர்க்கட்சி ஆதரவாளர்களும் கத்திகள், பொல்லுகள் சகிதம் மோதிக் கொண்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

நிலைமையைக் கட்டுப்படுத்த பொலீஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பிரயோகித்தனர். பின்னர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அரச வைத்தியசாலையில் டாக்டர்கள் கைகலப்பு

### வடமராட்சியில் நேற்றுச் சம்பவம்

வடமராட்சிப் பகுதியில் இயங்கும் பிரதான அரச வைத்தியசாலை ஒன்றில் சேவையாற்றும் இரு வைத்தியர்கள் கடமை நேரத்தில் நோயாளர்கள் முன்னிலையில் கைகலப்பில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை 9 மணியளவில பெண்கள் வார்ட் பகுதியில் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பானது. அந்த வார்ட்டில் இருந்த பெண்களும், நோயாளரைப் பார்வையிட வந்தவர்களும் இந்தக் கைகலப்பைப் பயத்துடன் ஒதுங்கி நின்று வேடிக்கையாகப் பார்த்ததாக நோயாளி ஒருவர் தெரிவித்தார்.

அந்த வார்ட் பகுதிக்கு தற்செயலாகச் சென்ற இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க பருத்தித்துறை கிளையின் பிரதிநிதி ஒருவர் இரு வைத்தியர்களையும் விலக்குப்பிடித்து சமாதானப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-6-15)

## தேர்தல் தொடர்பான மனுக்கள்

## உயர் நீதிமன்ற முடிவு குறித்து ஐ.தே.க. வட்டாரங்கள் அதிருப்தி

கொழும்பு,நவ.12

பொதுத்தேர்தலை நீதியாகவும் நியாயமாகவும் நடத்துவதற்கு தேர்தல் ஆணையாளருக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் 17 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் சட்ட ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும்படி கோரி, ஐ.தே.கட்சி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுக்களுக்கு திருப்தியான பதிலோ நீதியோ கிடைக்கவில்லை என்று ஐ.தே.கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்த விடயம் தொடர்பாக -

அரச செய்தி ஊடகங்களுக்கு எதிராக மூன்று மனுக்களை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார் ஐ.தே.கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய.

எனினும் -

இந்த மனுக்களை விசாரித்து தேர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு பொலீஸ் நிலைகள் மீது மட்டக்களப்பில் தாக்குதல்கள்

### பொலீஸார் மூவர் உட்பட 4 பேர் பலி; 11 பேர் காயம்

மட்டக்களப்பு,நவ.12

மட்டக்களப்பு பாலமீன்மடு மற்றும் ஏறாவூர் ஆகிய இடங்களில் அமைந்திருந்த பொலீஸ் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை திடீர்த் தாக்குதல நடத்தினர். இதில் 3 பொலீஸாரும் ஓர் ஊர்காவலரும் கொல்லப்பட்டனர்; 11 பொலீஸார் காயமடைந்தனர்.

மட்டக்களப்பு நகரிலிருந்து மூன்று மைல் தொலைவில் உள்ள பாலமீனமடு பொலீஸ் காவல் நிலையம் மற்றும் பத்து மைல் தொலைவில் உள்ள ஏறாவூரின் எல்லைக் கிராமமான 11ஆம் கொலனியில் அமைந்துள்ள பொலீஸ் முன்னணிக் காவலரண் ஆகியவையே தாக்குதலுக்கு இலக்காகின. இரு நிலைகளையும் தாக்கி அழித்த புலிகள், சிறிது நேரம் அவற்றைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

சுமார் 100 புலிகள் பாலமீன்மடு தாக்குதலில் பங்குபற்றினர் என்று

(2 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளால் ஆபத்து வரலாம் என ரணிலுக்கு பொலீஸ் எச்சரிக்கை

கொழும்பு,நவ.12

தேர்தல் பிரசாரங்களின்போது விடுதலைப் புலிகளால் ஏற்படக் கூடிய ஆபத்து மற்றும் அச்சுறுத்தல் குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பொலீஸார் தெரிவித்திருந்ததாக 'த சண்டே ரைம்ஸ்' பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் ஐ.தே.கட்சித் தலைவர்களை விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதல் நபர்கள் இலக்கு வைத்திருப்பதாகப் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்ததை அடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாகவும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.



தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்குத் தன்னை அர்ப்பணித்த தமிழ் மகன்

மாவை.சோ.சேனாதிராசா

05-12-2001 தேர்தல்

X 12 எங்கள் தெரிவு 12

(C/19260)



# கட்டுநாயக்கா தாக்குதலின் எதிரொலி: 31 விமானப் படையினருக்குக் கல்தா!

## ஏயர் கொமடோர் ஆனந்தவும் வீட்டுக்கு அனுப்பப்படுகின்றார்

கொழும்பு,நவ.12

கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்தின் மீதான தாக்குதலுக்கு வாய்ப்பாக அமைந்த பல்வேறு பாதுகாப்புக் குறைபாடுகள் மற்றும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஏயர் கொமடோர் ஒருவர் உட்பட 31 விமானப் படையினர் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான உத்தரவுகளை ஆயுதப்படைகளின் பிரதம தளபதி என்ற வகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிறப்பித்துள்ளார்.

ஜூலை 24 இல் கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீது தாக்குதல் நடந்த சமயம் அந்தத் தளத்தின் தளபதியாக இருந்த ஏயர் கொமடோர் ஆர். ஏ.ஆனந்தவும் பதவி நீக்கப்பட்டவர்களுள் ஒருவர். இந்தத் தாக்குதலின் பின்னர் இதுவரை காலமும் இவர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தார்.

விங் கொமாண்டர் ஆர்.ஏ.என்.ஆர். இரட்ணாயக்கா, ஸ்குவாட்ரன் லீடர் வை.எச்.ஆர்.வை. திஸநாயக்கா, பைலட் அதிகாரி ஏ.கே.டி.சந்திரகுமார, பறப்பு அதிகாரி எஸ்.டபிள்யூ.டபிள்யூ.டி. கே.எட்வின் ஆகியோரும் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

ஏயர் கொமடோர் சல்காது, விங் கொமாண்டர் ஏ.எம்.டீ.சொய்சா, விங் கொமாண்டர் வீ.டீ.அபயசூரிய ஆகியோருக்கு எச்சரிக்கைக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

"எதிர்காலத்தில் கடமைகளை விழிப்புடன் நிறைவேற்றுதல் வேண்டும்" என்று அந்தக் கடிதங்களில் எச்சரிக்கப்பட்டுள்ளது; அவர்களுககு ஓர் ஆண்டுக்குரிய சம்பள ஏற்றமும் முடக்கி வைக்கப்பட்டுள்ளது.

பறப்புகளுக்கு பொறுப்பான லெப்டினன்ட் மாறப்பெரும, பறப்பு அதிகாரி எஸ்.எஸ்.திசாநாயக்க, வேறு 10 விமானப் படையினர் பாராட்டப்பட்டுள்ளதுடன் வீரச் செயல்களுக்கான விருதுகளுக்கும் ஜனாதிபதியால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளனர்.

ஜூலை 24 தாக்குதல் தொடர்பான ஐந்து பேர் கொண்ட விசாரணைக் குழுவின் சிபாரிசு மற்றும் விமானப் படைத் தளபதி எயர் மார்ஷல் ஜயலத் வீரக்கொடியினதும், பாதுகாப்பு அமைச்சினதும் சிபாரிசு ஆகியவற்றின் அடிப்படையிலேயே ஜனாதிபதி இந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

பதவி நீக்கம் செய்யப்பட்டு படையிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கும் இந்த 31 விமானப் படையினருக்கும் எதிராக - பதவி நீக்கம் தொடர்பாக - அடுத்து எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்னவென்பது குறித்து அடுத்து வரும் வாரங்களில் ஜனாதிபதி தீர்மானிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (உ)

# அனுராவின் வருகையால் ஆளும் தரப்பில் குழப்பம்!

கொழும்பு,நவ.12

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு அனுரா பண்டாரநாயக்கா திரும்பியிருப்பது கட்சிக்குள் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அனுராவைக் கட்சிக்குள் சேர்த்துக்கொண்டது குறித்து முன்னணியின் சிரேஷ்ட தலைவர்களான பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, டி.எம். ஜயரத்ன, ரிச்சர்ட் பத்திரன போன்றோர் பெரிதும் அதிருப்தி அடைந்திருக்கின்றனர்.

ஜனாதிபதி குமாரதுங்காவுக்கு அடுத்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குள்ளும் தங்களுக்கு இருந்த அடுத்த கட்ட தலைமைப் பதவியை இடையில் வந்த அனுரா பண்டாரநாயக்கா தட்டிச் செல்லும் நிலைமை ஏற்பட்டிருப்பது அவர்களை சீற்றமுற வைத்திருக்கின்றது.


வெற்றியின் சின்னம் நானேதான்!

தனது தம்பி அனுராவுக்கு அடுத்த தலைமைப் பதவி கிடைப்பதை உறுதிப்படுத்தும் முன்னேற்பாடாக, கட்சிக்குள் இருக்கும் மூத்த தலைவர்களை ஜனாதிபதி குமாரதுங்க ஓரங்கட்ட ஆரம்பித்துவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

"65 வயதுக்கு மேல் யாரும் அரசியலில் இருக்கக்கூடாது. நான் கூட 65 வயதில் அரசியலை விட்டு வெளியேறி விடுவேன்" - என்று ஜனாதிபதி குமாரதுங்க விடுத்த அறிவிப்பு, வயது மூத்த தலைவர்களை கட்சிப்பணியில் இருந்தும் பதவிகளில் இருந்தும் அகற்றி, அனுரா பண்டாரநாயக்கா அந்தப் பதவிகளைப் பிடிப்பதற்கு இலகுவாக வழி அமைத்துக் கொடுக்கும் முன்னேற்பாட்டின் ஓர் அம்சமே என்று கட்சிக்குள் முணுமுணுக்கப்படுகின்றதாம்.

பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா, டி.எம்.ஜயரத்ன, ரிச்சர்ட் பத்திரன ஆகியோர் 65 வயதைக் கடந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் -

"கட்சியை வழிநடத்தும்படி கேட்கப்பட்டால் அதைச் செய்யத் தயாராக இருக்கின்றேன்" - என்று அனுரா பண்டாரநாயக்கா அறிவித்திருக்கின்றார்.

"மூன்றாவது தடவை ஜனாதிபதி பதவிக்கு சந்திரிகா பண்டாரநாயக்கா போட்டியிட முடியாது. எனவே தமது இடத்துக்கு தனது தம்பியைக் கொண்டுவர அவர் முயல்கின்றார்" - என்று விமர்சகர் ஒருவர் குறிப்பிட்டார்.

# செய்மதி மூலம் யாழ். மக்களுடன் பேசும் ஜனாதிபதியின் முயற்சி பலன்தரவில்லை

கொழும்பு,நவ.12

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க யாழ்.மக்களுடன் செய்மதி மூலம் உரையாடும் நிகழ்வு தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இடம்பெறாமல் போனதாக அறிவிக்கப்படுகின்றது.

நேற்றும், நேற்றுமுன்தினமும் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்ற மக்கள் குறைநிவர்த்தி சேவையின் போது இந்த உரையாடல் நிகழ்வு இடம்பெற ஏற்பாடாகியிருந்தது.

சுமார் 15 லட்சம் ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தத்திட்டம் 'அன்ரெனா' இணைப்பு செயலிழந்ததால் தோல்வியில் முடிவடைந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியை பிறிதொரு நேரத்தில் நடத்துவதற்கு எடுக்கப்பட்ட இரண்டாவது முயற்சியும் பலனளிக்கவில்லை.

யாழ்ப்பாண மக்களுக்கு தான் உரையாற்றவிடாது தடுக்கும் விதத்தில் செய்யப்பட்ட நாசவேலை இது என்று ஜனாதிபதி சீற்றத்துடன் குறிப்பிட்டதாக 'சண்டே ரைம்ஸ்' நாளிதழ் தெரிவித்தது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலையே தேவையான கருவிகளைத் தாங்கள் பலாலிக்கு கொண்டு போய் சேர்த்த போதிலும் இணைப்பை ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை என்று ரூபவாஹினி வட்டாரங்கள் தெரிவித்தன.

## இரண்டு பொலீஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலீஸ் தரப்புத் தெரிவித்தது. தாக்குதல் ஆரம்பமான சுமார் ஒரு மணி நேரத்தில் காவல் நிலையம் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்தது. அங்கு கடமையில் இருந்த சுமார் 55இற்கும் மேற்பட்ட பொலீஸார் பின்வாங்கி அருகில் உள்ள மக்கள் குடியிருப்புக்களுக்குள் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் 3 பொலீஸார் உயிரிழந்தனர்; 10பேர் காயமடைந்தனர். காவல் நிலையத்தில் இருந்த தொலைத்தொடர்பு சாதனங்கள், ஒரு தொகை ஆயுதங்கள் என்பவற்றைப் புலிகள் கைப்பற்றிச் சென்றனர்.

ஏறாவூர் குடியிருப்பு பொலீஸ் காவலரண்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஊர்காவலர் ஒருவர் உயிரிழந்தார்; பொலீஸ் காவலரண் பொறுப்பதிகாரி காயமடைந்தார். அப்பகுதியிலிருந்து பின்னர் புலிகளின் இரு சடலங்களைத் தாங்கள் மீட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர். (ம-4)

### மக்கள் குறைநிவர்த்தி சேவையில்

# 10 ஆயிரம் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டு விட்டதாம்!

யாழ். மத்திய கல்லூரியில் நேற்றும், நேற்றுமுன்தினமும் இடம்பெற்ற மக்கள் குறைநிவர்த்தி சேவையில் பொதுமக்களால் 14 ஆயிரத்து 726 பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன. இவற்றில் 10 ஆயிரத்து 498 பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தீர்வு காணப்படாத 4 ஆயிரத்து 228 பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு பெற்றுத்தருவதாக அரசாங்க அதிகாரிகள் பிரச்சினைகளை முன்வைத்த பொதுமக்களிடம் தெரிவித்தனர்.

'முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளில் புனர்வாழ்வு, புனரமைப்பு, விதவைகள், அநாதைகள் கொடுப்பனவு (நஷ்டஈடு) ஆகியன தொடர்பாக எண்பது வீதமும் -

சேவைகள் தொடர்பாகப் பத்து வீதமும் -

ஏனையவை தொடர்பாகப் பத்து வீதமும் -

பிரச்சினைகள் மக்களால் முன்வைக்கப்பட்டதாக வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளர் வி. ரகுநாதன் தெரிவித்தார்.

(ம-4-15-173-180)

# மரண அறிவித்தல்

## முருகேசு கணபதிப்பிள்ளை

(சின்னையா அப்பா, புலோலி)

கணையத் தோட்டம், புலோலி கிழக்கு, பருத்தித்துறையைச் சேர்ந்த பிரபல அரிசி வர்த்தகர் முருகேசு கணபதிப்பிள்ளை நேற்று (11.11.2001) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 8.30 மணிக்கு இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், கமலாதேவி, சீதாதேவி (ஓய்வுபெற்ற அதிபர், சென்.தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை, பருத்தித்துறை), பார்வதிதேவி (வவுனியா), சுப்பிரமணியம் (பொறியியலாளர், சிங்கப்பூர்), காலஞ்சென்ற மயில்வாகனம், இலக்குமிதேவி (ஆசிரியை, வட. இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை), ருக்மணிதேவி (ஆசிரியை, சாவகச்சேரி மகளிர் கல்லூரி), மகேஸ்வரி (லிபேட்டி மோட்டோர்ஸ், நெல்லியடி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஓ.ஆ.கந்தசாமி (ஓய்வுபெற்ற நீதிமன்ற பதிவாளர்), சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற ஊழியர், தபால் அலுவலகம்), சதாசிவம் (வவுனியா), மணிமேகலை (சிங்கப்பூர்), பத்மநாயகி, செ.கந்தசாமி (அதிபர், கரவெட்டி ஸ்ரீ நாரதா வித்தியாலயம்), வை.ராசரத்தினம் (கிராம அலுவலர், சாவகச்சேரி நகரம்), மு.பத்மநாதன் (லிபேட்டி மோட்டோர்ஸ் - நெல்லியடி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவசண்முகமூர்த்தி, தனலட்சுமி, கமலக்கண்ணன் (பொறியியலாளர் - டுபாய்), காலசரஸ்வதி, காலஞ்சென்ற முருகவேல், கந்தவேல் (ஜேர்மனி), இரத்தினசபேசன் (பொறியியலாளர் - பாரிஸ்), அரவிந்தன் (லண்டன்), பாலகௌரி (மாணவி, வட. இந்து மகளிர் கல்லூரி), காலஞ்சென்ற முரளிதரன், சத்தியதேவி (லண்டன்), சத்தியராணி (லண்டன்), சத்தியசீலன் (லண்டன்), சுரேஷ் (சிங்கப்பூர்), சுதாகர் (சிங்கப்பூர்), சாந்திகுமார் (சிங்கப்பூர்), சுதர்சன் (சிங்கப்பூர்), தயாபரன், மதிவதனி (சிங்கப்பூர்), உஷா, மலர்விழி (தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), மதிவதனி, வளர்மதி, அன்ரன் பிரேமராஜன், குகநேசன் (மாணவன், ஹாட்லிக் கல்லூரி), குகதாஸன் (மாணவன், ஹாட்லிக் கல்லூரி), தமயந்தி, ரூபகிருஷ்ணன் (மாணவன், ஹாட்லிக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும் மணிவன்னன், தமிழ்ச்செல்வி, ரவிவண்ணன், கமலவதனி, கலைவாணி, கமலவாசன், கலைச்செல்வி, கார்த்திகேயன், அபிலக்ஷன், வைகர்த்தனன், சுசீகா, நிசோன்ந்த், நிசோந்த், யசோத், வைஷ்ணவி, பைரவி ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2001) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

ஓ.ஆ.கந்தசாமி (மருமகன்)
வை.ராசரத்தினம் (மருமகன்)
(கிராம உத்தியோகத்தர்,
சாவகச்சேரி நகரம்)

கணையம் தோட்டம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(C/19263)


தீபாவளி தினத்தன்று

உங்கள் இனிமையான பொழுதுகளை
குடும்பத்துடன் சேர்ந்து கழித்திட
யாழ்.முன்னணி இசைக் கலைஞர்களுடன்
யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்
இணைந்து வழங்கும்

(முகாமைக்கற்கைகள் வணிகபீட
மாணவர் ஒன்றிய வளர்ச்சி நிதிக்காக)

| | |
|---|---|
| இடம்:- | கைலாசபதி கலையரங்கம் |
| நாள்:- | 14.11.2001 புதன்கிழமை |
| நேரம்:- | காலை 10.00 மணி, |
| | மாலை 02.30 மணி |

விளம்பர அனுசரணை: ஸ்ரீபூட்டி சில்க்ஸ், இல. 69, நவீனசந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.

(94439)

# தமிழரின் பிரச்சினைகள் யாவை? அவற்றிற்கான தீர்வுதான் என்ன?

**நாம் தேர்ந்தெடுக்கப்பட்டால் அதைச் செய்வோம்; இதைச் செய்வோம் என அரசியல் கூட்டங்களிலும் துண்டுப் பிரசுரங்களிலும் பறைசாற்றும் எமது அரசியல்வாதிகளுக்கு ஒரு வேண்டுகோள். இன்று தமிழ் மக்களுக்குள்ள பிரச்சினைகள் யாவை? அவற்றிற்கு எவ்வாறு தீர்வு காணலாம் என்பதை மட்டும் இனங்கண்டு, அதற்காகச் செயற்பட்டாலே அது எமது இனத்துக்கு நீங்கள் செய்யும் சேவையாக அமையும். தமிழ் மக்களின் உண்மைப் பிரச்சினைகள் எவை. அவற்றிற்கு எவ்வாறு தீர்வு காணலாம் என்பதை சிறந்த சிந்தனையாளரும், எழுத்தாளருமான சுனந்த தேசப்பிரிய விளக்குகிறார். 'ராவய' வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

அடுத்த மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் ஸ்ரீலங்காவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் தேர்தலாக அமையவுள்ளது. பொதுத் தேர்தலில் வெற்றிபெறுவோரால் யுத்தத்தால் பீடிக்கப்பட்டுள்ள இந்த நாட்டில் மீண்டும் சமாதானத்தை உருவாக்கமுடியுமா? எவ்வாறு? எப்போது அதை உருவாக்க முடியும் என்பன குறித்து தீர்க்கமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். எந்தக்கட்சி ஆட்சியை அமைத்தாலும் அந்தக் கட்சிக்கு ஆரம்பத்திலிருந்தே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டிய சிக்கலை எதிர்நோக்கவேண்டி நேரிடும். சமாதானம் மற்றும் அதை எவ்வாறு கட்டியெழுப்புவது என்பன குறித்து முன்னுரிமை அளித்து, நாட்டின் எதிர்காலம் சிறந்த முறையில் அமையும் விதத்தில் ஆட்சிப்பீடம் ஏறும் அரசியல்கட்சி திட்டங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆனால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் தேர்தல் நடவடிக்கைகளில் இடம்பெறும் வன்முறைகள் மற்றும் சேறுபூசும் நடவடிக்கைகளை அவதானிக்கும் போது அரசியல் கட்சிகள் நாட்டின் எதிர்காலத்தை மறந்து - நாட்டின் மிகமுக்கிய பிரச்சினையை மறந்து - செயற்படுவது மிகவும் கவலையை அளிக்கிறது. அரசியல்வாதிகளின் திருகுதாளத்தின் அளவுக்கு, அரசியல் டப்பாங்கூத்து நிகழ்ச்சிகளை ஒளிபரப்பும் தொலைக்காட்சி நிறுவனங்களின் நிகழ்ச்சிகளை ஒருபுறம் தள்ளி வைத்துவிட்டு, சமாதானம் பற்றிய கருத்தை பொதுமக்களும் அரசியல் மேடைகளிலும் முன்வைக்கவேண்டும்.

### யுத்தத்துக்கு தீர்வு இல்லை

ஆட்சிக்கு வரும் அரசினால் சமாதானம் தொடர்பாக முன்வைக்கப்படும் எந்தவொரு திட்டமும் இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காண்பதில்லை என்பதை ஏற்று, அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்டதாக இருக்கவேண்டும். இருதரப்பாராலும் மேற்கொள்ளப்படும் முடிவற்ற யுத்த நடவடிக்கைகளின் மூலம் எந்தவொரு தரப்பும் இறுதி வெற்றியைப் பெறாத நிலையானது இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காணமுடியாது என்பதை எமக்கு எடுத்துக்காட்டுகிறது. இந்த யுத்தத்தின் விளைவுகள் மொழிகளால் விவரிக்கமுடியாத துன்பியல் நிகழ்வுகள் ஆகும். யுத்த ரீதியாக வெற்றியைக் காணமுடியாது என்பதையும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் போர் நடவடிக்கைகளால் பொதுமக்களே தாங்கொணாத் துயரத்தை அனுபவித்து வருகின்றனர் என்பதையும் இருபது வருடங்களாக நடைபெற்றுவரும் யுத்தம் எடுத்துக்காட்டுகிறது. எனவே சமாதானத்தை உருவாக்கும் யதார்த்தமான திட்டமேதும் இல்லாமல் இந்நாட்டின் சிறப்பான எதிர்காலத்தை ஒருபோதும் அரசியல் கட்சிகளினால் உருவாக்க முடியாது.

### யுத்தநிறுத்தம் தேவை

இருபது ஆண்டுகளாக இந்நாட்டை அழித்துவரும் யுத்தமானது ஆயிரக்கணக்கான உயிர்களைக் காவு கொண்டுள்ளது. பொருளாதார அழிவுகளை ஏற்படுத்தி எமது வாழ்க்கைத் தரத்தை அதலபாதாளத்துக்குத் தள்ளிவிட்டுள்ளது. யுத்தத்துக்கான செலவுகளும் யுத்தத்தின் விளைவுகளால் வழங்கவேண்டிய கொடுப்பனவுகளின் விலைகளும் மிகவும் அதிகம். முதலில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான சுமுகமான சூழ்நிலையை உருவாக்குவது அத்தியாவசியமானது. இதற்கு முதல் நடவடிக்கையாக தாக்குதல்களை நிறுத்தவேண்டும். அதாவது ஏதாவது விதத்தில் யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்படவேண்டும்.

யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்படும் காலத்தில், அந்தக் கால அவகாசத்தைப் பயன்படுத்தி போருக்கான தயார் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக அரசும் விடுதலைப் புலிகளும் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்துகின்றனர் - அச்சமடைகின்றனர். இந்த ஐயுறவுகளுக்குத் தீர்வாக இருதரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் - இருதரப்பினதும் நம்பிக்கைக்குப் பாத்திரமான - செயற்றிறன் மிக்க கண்காணிப்பு அமைப்பு ஒன்றை உருவாக்கவேண்டும் - போர்க்களத்தில் யதார்த்த நிலைமையைக் கண்டறியக்கூடிய இராணுவ அதிகாரிகளையும் உள்ளடக்கிய சர்வதேசக் கண்காணிப்புக் குழுவை ஈடுபடுத்துவதும் தீர்வு முயற்சியின் ஓர் அங்கமாகும். தாக்குதல் நிறுத்தம் அனுசரிக்கப்படும் காலகட்டத்தில் எந்தத் தரப்பினரும் தகுதியற்ற இலாபங்களைப் பெறாமல் இருப்பதை உறுதி செய்வதற்கு கண்காணிப்புக் குழுவில் உள்ள இராணுவ அதிகாரிகளின் சேவை பெருமளவில் பயன்படும்.

### வன்னிக்கான பொருளாதாரத் தடையை நீக்குதல்

வன்னிக்கு உணவுப் பொருள்கள், மருந்து வகைகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் கொண்டுசெல்வது பெருமளவில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் மக்களுக்குப் பெரும் கஷ்டங்கள் உருவாகியுள்ளன. ஏழைகள் மந்த போஷனத்தால் வாடுகின்றார்கள். நலன்புரி வசதிகள் எவையும் இல்லை அத்தியாவசிய மருந்து வகைகள் இல்லாததால் சுகப்படுத்தக்கூடிய நோய்களைக் கூட சுகப்படுத்த முடியாத நிலை உருவாகியுள்ளது. இவற்றிற்கு மேலதிகமாக கொலரா போன்ற பரவும் நோய்கள் குறித்து தினமும் அறிக்கைகள் வந்தவண்ணமுள்ளன. பாதுகாப்பான இருப்பிட வசதிகள் இல்லாத காரணத்தால் நோயாளிகளும் பொதுமக்களும் வெயில் மற்றும் மழையினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். விவசாயம் மற்றும் மீன்பிடி போன்ற பொருளாதார நடவடிக்கைகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை காரணமாக மக்களின் துன்பங்களும் தொல்லைகளும் மேலும் அதிகரித்துள்ளன. வன்னியில் பணிமனைகள் மற்றும் பொதுக் கட்டட நிர்மாணங்கள் அழிக்கப்பட்டுள்ளதால் பொதுச்சேவையை அனுபவிக்கும் உரிமையும் வன்னி மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

**தமிழில்:- கஜனி**

சமாதான முயற்சிகளின் ஆரம்பமானது வடக்கு - கிழக்கு வாழ் மக்களின் துன்பங்களைப் போக்கும் சமிக்ஞையாக அமையவேண்டும். இந்நோக்கில் அத்தியாவசியப் பொருள்களை தங்கு தடையின்றிக் கொண்டு செல்ல அனுமதிக்கப்படவேண்டும். மேலும் மக்கள் சுதந்திரமாய் போக்குவரத்துச் செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடைகள் நீக்கப்படவேண்டும். இந்தத் தடைகள் நீக்கப்பட்டால் விடுதலைப் புலிகள் உரித்தான விதத்தில் பயன்களைப் பெறுவர் எனப் பாதுகாப்புப் படையினர் அஞ்சுகின்றனர். இந்தத் தடைகளை நீக்குவதற்கு பாதுகாப்புப் படையினர் தடையாய் இருப்பர் என விடுதலைப் புலிகள் அஞ்சுகின்றனர். இருதரப்பாரினதும் நம்பிக்கைக்குப் பாத்திரமான கண்காணிப்புக் குழுவினால் இந்தத் தர்மசங்கடமான நிலையைப் போக்கமுடியும். இந்தக் கண்காணிப்புக் குழுவில் தேசிய அல்லது சர்வதேச அல்லது இரண்டும் கலந்த உறுப்பினர்கள் இருக்கலாம். குழுவின் உறுப்பினர்களுக்கு மோதல் பிரதேசங்களில் வாழும் மக்களின் மனிதாபிமானத் தேவைகள், நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முன் அனுபவங்கள் இருக்கவேண்டியது கட்டாயமாகும்.

### கட்டாய ஆள்சேர்ப்பு

யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள மற்றொரு தீய விளைவு மனித உரிமை மீறல்களாகும். பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் ஆகியவற்றின் கீழ் படைத்தரப்பினரால் நாளாந்தம் பலர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதும், காணாமற்போவதும் சாதாரண நிகழ்ச்சிகளாய் அமைந்துவிட்டன. ஆனால் இவற்றிற்குப் பொறுப்பானவர்கள் தண்டனை பெறுவது மிகவும் அரிதே. இதைவிட விடுதலைப் புலிகளுடனும் படையினருடனும் செயற்படும் ஆயுததாரிகள், படுகொலைகள் உட்பட பல்வேறு மனித உரிமை மீறல் சம்பவங்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும். இத்தகையவர்கள் யுத்தம் காரணமாக தண்டனைகளில் இருந்து தப்ப வாய்ப்பு ஏற்படுகின்றது. அமைதி நிலவும் காலத்தில் மிகவும் பாரதூரமான குற்றங்கள் எனக் கருதப்படும் சம்பவங்கள் யுத்தம் காரணமாக சாதாரண சம்பவங்கள் என நியாயப்படுத்தப்படுகின்றன. முழுச் சமுதாயமே யுத்த மயப்படுத்தப்பட்டுள்ளதால் படைகளில் இருந்து தப்பி ஓடுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பதுடன் சுடு படைக்கலன்கள் இலகுவாகக் கிடைப்பதால் குற்றச் செயல்களும் வன்முறையும் நாட்டில் அதிகரித்துள்ளது.

### மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம்

வெற்றியையோ தோல்வியையோ அடையமுடியாத தற்போதைய யுத்தமானது இனப்பிரச்சினைக்கு எந்தவொரு தீர்வினைக்காண முயலும் போது, அந்த முயற்சி விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையே இடம்பெறும் சமாதானப் பேச்சுக்களின் அடிப்படையிலேயே அமைய வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகிறது. இனப்பிரச்சினையை இந்நாட்டின் உள்விவகாரம் எனக்கூறும் அரசு, அதற்கான தீர்வினைக்காணும் விடயத்தில் தோல்வி கண்டுள்ளது என்பதையும் இரு தரப்பினரின் பரஸ்பர அவநம்பிக்கையைப் போக்குவதில் எந்தவொரு தனிநபரோ அல்லது குழுவோ தோல்வி கண்டுள்ளது என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். இரு தரப்பினருக்கும் இடையே விடயமறிந்த மத்தியஸ்தம் தேவை. இதனாலேயே நோர்வே அரசால் வழங்கப்பட்ட நல்மனதையும் பரிகாரங்களையும் நாம் எல்லோரும் ஏற்றுக்கொள்வது முக்கியமானதாகும். யுத்தத்தில் இருந்து நாம் மீள்வதற்கு உள்ள மார்க்கம் இது ஒன்றே ஆகும்.

### வடக்கு - கிழக்கு அதிகாரப் பகிர்வு

சமாதானப் பேச்சுக்களின் பயனாக உருவாகும் எந்தவொரு ஒப்பந்தமும் அதிகாரப் பகிர்வின் அடிப்படையிலேயே அமையவேண்டும். சுதந்திரத்தின் பின்னர் அனைத்து அரசுகளும் தமிழர் கோரிக்கைகளுக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலமே தீர்வு என ஏற்றுக்கொண்டுள்ளன. அரசமைப்பிற்கான 13ஆவது திருத்தம் கூட அதிகாரத்தைப் பரவலாக்குவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பலவீனமான முயற்சியாகும். வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைகொண்ட மக்கள் சமூகம் எனத் தமிழ் அரசியல் தலைமைகள் சிந்திக்கின்றன. வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களை சிறிலங்கா அரசுகள் சர்வதேச விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள, உரிமைகள் அற்ற சிறுபான்மையினராகவே தொடர்ந்து கருதி வருகின்றன. அதிகாரத்திற்கு வரும் எந்தவொரு அரசும் அந்த மக்களை அவ்வாறு தொடர்ந்து பேண முடியாது.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து விடுதலைப் புலிகள்வரை அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு "திம்புத்" தீர்மானத்திற்கு அமையவே காணப்படவேண்டும் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளனர். தென்பகுதியில் உள்ள பிரதான அரசியல் கட்சிகளைச் சேர்ந்த ஒரு சிலருக்குத் திம்புத் தீர்மானம் பிரச்சினையான விடயமாக இருக்கக்கூடும். இருப்பினும் தமிழ்மக்கள் தமக்கெனத் தனியான மொழியையும், தனியான கலாசாரத்தையும், தனியான சம்பிரதாயம் மற்றும் அடையாளத்தைக் கொண்டு வரலாற்று ரீதியான தாயகத்தில் பல நூறு ஆண்டுகள் வாழ்ந்துவரும் மக்கள் என்பதை ஏற்று, இவர்களே சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கும் இறுதியான அரசியல் தீர்வுக்கு அத்திவாரமாகவும் அமைய வேண்டும். அத்தகைய ஒரு தீர்வில் வடக்கு - கிழக்கு வாழ் முஸ்லிம்களின் தனித்துவம் பாதுகாக்கப்படவேண்டும்.

பிராந்தியங்களில் வாழும் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்க பிராந்திய அரசுகளுக்கு இடமளிக்கக் கூடாது. அரசியலமைப்பிலுள்ள அடிப்படை உரிமைகள் பற்றிய கருத்துக்களையும், மனித உரிமை ஆணைக்குழுவிற்கு வலுவூட்டவும், மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் பிராந்திய சபைகள் அமைக்கப்படவேண்டும். இனப்பிரச்சினைக்குக் காணப்படும் எந்தவொரு அரசியல் தீர்வின்போதும் வடக்கு - கிழக்கில் இடம்பெறும் ஜனநாயகச் செயற்பாடுகள் சுதந்திரமான, நீதியான தேர்தலை உறுதிப்படுத்தல், பேச்சுரிமைக்கான பாதுகாப்பு ஆகியன உள்ளடக்கப்படவேண்டும். இவற்றைவிட நாட்டின் சகல பிரதேசங்களிலும் வாழும் சிறுபான்மையினரின் உரிமைகளை உறுதிப்படுத்த குறிப்பாக அம்மக்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் கவனிக்கப்படுவதில் இருந்தும் அடக்கப்படுவதிலிருந்தும் பாதுகாப்பளிப்பதற்கு விசேட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது கட்டாயமாகும். ★

---

## தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்த "உ" பங்கீட்டு அட்டையுள்ளோருக்கு நிவாரண விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.12

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்த பொதுமக்களில் "உ" பங்கீட்டு அட்டை வைத்திருப்போருக்கு முதலாம் கட்ட நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது.

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சியில் வாழும் மக்களுக்கு நெல்லியடி நாவலர் மடம் சங்க மொத்த விற்பனை நிலையத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள விசேட நிவாரண விநியோகக் கிளையிலும் -

வலிகாமம் பகுதியில் வாழும் மக்களுக்கு உடுவில் - மானிப்பாய் வீதியில் உள்ள சாவகச்சேரி சங்க கிளைக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள விசேட நிவாரண விநியோகக் கிளையிலும் முதலாம் கட்ட நிவாரணம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

"உ" பங்கீட்டு அட்டை வைத்திருப்பவர்களில் இதுவரை முதலாம் கட்ட நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் விரைவாக நிவாரணப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளுமாறு சாவகச்சேரி ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளர் சி.தேவகுமார் தெரிவித்தார். (க-6)

## ஐ.தே.கட்சி வேட்பாளர் வீடு மீது தாக்குதல்

ஐ.தே.கட்சி வேட்பாளர் சஜித் பிரேமதாஸாவின் வெள்ளவாய இல்லம் மீது நேற்றுக்காலை 10 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

அப்பொழுது சஜித்தின் மனைவி வீட்டில் இருந்தார். துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து அவர் மயக்கமடைந்து விழுந்தார். உடனடியாக அவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம)

## பல்கலையில் இன்று நினைவுரைகள்

யாழ்ப்பாணம்,நவ.12

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அமரர் பேராசிரியர் அ.துரைராசாவினதும் முன்னாள் பதிவாளர் அமரர் வே.ந.சிவராசாவினதும் 63ஆவது பிறந்த தினத்தை நினைவுகூர்ந்து இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நினைவுரைகள் இடம்பெறவுள்ளன.

புலியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுகளுக்கு, யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமைவகிப்பார்.

முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராசாவின் நினைவுரை உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் நிகழ்த்தவுள்ளார்.

முன்னாள் பதிவாளர் வே.ந.சிவராசாவின் நினைவுரையை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் சிவை.பரமேஸ்வரன் நிகழ்த்துவார்.

அதனைத் தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாகவும் இந்த நிகழ்வுகளில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (க-6)


## மனமுவந்த பாராட்டுக்கள்

யாழ். மாவட்ட பதில் அதிபர்கள் சங்கத் தலைவரும்,
வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் முன்னாள் தலைவரும்,
சேலனை கிழக்கு மகா வித்தியாலய முன்னாள் பதில் அதிபரும்,
இந்நாளைய மெலிஞ்சிமுனை றோ.க.த.க. வித்தியாலய
பதில் அதிபருமாகவும் விளங்கும்.

திரு. V.A. சிவராசா

அவர்கள் இலங்கை அதிபர் சேவையில்
(தரம் 2: II) உள்வாங்கப்பட்டிருப்பதனை
மனமுவந்து பாராட்டுகின்றோம்

பாபு குடும்பத்தினர்,
நல்லூர்.

(94451)

## மரண அறிவித்தல்

B.M. எட்வேட்

B.Sc (Hons) S.L.P.S. I

(அதிபர், யா/ஆறைந்தா வித்தியாலயம், நல்லூர்)

இன்று (12.11.2001) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவிருந்த, இவரது மரணச்சடங்குகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் இன்று (12.11.2001) மாலை 3.30 மணிக்கு நடைபெறும் என்பதைச் சகலருக்கும் அறியத்தருகிறோம்.

39, மடம் வீதி, யாழ்ப்பாணம். (94452)

தகவல்:-
திருமதி F.எட்வேட் (மனைவி)

# தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஓரணியில் திரள்வது அவசியம்!

## முஸ்லிம் காங்கிரஸ் யாழ். வேட்பாளர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 12

'ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்பதுபோல் தமிழ் பேசும் மக்கள் பிளவுபட்டால் அது பேரினவாத சக்திகளுக்கே இலாபம். எனவே இந்த நிலையை மாற்றி அமைக்க நாம் அனைவரும் ஒன்றுபட்டு ஓரணியில் திரள வேண்டும் என்பதற்காகவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து போட்டியிடுகின்றேன்.

கொழும்பு, வெள்ளவத்தையில் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் அளித்த விருந்துபசாரத்தில் கலந்துகொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் யாழ். மாவட்ட வேட்பாளர் ஞா. ஆனந்தகுமார் தெரிவித்தார். அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:-

தமிழ் பேசும் மக்கள் கடந்த காலங்களைப் போன்று தொடர்ந்து பிளவுபட்டுப் பிரிந்து நின்றால் எமக்கான எந்த ஒரு உரிமையையும் பெற்றுவிடமுடியாது

இனப்பிரச்சினைக்கு தகுந்த தீர்வுகாணவேண்டுமெனின் நாம் ஐக்கியப்படவேண்டும். அதற்கூடாகவே பேரினவாத சக்திகளின் சதிவலையிலிருந்து விடுபட்டு நாம் தலைநிமிர்ந்து வாழமுடியும்.

கடந்த இரு தடவைகள் அதாவது 1971 இலும், 1989 இலும் இந்த நாட்டில் ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்ட ஜே. வி. பி. தென்னிலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக மிகமோசமாக இனவாத பிரசாரத்தை முன்னெடுத்துக் கொண்டு மறுபுறம் வடக்கு—கிழக்கு வாக்குகளை வேட்டையாட வேட்பாளர்களை நிறுத்தி உள்ளமை துரோகத்தனமான நடவடிக்கையாகும்.

பொ. ஐ. முன்னணியும் பயங்கரவாதியான ஜே. வி. பியும் சிங்கள மக்களை மந்தைகளாக்குகிறார்கள். இந்த நாட்டின் அமைதிக்காக வெளிநாடுகளும் வெளிநாட்டு தூதரகங்களும் எவ்வளவுதான் பாடுபட்டாலும் அரசியல் இலாபம் கருதி, பதவிக்காக சிங்களப் பேரினவாதிகள் சிங்கள மக்களை ஏமாற்றுகிறார்கள்.

ஜே. வி. பி. பிரசாரக் கூட்டத்தில் வடக்கு — கிழக்கில் இருந்து 25 பயங்கரவாதிகள் நாடாளுமன்றம் வரவுள்ளார்கள் என பிரசாரம் செய்கிறார்கள். இதை விக்கிரமபாகு கருணரட்ண கூறுகையில் ஜே.வி.பி. பயங்கரவாதிகள் நாடாளுமன்றம் செல்ல முடியும் என்றால் ஏன் வடக்கு — கிழக்கில் பயங்கரவாதிகள் எனக் கூறப்படும் தமிழ் பேசும் மக்கள் நாடாளுமன்றம் செல்ல முடியாது.

இன்றைய அரசியலமைப்பின்படி வடக்கு — கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவான மக்கள் விடுதலை முன்னணி தேர்தல் களத்தில் குதித்தால் 34 பிரதிநிதிகள் நாடாளுமன்றம் செல்ல முடியும். அப்போது இந்த 34 பிரதிநிதிகளின் ஆதரவும் இல்லாது எந்த ஒரு அரசியல் கட்சியும் ஆட்சி அமைக்க முடியாது.

ஆகவே தமிழ் பேசும் மக்களாகிய நாம் ஒன்றுபட்டு எமது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு உறுதுணையாக நிற்போம்.

— என்று அவர் மேலும் சொன்னார். (ம)

# குண்டைக் கத்தியால் வெட்டிய தந்தை, மகள் உடல் சிதறிப் பலி

## கிராந்துறு கோட்டேயில் சம்பவம்

கொழும்பு, நவ 12

வயலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மர்மப் பொருள் ஒன்றை எடுத்து வந்து வீட்டில் வைத்து வெட்டினார் விவசாயி ஒருவர். அப்போது அந்த மர்மப்பொருள்(குண்டு) பயங்கரச் சத்தத்துடன் வெடித்துச் சிதறியது. இந்தச் சம்பவத்தில் குண்டை வெட்டியவரும் அவரது மகளும் அந்த இடத்திலேயே உடல்கள் சிதறிப் பலியானார்கள். அருகில் நின்ற தாயும் மகனும் காயமடைந்தனர்.

இந்தப் பரிதாபச் சம்பவம் கடந்த சனிக்கிழமை மகாவலி வலயத்தில் கிராந்துறு கோட்டே என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது.

வயல் வேலைக்குச் சென்ற 41 வயதான யாபா விமலசேன என்பவர் வயலை உழும் போது ஒரு பொருள் கிடக்கவே அதனைக் குண்டு எனத் தெரியாது எடுத்து வந்து வீட்டுக்குமுன் வைத்து வெட்டுக் கத்தியால் வெட்டித் திறக்க முயன்றபோதே அது வெடித்துள்ளது. இராணுவத்தினருக்கு வழங்கப்படும் அதிசக்தி வாய்ந்த இந்தக் குண்டு வெடித்ததில் உடல் சிதற விமலசேன தூக்கி எறியப்பட்டதுடன் அருகில் நின்ற 11 வயதான சுஜாதா பிரியதர்ஷினி என்ற மகளும் உடல் இரண்டாகப் பிளந்த நிலையில் மரணமடைந்தார்.

அந்த நேரத்தில் காட்டில் விறகு வெட்டிக்கொண்டு சுமையுடன் அங்கு வந்த மனைவியும் 6 வயதான மகனும் சம்பவத்தை நேரில் கண்டுள்ளதுடன் சிறுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர். காயமடைந்த இவர்கள் கிராந்துறு கோட்டே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க)

# புலிகளுடன் ஐ. தே. கட்சிக்கு எந்த வித உடன்பாடுமில்லை

## மகாநாயக்கர்களுக்கு ரணில் கடிதம்

கொழும்பு, நவ. 12

ஐக்கிய தேசியக் கட்சி விடுதலைப் புலிகளுடன் எந்தவிதமான உடன்படிக்கைகளையும் செய்துகொள்ளவில்லை என உறுதியளித்து ஐ. தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் கண்டி அஸ்கிரிய மற்றும் மல்வத்தை பீடாதிபதிகளுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து இன நெருக்கடிக்குத் தீர்வு காண விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டியது அவசியமாகவுள்ளது.

தேசத்தைத் துண்டாடாமல் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்குப் பெரும்பான்மை மக்களின் ஆதரவுடன் தீர்வைப் பெற்றுக் கொடுக்க நான் உறுதி பூண்டுள்ளேன்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு உங்கள் இருவருடனும், ஏனைய பௌத்த, இந்து, கத்தோலிக்க, இஸ்லாமிய மத தலைவர்களுடனும் பேச்சுக்கள் நடத்தப்படும்.

இன நெருக்கடிக்கு தீர்வு காணும் விடயத்தில் ஒரு சுமுகமான சூழலை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கத்திலேயே தமிழ், முஸ்லிம் சிறுபான்மைக் கட்சிகளை அரவணைத்துக் கொண்டு ஐ. தே. கட்சி தேர்தலுக்கு முகம் கொடுக்கின்றது.

தீர்வுக்கான முயற்சிகள், பேச்சுக்கள் தொடர்பான விடயங்கள் என்பன குறித்து எந்த விதமான இரகசியமும் பேணாமல், சகல விடயங்களையும் மகா சங்கத்தினருக்கும் நாட்டு மக்களுக்கும் அறிவித்தருவேன் என்பதை தங்களிருவரிடமும் உறுதி கூறுகின்றேன்.

இன்றைய அரசியல் நெருக்கடியிலிருந்து முதலில் நாம் விடுபடவேண்டியுள்ளது. சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவுடன் இதில் வெற்றி கண்டு சகல கட்சிகளையும் அரவணைத்து அமைக்கப்படும் அரசாங்கத்தின் மூலம் குறுகிய காலத்துக்குள் சகல தரப்பினருடனும் பேச்சுக்களை ஆரம்பிப்பேன்'

எனது இந்த முயற்சிக்கு சகல தரப்பினரதும் ஒத்துழைப்பும் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

ஜனாதிபதியும் பொ. ஐ. முன்னணியினரும் எனக்குக் களங்கம் கற்பிக்கும் நோக்கில் புலிகளுடன் கூட்டுச்சேர்ந்து இருப்பதாகத் திரும்பத் திரும்ப சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரம் செய்கின்றனர்.

நான் கௌரவமாக மதிக்கும் பௌத்த உயர்பீடங்களின் மகாநாயக்கர்களான உங்கள் இருவரிடமும் உறுதி அளிக்கின்றேன்; புலிகளுக்கும் எனக்குமிடையில் எத்தகைய உடன்படிக்கையோ கூட்டு ஒப்பந்தமோ செய்து கொள்ளப்படவில்லை.

பெரும்பான்மை இனமான நாங்கள் சிறுபான்மைத் தமிழ் முஸ்லிம் மக்களைத் தொடர்ந்தும் அடிமைப்படுத்த நினைத்தால் அந்தச் சாபம் எம்மைச் சதாகாலமும் சுற்றிக் கொண்டே இருக்கும் என்று பௌத்தனான நான் உணர்கிறேன்.

எனவே எனது இந்த முயற்சிக்கு தங்களதும் பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதத் தலைவர்களதும ஆசியும் அருளும் கிட்டும் என எதிர்பார்க்கின்றேன். (ம-4)

# இறந்த அதிபர், ஆசிரியர்களை நினைவுகூரும் வைபவங்கள்

## பாடசாலைகளில் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கடமையாற்றி மரணமான அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்பான நினைவுரை ஒன்று சகல பாடசாலைகளிலும் நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பான தீர்மானம் ஒன்றை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ். மாவட்டப் பிரிவு எடுத்துள்ளது.

கடமையின் போதாயினும் அல்லது இளைப்பாறிய பின்னராயினும் மரணமடைந்த அதிபர் மற்றும் ஆசிரியர்களை நினைவு கூருவது, அவர்களின் சேவையை கௌரவிப்பது மற்றும் இன்றைய மாணவர் சமுதாயத்திற்கு அவர்களை அறிய வைப்பது போன்றனவே இதன் நோக்கம் என்று சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட இத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்த சகல பாடசாலை அதிபர்களின் ஒத்துழைப்பைக் கோருவதெனவும் சங்கம் முடிவு செய்துள்ளது.

இவ்வருடம் பாடசாலை விடுமுறைக்கு முன்னதாக ஒரு நாள் தெரிவு செய்யப்பட்டு இந்நினைவுப் பேருரையை நடத்தலாம் என்று சங்கத்தின் மாவட்டச் செயலாளர் க. குமாரசாமி தெரிவித்தார். (ஐ-9)

# உடல் வலுவூட்டல் பயிற்சி நிலையம்

வலி. வடக்கு, நவ. 12

வடக்கு—கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை அமைச்சினால் வலி. வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் உடல் வலுவூட்டல் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

உடுவில், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட விளையாட்டு வீர, வீராங்கனைகள் மற்றும் ஆர்வலர்களும் தமது பகுதி விளையாட்டு உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொண்டு இந்த நிலையத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தில் யாழ். மாவட்ட தலைமைச் செயலக விளையாட்டு உத்தியோகத்தர் செ. இரமணன் மூலம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் அதிகாலை நேரத்தில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. (ம-86)

## வடக்கு - கிழக்கு மாகாண அரச ஊழியர்

# பண்டிகை முற்பணத்தை இடை நிறுத்தப் பணிப்பு!

வலி. வடக்கு, நவ. 12

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கீழ் கடமையாற்றும் ஊழியர்களுக்குப் பண்டிகை முற்பணம் மற்றும் இரண்டுவருட கடன் சலுகை அடிப்படையிலான இடர்காலக் கடன் முதலியவற்றை வழங்கவேண்டாம் என வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பொது நிர்வாக உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

மத்திய அரசினால் இத்தகைய கடன்கள் வழங்குவதற்கு வேண்டிய நிதி ஒதுக்கீடுசெய்யப்படாததனால் இத்தகைய கடன்களை வழங்க வேண்டாமெனச் செயலகங்கள் மற்றும் அரச, உள்ளூராட்சித திணைக்களங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன.

இந்தச் சுற்றறிக்கையின் மூலம் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கீழ் கடமையாற்றும் பல ஆயிரக் கணக்கான அரச ஊழியர்கள் தமது அடிப்படைச் சலுகையை இழந்துள்ளனர் என அரசஉத்தியோகத்தர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ம-86)

## வடக்கு புனர்வாழ்வு அமைச்சு ஏற்பாட்டில்

# ஒரு லட்சம் மாணவர்களுக்கு திடீர் விபத்துக் காப்புறுதி வசதி

## பத்திரங்கள் நேற்று வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ். மத்திய கல்லூரியில் கடந்த இரு தினங்களாக இடம்பெற்ற மக்கள் குறை நிவர்த்தி சேவையில் வைத்து நேற்று 449 பாடசாலைகளைச் சேர்ந்த ஒரு லட்சத்து 54 ஆயிரத்து 458 மாணவர்களுக்கு திடீர் விபத்துக் காப்புறுதியை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வழங்கியுள்ளது.

இந்தக் காப்புறுதித் திட்டத்துக்காக வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புரைமைப்பு அமைச்சு ஒவ்வொரு மாணவருக்கும் 12 ரூபா வீதம் 18 லட்சத்து 53 ஆயிரத்து 500 ரூபாவை ஒதுக்கீடு செய்து காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கியுள்ளது.

ஒரு வருட ஆயுளைக் கொண்ட இந்த திடீர் விபத்துக் காப்புறுதித் திட்டத்தின் கீழ், ஒரு பாடசாலை மாணவன் மூன்று தினங்களுக்கு மேல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற நேர்ந்தால் அல்லது மாணவர்கள் விபத்துக்களில் சிக்கி காயமடைந்தால் அவர்களுக்கு — உதவிகள் வழங்கப்படும் என்று இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## சமய சந்நிதி

கேதார கௌரி விரத பூர்த்தி நாளாகிய எதிர்வரும் புதன்கிழமை காலை 9.00 மணிக்கு புங்குடுதீவு கண்ணகி அம்மன் ஆலயத்தில் அஷ்டோத்தர சதசங்காபிஷேகம் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து அடியார்களுக்கு கௌரி நோன்பு நூலும் வழங்கப்படும் என ஆலய பரிபாலன சபை தெரிவித்தது. (ம-15)

## தேடுதல்

ஏறாவூர், நவ. 12

ஏறாவூர், ஆறுமுகத்தான் குடியிருப்பு பிரதேசத்தில் பொலிஸாருடன், கொம்மாத்துறை, செங்கலடி இராணுவத்தினரும் இணைந்து சுற்றிவளைப்புத் தேடுதலில் ஈடுபட்டனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது வானத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்கள் சரமாரியாகத் தீர்க்கப்பட்டன.

# என்றுமில்லாத பாதுகாப்புடன் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டம்!

## 50 நாடுகளின் தலைவர்கள் நியூயோர்க்கில்

நியூயோர்க்,நவ.12

ஐக்கியநாடுகள் சபையின் 56 ஆவது பொதுச் சபைக் கூட்டம் அதன் வரலாற்றில் முனனெப்போதும இருந்திராத பாதுகாப்பு ஏற்பாடு களுக்கு மத்தியில் நியூயோர்க்கில் ஆரம்பமாகி உள்ளது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கூட்டத்தொடர் ஒருவாரம் நீடிக்கும். ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனான் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றி னார்.

அமெரிக்க இலக்குகள் மீது மேலும் தாக்குதல்கள் நடத்தப்படும் என்று 'அல்கெய்டா' அமைப்பு எச்ச ரிக்கை விடுத்திருப்பதாலும்-


இஸ்லாமியர்களுக்கு எதிரான ஒரு கருவியே ஐ.நா.சபை என்றும் அதன் செயலாளர் நாயகம் ஒரு 'குற்றவாளி' என்றும் ஒஸாமா பின் லேடன் அண்மையில் கூறியிருப்பதை அடுத்தும் -

நியூயோர்க்கில் ஐ.நா.பொதுச் சபைக் கூட்டத்துக்குப் பிரமாண்ட மான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன.

50க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்களும், நூறுக்கு மேற்பட்ட அமைச்சர்களும் இந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்காக நியூயோர்க் வந் துள்ளனர்.

செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெ ரிக்க நகரங்கள் மீது நடத்தப்பட்ட பேரழிவுத் தாக்குதலின் பின்னர் அமெரிக்காவில் இடம்பெறும் மிக முக்கியமான உலக மாநாடு இது வாகும்.

ஐ.நாவின் 56ஆவது பொதுச் சபைக் கூட்டம் கடந்த செப்ரெம் பரில் நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால் அமெரிக்கா மீதான தாக்கு தலால் அது ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)




உருது மொழி பத்திரிகை ஒன்றின் ஆசிரியருக்கு ஒஸாமா பின்லேடன் வழங்கிய பரபரப்பான பேட்டியை பாகிஸ்தான் பத்திரிகைகள் வெளியிட்டிருக்கின்றன. ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் அவரது பேட்டி முன்பக்கத் தலைப்புச் செய்தியாக இடம்பெற்றிருப்பதைப் படத்தில் காணலாம்.

# எதிரணிப் படைகள் தாமாகவே காபூலுக்குள் நுழையக்கூடாது!

## ஐ.நா. சபையில் அதிபர் புஷ் எச்சரிக்கை

நியூயோர்க்,நவ.12

மஷார் - ஏ - ஷெரீப் நகரைக் கைப்பற்றி மேலும் தெற்கு நோக்கி முன்னேறிவரும் வடக்குக் கூட்டணிப படைகளின் வெற்றியைப் புகழ்ந்திருக கும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ், ஆனால் அந்தப் படைகள் தாமாகவே காபூல் நகரத்துக்குள் நுழையக் கூடாது என்று எச்சரித்திருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் சபையின் செய தியாளர் மாநாட்டில் உரையாற்றிய புஷ் இந்த எச்சரிக்கையை விடுத் துள்ளார்.

"தெற்கு நோக்கி மேலும் முன் னேற எமது நண்பர்களை நாங்கள் உற்சாகப்படுத்துவோம். ஆனால் அவர்கள் தாமாக காபூலுக்குள் நுழை யக்கூடாது. அவ்வாறு செய்தால் அது எதிர்காலத்தில் அங்கு இடைக்கால அரசு ஒன்றை அமைக்கும் முயற் சிகளுக்கு ஆபத்தாகிவிடும்" - என்று புஷ் தெரிவித்தார்.

இதேவேளை -

தங்கள் படைகள் காபூல் நகரை நோக்கி மேலும் முன்னேறி வருவதாக வடக்குக் கூட்டணிப்படைகள் கூறுகின கின்றன.

வடக்கு ஆப்கானிஸ்தானில் மேலும் மூன்று மாகாணங்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதாகவும் கூட்டணிப் படை கூறுகிறது. (ஐ)



காபூல் நகரை நோக்கியவாறு வடக்குக் கூட்டணிப் படைகளின் பீரங்கி.

# சயனைட் நச்சு வாயு 'அல்கெய்டா' தயாரிப்பு?

வாஷிங்ரன்,நவ.12

ஆப்கானிஸ்தானில் ஒஸாமா பின் லேடனும் 'அல்கெய்டா' அமைப்பின ரும் கொடிய இரசாயன ஆயுதங்க ளைத் தயாரித்துவந்த இரு இடங் களைத் தாங்கள் கண்டறிந்துள்ள தாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஜலலாபாத் அருகே ஒரு சிறிய கிராமத்தில் இரசாயன ஆயுத ஆய்வு கூடத்தில் 'அல்கெய்டா' அமைப்பு சயனைட் வாயுவை உற்பத்தி செய் திருக்கக்கூடும் என்று 'நியூயோர்க் ரைம்ஸ்' தெரிவித்துள்ளது.

ஆனால் இந்த இடங்கள் மீது அமெரிக்க விமானங்கள் இதுவரை குண்டுவீச்சு நடத்தவில்லை. இதற் கான காரணத்தை வெள்ளை மாளி கையோ, பாதுகாப்பு அமைச்சோ இதுவரை தெரிவிக்கவில்லை. ஆனா லும் இரசாயன ஆயுதங்களை உரு வாக்குவதில் 'அல்கெய்டா' அமைப் பினர் வெற்றி கண்டிருப்பதாக அமெ ரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

# அமெரிக்கா மீதான தாக்குதல்; பொறுப்பேற்கிறார் பின்லேடன்?

வாஷிங்ரன்,நவ.12

செப்ரெம்பர் 11இல் அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு உரிமை கோரும் வீடியோ ஒளிநாடா ஒன்றை ஒஸாமா பின்லேடன் தனது நெருங்கிய சகாக்களுக்கு விநியோ கித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தானும் தனது அல்கெய்டா இயக் கமுமே அமெரிக்கா மீதான தாக்குத லுக்குப் பொறுப்பு என்று ஒஸாமா பின் லேடன் கூறியுள்ள வீடியோ நாடா தனவசம் இருப்பதாக பிரிட்டனின் 'டெய்லி ரெலிகிராப்' பத்திரிகை தெரி வித்துள்ளது.

பின்லேடனுக்கு எதிரான புதிய சாட்சியங்களில் இந்த ஒளிநாடா பெரும் பங்கை வகிக்கும் என்று கூறப் படுகிறது.

இதேவேளை -

பிரான்ஸில் ஸ்ராஸ்போ நகரில் தேவாலயம் ஒன்றைத் தாக்குவதற் குத் தயாராகிக் கொண்டிருந்த அல் ஜீரிய நாட்டைச் சேர்ந்த ஐவரை அந் நாட்டு பொலிஸார் கைது செய்துள்ள னர். (ஐ)



நியூயோர்க்கில் செய்தியாளர் மாநாட்டில் அமெரிக்க அதிபரும் இந்தியப் பிரதமரும்.

### மஷார் - ஏ - ஷெரீப் நகரில்

# பெண்கள் இனிப் படிக்கலாம் தொழிலுக்குச் செல்லலாம்!

## வடக்கு கூட்டணித் தளபதி அறிவிப்பு

மஷார்-ஏ-ஷெரீப்,நவ.12

கடந்த வெள்ளியன்று மாலை வடக்குக் கூட்டணிப் படைகளின் கட்டுப் பாட்டின் கீழ்வந்த மஷார்-ஏ-ஷெரீப் நகரில் மயான அமைதி நிலவுவதாக செய்திகள் தெரிவித்தன.

ஒளிந்திருக்கும் தலிபான்களைக் கண்டுபிடிப்பதற்காக கூட்டணிப் படை கள் நகரில் ரோந்து சுற்றி வருவதாக வடக்குக் கூட்டணிப் படைகளின் தள பதி தெரிவித்தார்.

நகரில் சில கடைகள் திறந்தி ருக்கின்றன. நகரம் கூட்டணிப் படை கள் வசம் கைமாறியபோது பெரும ளவு இரத்தம் சிந்தப்பட்டதற்கான அடையாளம் எதுவும் தெரியவில்லை.


தலிபான்களால் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் அகன்றுவிட்டதால் பெண்கள் பலரும் பர்தா அணியாம லேயே வீதிகளுக்கு வந்து நடமாடு வதாக நகரவாசிகள் தெரிவித்தனர்.

தங்களின் நீண்ட தாடிகளைச் சவரம் செய்து கொள்வதற்காக இளை ஞர்கள் பலரும் சலூன்களை நாடி யுள்ளனர்.

மஷார் - ஏ - ஷெரப் நகரத்துப் பெண்கள் இனி வேலைக்குச் செல் லாம். கல்வி கற்கலாம் என்று வடக் குக் கூட்டணி படைகளின் தளபதி அப் தூல் ரஷீட் தோஸ்தாம் செய்மதி தொலைபேசி மூலம் செய்தியாளர் களிடம் தெரிவித்தார். (ஐ)

# அல்கெய்டாவுக்கு அணுஆயுதங்கள் எந்த வழியூடாகக் கிடைத்தன?

## பாகிஸ்தான், ரஷ்ய அதிபர்களுக்கு சங்கடமான நிலை



நியூயோர்க்,நவ.12

அச்சுறுத்தக்கூடிய அளவில் அணு ஆயுதங்கள் தம்வசம் இருப் பதாக ஒஸாமா பின்லேடன் தக வல் வெளியிட்டிருப்பது பாகிஸ் தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் புக்கும், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுக்கும் தர்மசங்கடமான ஒரு நிலையை ஏற்படுத்தி இருப்பதாகச் செய்தி நிறுவனங்கள் தெரிவித் தன.


பாகிஸ்தானின் பிரபல உருது மொழி நாளேடு ஒன் றின் ஆசிரியருக்கு காபூல் அருகே மறைவிடம் ஒன்றில் வைத்துப் பேட்டியளித்த ஒஸாமா பின்லேடன், அமெரிக்கா அணு மற்றும் உயிரியல் ஆயுதங்களைப் பயன்படுத்தி எங்களைத் தாக்கினால் தாமும் அதே ஆயுதங்களால் திருப்பித்தாக்க நேரிடும் என்று எச்சரித்திருப்பது தெரிந் ததே.

பின்லேடனின் அல்கெய்டா அமைப்பிடம் அணு ஆயு தங்கள் இருப்பதை இந்தப் பேட்டி மூலம் பின்லேடன் உறுதிப்படுத்தியிருப்பதை அடுத்து அணு ஆயுதங்கள் அந்த அமைப்புக்கு எவர்மூலம், எந்த வழியில் கிடைத்தி ருக்கும் என்ற கேள்வி உலக நாடுகளில் எழுந்துள்ளது.

முன்னாள் சோவியத் யூனியன் நாடுகள்மூலம் அல்லது அண்டை நாடான பாகிஸ்தான் மூலமே அணு ஆயுத தொழில்நுட்பம் 'அல்கெய்டா' அமைப்பினருக்குக் கிடைத்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

அமெரிக்காவில் ஐ.நா. கூட்டத் தில் கலந்துகொண்டிருக்கும் அதி பர் முஷாரப் இது குறித்து கருத்து வெளியிட்டிருக்கிறார்.

அணு ஆயுதங்களைத் தயாரிக் கும் வல்லமையோ, அவற்றைப் பேணிப் பாதுகாக்கும் வசதிகளோ அல்கெய்டா அமைப்பின் தலைமை யிடம் இருப்பதாகத் தான் நம்ப வில்லை - என்று முஷாரப் செய்தி யாளர்களிடம் தெரிவித்தார்.



அணு ஆயுதங்களைத் தயாரிக்கவும், அவற்றைப் பேணிப் பாதுகாக்கவும், விநியோகிக்கவும் அதி நவீன தொழில்நுட்பம் அவசியம் என்றும் முஷாரப் அங்கு தெரிவித்தார்.

அணு ஆயுதங்கள் வைத்திருப்பதாகப் பின்லேடன் விடுத்திருக்கும் அச்சுறுத்தல் 'அலட்சியம் செய்யப்பட முடியாதது' என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை -

அடுத்தவாரம் அமெரிக்க அதிபருடன் புடின் சந்திப்பு ஒன்றை நடத்தவுள்ளார்.

மிகப்பெரிய அழிவுகளை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங் கள் ரஷ்யா மூலமோ அன்றி முன்னாள் சோவியத் ஒன்றியம் ஊடாகவோ பின்லேடனுக்குக் கிடைத்திருக்க மாட்டா என்று தாம் திடமாக நம்புவதாகப் புடின் தெரிவித் திருக்கிறார். (ஐ)

### ரமழானிலும் தாக்குதலைத் தொடர

# வரலாற்று ஆதாரங்களை தேடுகின்றது அமெரிக்கா!

வாஷிங்ரன்,நவ.12

ஆப்கானிஸ்தான்மீது நடத்தப்பட்டு வரும் குண்டுத்தாக்குதல்களை எதிர் வரும் ரமழான் மாதத்திலும் தொடர்ந்து மேற்கொள்வதை நியாயப்படுத்துவதற் காக வரலாற்று ஆதாரங்களைத் தேடும் முயற்சியில் அமெரிக்கா ஈடு பட்டிருக்கிறது.

'ரமழான் மாதத்தில் எதிரி ஓய் வெடுக்கப்போவதில்லை. அதே போன்று அமெரிக்காவும் ஓய்வெடுக்கப் போவதில்லை' என்று அமெரிக்க அரச அறிக்கை ஒன்று தெரிவித்தது.

சோவியத் யூனியனின் ஆக்கிரமிப் புக்கு எதிராக முஜாஹுதீன்கள் ரம ழான் மாதத்திலும் போரிட்டனர். முஹ மது நபி கூட 'படர்' (Badar) என அழைக கப்படும் யுத்தத்தில் ரமழான் மாதத் திலேயே வெற்றியீட்டினார். மெக் காவை மீளக் கைப்பற்றும் நடவடிக் கையை அவர் ரமழான் மாதத்தி லேயே மேற்கொண்டதாகவும் சுட் டிக்காட்டியிருக்கும் அமெரிக்கா, உயிர்வாழ்வதற்கான போரில் ஈடுபட் டிருக்கும் அமெரிக்கர்கள் ரமழானை உதாசீனம் செய்யவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

முஸ்லிம்கள் மீதான தாக்குத லுக்கு வரலாற்றை உதாரணம் காட்டி அமெரிக்கா இறுதியில் பேரழிவையே சந்திக்கும் என்று தலிபானின் பேச் சாளர் அமீர்ஹான் முட்டகி எச்சரித் திருக்கிறார். (ஐ)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இந்தியத் தயாரிப்பு நீள கோன்கள் 18", 22", 24" யூனிற்கள், 40w FM மைக்குகள், ஆலய பாவனைக்கு உகந்த பட்டுக் குடைகள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ம.மயூரன், மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு,கொக்குவில். (94432)

PRIMA SAMEERA இன புறோயிலர் குஞ்சுகள் இன்று மாலை பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: வைசிவகுமார், 461, நாவலர் வீதி, ஆனைப்பந்தி. ரஞ்சிதன், மாலிசந்தி, அல்வாய். (94434)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறோயிலர், கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். லைப்பேட்ஸ் கூட்டுடன் விற்பனைக்கு உண்டு. 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (கண்ணா வீடியோ சென்றர் வளவு) (94411)

### இலக்கியக் கட்டுரைகள்

வானொலியில் "புதிய அடிமைகள்" நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள்: 1.நாடகம் எழுதுவது எப்படி?, 2.யாழ்ப்பாணமா? கொழும்பா? 3.யாழ்ப்பாணம், 4.இலக்கியக் கட்டுரைகள், 5.ஒரு காதலின் கதை. (94433)

### தவறிவிட்டது

பொன்னம்பலம் சண்முகலிங்கம் இல. 36/1, அடியபாதம் வீதி, நல்லூரில் வசிப்பவரின் தேசிய அ.அட்டை (இல.420150946V) கல்வியங்காட்டுச் சந்திக்கும்; யாழ்நகருக்கும் இடையில் பஸ்ஸில் வரும்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய விலாசத்தில் ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். (94436)

### கார்ட்டூன் விளக்கம்

ஐ.தே. கட்சியின் சின்னமான யானையை இந்தக் கார்ட்டூனில் வரைந்திருக்கின்றார் ஓவியர். ஐ.தே. கட்சிக்கு முண்டுகொடுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சின்னமான மரம் யானையின் முன் கால்கள். பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிலிருந்து பிரிந்து சென்ற எஸ்.பி. திஸநாயக்கா - ஜீ.எல். பீரிஸ் குழுவின் ஆதரவு ஐ.தே. கட்சிக்கு இருப்பதால் பொ.ஐ. முன்னணியின் சின்னமான கதிரையின் இரண்டு கால்கள் யானையைத் தாங்கும் அதன் கால்களாக மாறிவிட்டன. தமிழர் கூட்டமைப்பின் ஆதரவு ஐ.தே. கட்சிக்கு இருப்பதாகக் கருதும் ஓவியர் புலி வாலை, யானையின் வாலாக்கி அதை உறுதிப்படுத்த முனைகின்றார்.

**DISSERTATION BINDING**

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கமைய கட்டிக் கொடுக்கப்படும்.
(இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/=)
தொடர்பு: பாரதி பதிப்பகம் 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல.3081 (C/19212)

**பரீட்சை வினாத்தாள்கள் விற்பனையாகின்றன..!**

சகல பாடங்களுக்குமான
O/L - 2001
மாதிரி வினாத்தாள்
ரூபா: 45.00 மட்டும்
தரம் 4 முதல் 10 வரை
ஆண்டிறுதிப்பரீட்சை சகல பாட வினாத்தாள்களும் பெறலாம்.
கிடைக்குமிடம்:-
யாழ். பூபாலசிங்கம் புத்தகசாலை,
நல்லூர் சயன்ஸ் அக்கடமி.,
(94441)

# நுளம்புவலைகளுக்கு மருந்து தோய்த்தல்

கோப்பாய் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பிரிவில் வழங்கப்பட்ட நுளம்புவலைகளுக்கு 'பேமத்திரின்' தோய்த்துக் கொடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பிரிவில் நுளம்புவலைகளைப் பெற்றவர்கள் உரியவர்களுடன் தொடர்புகொண்டு மருந்தைத் தோய்த்துக்கொள்ளுமாறு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (க-180)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை திருமதி பிரான்சிஸ்கா எட்வேட் அவர்களின்
அன்புக் கணவர்

**B.M.எட்வேட்**

(அதிபர், யா/ஆனந்தா வித்தியாலயம், நல்லூர்)

அவர்களது திடீர் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.
யா/சென்.ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை.
(94442)

## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 - 07 - 1959



மறைவு 19 - 10 - 1987

**அமரர் துரைஐயா பாலச்சந்திரன்**
(கமலா ஸ்ரோர்ஸ்)
திதி. 12.11.2001

குடும்பத்தின் ஒளி விளக்காய்
ஊருக்கு உத்தமனாய்
விண்ணுலகை நீயடைந்து
பதினான்கு ஆண்டுகள் சென்றதின்று
துயரென்னும் சாகரத்தில்
துவழ்கின்ற எங்களுக்கு - உன்
நினைவுகளே ஒளியாகும்!

- குடும்பத்தினர்.

'சந்திரபவனம்'
சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

கமலா ஸ்ரோர்ஸ்,
நவாலிவீதி,
ஆனைக்கோட்டை.

(94443)

## 68 ஆவது பிறந்ததின நினைவுரைகள்

**பேராசிரியர் அ.துரைராசா, பதிவாளர் வே.ந.சிவராசா** ஆகியோரது பிறந்ததின நினைவுரைகள் இன்று (12.11.2001) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் பேராசிரியர் **பொன்.பாலசுந்தரம்பிள்ளை** அவர்களது தலைமையில் ஆரம்பமாகும்.

பேராசிரியர் அ.துரைராசா நினைவுரை நிகழ்த்துபவர் : பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள்.
பதிவாளர் வே.ந.சிவராசா நினைவுரை நிகழ்த்துபவர் : பேராசிரியர் ச.வை.பரமேஸ்வரன் அவர்கள்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

- விழா அமைப்புக் குழு.
(94440)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



**12.11.2001**

**செல்வி அனுஸ்ஜா ஈஸ்வரன்**

கைதடியைச் சேர்ந்த ஈஸ்வரன் ~ யோகேஸ்வரி தம்பதியினரின் செல்வப் புதல்வி

**செல்வி அனுஸ்ஜா**

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (12.11.2001) திங்கட்கிழமை சுவிஸ்லாந்தில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். அனுஸ்ஜாவை அப்பா, அம்மா, அனுசாந் (அண்ணா-சுவிஸ்), அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா, லக்மன் சித்தப்பா (ஜேர்மன்), ஈஸ்வரி அத்தை (சுவிஸ்), வனிதா அத்தை மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் கைதடி வாளையம்மன் அருள்பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*கைதடி மத்தி,*
*குமர நகர், கைதடி.*

இ.சங்கரன் (அப்பப்பா)
குடும்பம்.
(94435)

# நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் - 2001

## யாழ்.மாவட்டம்

## முஸ்லிம் காங்கிரஸின் ஒரேயொரு தமிழ் வேட்பாளர்

# ஞானசுந்தரம் ஆனந்தகுமார்

விவசாயப் பெருங்குடி மக்களின் நல்வாழ்வுக்கு
என் தூரநோக்குச் சிந்தனைகள்...!

- பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கி மீள் குடியமர்வுக்கு வழிவகுப்போம்.
- கமத்தொழில் உபகரணங்கள் வழங்கி உற்பத்தியை ஊக்குவித்து உறுதியான வருமானத்துக்கு உகந்த சந்தை வாய்ப்பை ஏற்படுத்துவோம்.
- விவசாயத் துறையில் புதிய ஆய்வுகளை மேற்கொண்டு பிராந்திய ரீதியிலான விவசாய பயிற்சி நிலையங்களை அமைக்க உதவுவோம்.
- உழவு இயந்திரம், நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் விவசாய உபகரணங்களுக்கான உதிரிப் பாகங்களை மானிய அடிப்படையில் வழங்க ஏற்பாடுசெய்வோம்.
- உற்பத்திச் செலவை குறைக்க தரமான விதைகளை மானிய அடிப்படையில் வழங்குவோம்.



4

(C/19199)

உதயன்

## நூலறிவை வளர்ப்போம்!

"மாணவர்களின் கவனத்தை நெறிப படுத்தும் பெற்றோர்களும், ஆசிரியர்களும் தற்காலத்தில் அவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளை மட்டுமே இலக்கு வைத்துச் செயற்படுகின்றார்களேயொழிய, அவர்களை ஒழுக்கமுள்ளவர்களாக - குணசீலர்களாக - வளர்ப்பதில் அக்கறை செலுத்துகின்றார்கள் இல்லை."

- இவ்வாறு கவலை தெரிவித்திருக்கின்றார் ஸ்கந்தவரோதயக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு பிரதம விருந்தினர் உரை நிகழ்த்திய பேராசிரியர் க.கந்தசாமி.

தற்கால மாணவர்கள் தமது பெரும்பாலான நேரத்தை வீட்டுக்கு வெளியே செலவிடுகின்றார்கள். இதனால் உரிய கவனிப்பு, கட்டுப்பாடு இல்லாத மாணவர்கள் இலகுவில் தீய பழக்கங்களின் பிடிக்குள் சிக்கிவிடுகின்றார்கள் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

'பண்பற்ற சமுதாயம், என்றும் பலமுள்ள சமுதாயமாக இருக்கமுடியாது' என்ற அவரது கருத்தும் சிரத்தையோடு நோக்கற்பாலது.

இந்த நிகழ்வில் பேராசிரியர் வலியுறுத்திய மற்றொரு விடயம், நேற்றுமுன்தினம் யாழ்.இந்துக் கல்லூரி உயர்தர மாணவர் ஒன்றுகூடலில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட மற்றொரு கல்வியியலாளரான ஓய்வுபெற்ற அதிபர் அ.பஞ்சலிங்கத்தினாலும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

அது, தொலைக்காட்சி மற்றும் சினிமா போன்ற தொழில்நுட்ப வசதிகளுடன கூடிய சாதனங்களால் ஏற்பட்டுள்ள பாதிப்புப் பற்றியது.

வீட்டிலும், வெளியிலும் மாணவர்கள் அதிக நேரத்தைத் தொலைக்காட்சி பார்ப்பதிலும், வானொலி கேட்பதிலும் செலவிடுகின்றனர். இவற்றில் சில நல்ல அம்சங்கள் இருந்தாலும் கூட, பெரும்பாலும் இவை நமது மாணவர்களைப் பொறுத்தவரை தீயனவாகிவிடுவதை இரு கல்வியியலாளர்களும் சுட்டிக்காட்டுகின்றனர்.

நமது கல்விமுறை பரந்துபட்டுச் செல்வதாக அமைய, நமது மாணவர்களோ தமது அறிவு விருத்தியைக் குறுக்கிச் செல்பவர்களாக - பரீட்சை வினாத்தாளில் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் இயந்திரம்போல - மாறிவருகின்றனர்.

மாணவரிடையே வாசிப்புப் பழக்கம், அறிவுத்தேடல் குன்றிவருவதே இந்த நிலைமைக்கு முக்கிய காரணம். தொழில்நுட்ப விருத்தியும் அதனால் ஏற்பட்ட கட்புல சாதனங்களும் மாணவரின் வாசிப்புப் பழக்கத்தை அடியோடு அடித்துச் செல்லும் நிலையை நோக்கி நமது சமூகத்தை நகர்த்திக்கொண்டிருக்கின்றன.

கணனிகள் மூலம் - சர்வதேச வலைப் பின்னல்கள் வழியாக - உலக அறிவை வீட்டுக்குள் இருந்தபடியே தேடும் - தரிசிக்கும் - நவீன யுகத்துக்குள் மேற்கத்திய யுகம் நுழைந்து தசாப்த வருடங்கள் தாண்டிவிட்டன.

ஆனால் நாம் அதுவும் இல்லாமல், எங்களது அறிவுப் பசிக்கு விருந்தாகும் புத்தகங்களைப் பயன்படுத்தும் இந்த முறையும் இல்லாமல், இரண்டுங் கெட்டான் நிலையில் அல்லாடிக்கொண்டிருக்கின்றோம்.

'வாசிப்பதால் ஒரு மனிதன் பூரணமடைகின்றான்.' - இந்த உண்மைப்படி, சமூகத்தின் ஒவ்வொரு மனிதனும் வாசிப்புத்தேடல் ஊடாகத் தன்னையும் தனது அறிவு நிலையையும் உயர்த்திக்கொள்ள, சமுதாயம் உயர்ந்து செல்கின்றது.

முன்னைய காலங்களைப் போலல்லாது இப்போது புத்தகங்கள், நூல்கள் - நல்லவையோ, கெட்டவையோ - அளவுக்கு அதிகமாக விற்பனைக்கு வருகின்றன. பத்திரிகைகள், சஞ்சிகைகள், அறிவுக் களஞ்சியங்கள், மலர்கள் தாராளம். சிற்றிலக்கிய ஏடுகள், பொது அறிவுக்கு வழிகாட்டும் நூல்கள் ஏராளம்.

ஆனால நமது மாணவ சமுதாயமோ அவறறையெல்லாம் தொட்டுக்கூடப் பார்க்காமல், போட்டிப் பரீட்சைகளில் சித்தியடைவதை மட்டுமே நோக்கமாகக் கொண்ட இயந்திரத்தனமான கல்வி முறைக்குள் சிக்கி, தன்னையும் விருத்தி செய்யாமல், சமுதாயத்தையும் உயர்த்தாமல் சீரழிந்துகொண்டுசெல்கின்றது.

தனது இளம் பருவத்தின் பெரும் பகுதியை உயர்வகுப்புக் கல்வியிலும், பல்கலைக்கழகத்திலும் செலவிட்ட பின்னர் 'பட்டதாரி' என்ற 'லேபிளுடன்' சமூகத்துக்குள் விடப்படும் இளைஞனுக்கு உலக ஞானம், பொதுஅறிவு பூஜ்ஜயமாக இருக்கின்றது. இவன் எப்படி நாளைக்கு எமது சமூகத்தில் பொறுப்பான நிலையில் ஓர் அமைப்பை, நிறுவனத்தை வழி நடத்தப்போகின்றான்?

விளையாட்டு மைதானம், சாரணர் களம், தலைமைத்துவப் பண்பை வளர்க்கும் மேடைகள் போன்றவற்றில் கிடைக்கும் பட்டறிவும், வாசிப்புப் பழக்கம் மூலம் கிடைக்கும் நூலறிவும் இளஞ் சமூகத்திற்கு அவசியமானவை; அத்தியாவசியமானவை.

அவற்றை அவர்கள் பெற்றுக்கொள்ள ஆசிரியர்களும் பெற்றோரும் வழிகாட்ட வேண்டும்; அந்த வழியில் அவர்களைத் தூண்டவேண்டும்.

அதுவே எமது அடுத்த தலைமுறையின் நன்மைக்கும், சமூக உயர்ச்சிக்கும் வழிகாட்டும்.

## மு.காங்கிரஸ் கருத்தரங்கில் துப்பாக்கிச் சூடு!

அம்பாறை,நவ.12

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த மாளிகைக்காடு கிராமத்தில் நடந்த முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளர் அறிமுகக் கருத்தரங்கு பெரும் அல்லோலகல்லோலத்துக்குள்ளாகியது. கருத்தரங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கையில் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதே இதற்குக் காரணமாகும்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் முன்னாள் வடக்கு - கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான ஏ.என்.அப்துல் மஜீத் தலைமையில் மாளிகைக்காடு அல் - ஸபீனா வித்தியாலயத்துக்கு அருகில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

திகாமடுல்ல மாவட்ட வேட்பாளர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் கருத்தரங்கில் பேச எழுந்ததும் அப்பகுதி நோக்கி இனந்தெரியாதநபர்களால் சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இதனால் திரண்டிருந்த ஆதரவாளர்கள் சிதறி ஓடினர். மேடையிலிருந்த வேட்பாளர்களான ஹரிஸ், எஸ்.நிஜாமுடீன் ஆகியோர் பொலீஸாரின் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டனர்.

## நாட்டு நடப்பு

### தந்தையர் புலம்பல்

"வீட்டுக்கை வைத்தடித்தால்
வெளியாலை தெரியுமென்டோ
கோற்றுக்கை போத்தில் ஒன்றை
கொண்டு திரிகிறியள்?"
"வீட்டுக்கை வைத்திருக்க
வேறொள்று விளையாடிட்டு
எடுத்த அளவிற்கெல்லோ
மிளகு தண்ணி விட்டிடுது!"

*- விகடகவி.*

## யாரை வெற்றிபெறச் செய்வது?

மக்களுக்காக அதே மக்களால் நடத்தப்படும் ஆட்சியே மக்கள் ஆட்சி - ஜனநாயகம்.

மக்களாட்சியில் 'ஆளும் உரிமை' ஒவ்வொருவருக்கும் உண்டென்றாலும், அந்த ஒவ்வொருவரும் ஆட்சி செலுத்துவது நடைமுறைச் சாத்தியமற்றபடியால் -

மக்கள் ஆட்சி என்பது மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் ஆட்சியாகவே இருந்து வருகின்றது.

அரசியல் - சமூக - பொருளாதார - கல்வி - கலாசாரம் போன்றவற்றில் எத்தகைய கொள்கைகள் - செயற்பாடுகள் - நன்மை பயக்கும் என்பதில் எல்லோரிடமும் ஒரே கருத்தே - ஒத்த கருத்தே - இருக்கும் என்று எதிர்பார்க்கமுடியாது.

அபிப்பிராயச் சுதந்திரம் ஒவ்வொருவருக்கும் உண்டு. குறிப்பிட்ட ஒரு கொள்கையைத்தான் ஆதரிக்கவேண்டும்; பின்பற்றவேண்டும் என யாரும் யாருக்கும் கட்டளையிட முடியாது.

ஒத்த கருத்துடையவர்கள் தாமாகவே ஓரணியில் திரள்கின்றனர் -

அரசியற் கட்சிகள் உருவாகின்றன -

பெரும்பான்மையான மக்களின் ஆதரவைப் பெறும் கட்சி, குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்கு நாட்டின் ஆட்சியை நடத்துகின்றது.

ஆகவே -

மக்களாட்சி என்பது நடைமுறையிற் 'பெரும்பான்மை' மக்களின் ஆட்சியாகவே இருந்து வருகின்றது.

பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிப்பீடம் ஏறும் கட்சியினர் அடுத்த தேர்தலிற் தம் பெரும்பான்மைப் பலத்தை இழந்து, ஆட்சிப் பீடத்தில் இருந்து இறங்க வேண்டிய நிலை ஏற்படுவதும் -

பெரும்பான்மைப் பலம் இல்லாமை காரணமாக ஆட்சிப் பீடத்தில் அமரும் வாய்ப்பை இழக்கும் கட்சி, அடுத்த தேர்தலில் மக்களின் அமோக ஆதரவுடன் ஆட்சியைக் கைப்பற்றுவதும் -

நடக்கக்கூடிய - நடந்துவருகின்ற நிகழ்ச்சிகள்தாம்.

நம் நாட்டின் குடித்தொகையின் எழுபது விழுக்காட்டினர் சிங்கள மக்கள் -

தமிழர் உள்ளிட்ட சிறுபான்மையினர் முப்பது விழுக்காட்டினர் மட்டுமே.

ஆகவே, கொள்கை வேறுபாடு காரணமாகச் சிங்கள மக்கள் சரி பாதியாகப் பிரிந்தாலும், முப்பத்தைந்து விழுக்காட்டினராக சிறுபான்மையினரைவிட அதிக தொகையினராகவே இருப்பர்.

எனவே, ஆட்சி அமைக்கும் வாய்ப்பு என்றுமே அவர்களுக்குத்தான் உண்டு.

இவ்விடயத்தில் ஒன்றைக் கவனிக்கவேண்டும்.

அந்நியரின் ஆட்சிக் காலத்திலே - பெரும்பான்மை, சிறுபான்மை என்ற வேறுபாடின்றி எல்லா மக்களும் சமஉரிமைகளை அனுபவித்தனர்.

இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகளைக் கவனத்திற்கு எடுக்காமல் - திறமைக்கும் நேர்மைக்கும் விடாமுயற்சிக்கும் முதலிடம் கொடுக்கப்பட்ட காரணத்தினால் - சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த பலர் உயர் பதவிகளை வகித்தார்கள். அந்நியரான ஆங்கிலேயர், பெரும்பான்மையினரான சிங்கள மக்களுக்கு எதிராகவும், சிறுபான்மையினரான தமிழ் மக்களுக்கு ஆதரவாகவும் வேண்டுமென்றே நடந்துகொள்கின்றனர் என சில சந்தர்ப்பங்களில் குற்றம் சுமத்தப்படும் அளவிற்கு தமிழ் மக்கள் அரச சேவையில் அதிக அளவில் அமர்த்தப்பட்டிருந்தார்கள்.

எனினும் -

நாட்டிற்கு சுதந்திரம் வேண்டும் என்ற நியாயமான கோரிக்கை முன்வைக்கப்பட்டு - பிரசாரம் செய்யப்பட்டு - உரியவர்கள் முன்னிலையில் வலியுறுத்தப்பட்டு - தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதெல்லாம் -

சிறுபான்மையினத்தினர் - முக்கியமாக - தமிழர்கள், சிங்கள பெரும்பான்மையினரின் 'தோளொடு தோள்' நின்றனர் என்பது வரலாற்று உண்மை.

இதே காலகட்டத்தில் - இந்தியாவில் சுதந்திரப்போர் உச்சக்கட்டத்தை எட்டியிருந்த வேளையில் - இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டால் - பெரும்பான்மையினரான இந்துக்கள், சிறுபான்மையினரான முஸ்லிம்களை அழித்தொழித்துவிடுவர் என்பதை விடாப்பிடியாக எடுத்துக்கூறி -

சுதந்திரம் கொடுப்பதானால் -

இந்தியாவை இரண்டு நாடுகளாகப் பிரித்து - பிளந்து -

இந்துக்களுக்கு இந்துஸ்தானையும் முஸ்லிம்களுக்கு பாகிஸ்தானையும் வழங்கவேண்டும் என ஜனாப் ஜின்னா வலியுறுத்திவந்ததையும் -

இறுதியில் அவருடைய கோரிக்கையின்படியே 'பரந்த இந்தியா', 'அகன்ற இந்தியா' - இந்தியா, பாகிஸ்தான் என இரண்டு துண்டுகளாக்கப்பட்டுச் சுதந்திரம் வழங்கப்பட்டதென்பதையும் -

இங்குள்ள தமிழ்ச் சிறுபான்மையினர் கவனத்திற்கெடுக்கவில்லை என்பது நம் கவனத்திற்குரியது -

பெரும்பான்மைச் சிங்கள மக்களின் 'பெருந்தன்மை'யிலும், காலத்துக்குக் காலம் அந்த மக்களின் தலைவர்கள் எழுத்தாலும் பேச்சாலும் அளித்து வந்த வாக்குறுதிகளிலும் இந்தத் தமிழர்கள் வைத்திருந்த பெரும்நம்பிக்கையே இதற்குக் காரணமாகும்.

ஆனால் -

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர், சிங்களப் பெரும்பான்மையினர் நடந்துகொள்ளும் முறை இந்த நம்பிக்கையைப் படிப்படியாகச் சிதறடித்து வருகின்றது என்பதற்குச் சான்றுகள் தேவையில்லை.

தாம் மிகப் பெரிய பெரும்பான்மையினர் என்ற உணர்வு அவர்களிடம் மிக ஆழமாகப் பதிந்துவிட்டபடியால் -

தமக்குள் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றபோதிலும் ஆட்சிப் பீடத்தில் ஏறும் வாய்ப்பு, எந்நாளும் தம் 'ஆளுக்கே' இருக்கும் என்ற நம்பிக்கை இருக்கின்றபடியால் -

தாம் சொல்பவையெல்லாம் உண்மையானவை என்றும் -

தாம் விரும்புபவையெல்லாம் நியாயமானவை என்றும் -

தாம் தீர்மானிப்பவையெல்லாம் நீதியானவை என்றும் -

அவர்கள் சொல்ல முனைந்திருப்பது -


அவர்களிடமுள்ள பொது ஊடகங்கள் மூலம் நாளிலும் பொழுதிலும் பிரசாரப்படுத்தி வருவதும் -

இந்நாட்டின் சாபக்கேடு என்றே சொல்லவேண்டும்.

சிங்கள மக்கள் இலங்கையில் மட்டுமே வாழ்வதாலும் - பெரும் எண்ணிக்கையில் வாழ்வதாலும் -

இலங்கையின் ஒவ்வோர் அங்குலமும் சிங்கள மக்களுக்கு மட்டும் உரிமையானதென்பதையும் -

தமிழ் மக்கள், அருகிலுள்ள தென்னிந்தியாவில் அதிக எண்ணிக்கையில் வாழ்ந்து வருவதால் அவர்கள் அந்த நாட்டிற்கே உரியவர்கள் என்பதையும் -



இங்கு இருக்கும் தமிழர்கள் இடையில் வந்து குடியேறியபடியால், இந்த நாட்டின் எப்பகுதியையும் தமது என உரிமை கொண்டாட முடியாது என்பதையும் -

சிங்களப் பெரும்பான்மையினர் - உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உரத்துக் கூறி வருகின்றனர்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே - சிங்களவரின் முன்னோடிகளான விஜயன் குடும்பத்தினர் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே - தமிழர்கள் இங்கு வாழ்ந்தனர் என்பதை -

புராண - இதிகாச - கர்ண பரம்பரைக் கதைகளும் - வெளிநாட்டு யாத்திரிகர்கள் - பயணிகளின் குறிப்புக்களும், அகழ்வாராய்ச்சியின் பயனாகப் பெறப்பட்ட தடயங்களும், எவ்வித சந்தேகத்துக்கும் இடமின்றி நிரூபிக்கின்றபோதிலும் -

இலங்கையின் ஆதி குடிகள் என "மஹாவம்சம்" குறிப்பிடும் வேடர் என்ற சொல், சுத்தமான தமிழ்ச் சொல்லாக இருக்கின்றபோதிலும் -

இந்த உண்மையை ஏற்றுக்கொண்டு - தமிழர்களுக்கு உரிய உரிமைகளை வழங்குவதற்கு - "நாம் பெரும்பான்மையினர் - எம்மை யாரும் எதுவும் செய்துவிடமுடியாது" - என்ற மிடுக்கே தடையாக இருந்து வருகின்றது.

பெரும்பான்மையினரான நாம் "பெரிய மனது வைத்து" வழங்கும் சலுகைகளை ஏற்றுக்கொண்டு வாழ வேண்டியவர்கள் தமிழர்கள். உரிமை என்று கோருவதற்கு இந்நாட்டில் அவர்களுக்கு ஒன்றுமே இல்லை - என்ற அவர்களின் பேரினவாதச் சிந்தனையை -

காலத்துக்குக் காலம் "ஒத்துழைப்புப்" பல்லவி பாடும் தமிழர்கள், செழிப்பாக வளர்த்து வருகிறார்கள் -

இத்தகையவர்களைப் 'பெருந்தலைவர்களாக'க் காட்டுவதன்மூலம் -

தமிழர்களுள் பெரும்பான்மையினர் தனது கொள்கையை ஏற்றுக்கொள்வதாகக் காட்டிக்கொள்ளவும் -

சாத்வீக முறையினாற் சாதிக்க முடியாததைச் சண்டை மூலம் சாதிக்க முயலும் விடுதலை வீரர்களைப் பயங்கரவாதிகளாகப் 'பச்சை குத்திக்' காட்டவும் -

பேரினவாத அரசால் முடிகின்றது -

ஆகவே -

பயங்கரவாதத்துக்கு எதிராகச் சர்வதேச சமூகம் அணிதிரண்டு ஆக்ரோஷமாகப் போராடிவரும் இவ்வேளையில் -

விடுதலைப் புலிகளும் பயங்கரவாதிகள்தான் - இந்தப் பயங்கரவாதிகளை அழித்தொழிப்பதே தன் இலட்சியமென இந்த நாட்டின் ஜனாதிபதி சூளுரைத்திருக்கும் இவ்வேளையில் -

நியாயமான கோரிக்கைகளை - தேவைகளை அடைவதற்காக - அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதந் தாங்கிப் போராடும் எல்லோரையும் பயங்கரவாதிகளாகக் கொள்ள முடியாது என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல், தன் "தொனியை"ச் சற்று மாற்றிவரும் இவ்வேளையில் -

இலங்கையில் ஆயுதப்போரில் ஈடுபட்டுள்ளோர், ஓர் இனத்தின் உரிமைகளை - சட்டபூர்வமான உரிமைகளை வென்றெடுக்கவே - வேறு வழியின்றிப் போரில் ஈடுபட்டிருக்கின்றனர் என்பதை தெட்டத்தெளிவாக நிரூபிக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது -

தமிழ் மக்களால் - ஜனநாயக ரீதியாகத் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகள் இவ்விஷயத்தைச் சரியாக எடுத்துச்சொன்னால் மட்டுமே சர்வதேச சமூகம் திருப்திப்படும்.

ஆகவே -

விடுதலைப் புலிகள் மீதுள்ள தடையை நீக்கி -

நோர்வே நாட்டின் அனுசரணையுடன் பேச்சு நடத்தி -

தமிழ் ஈழத்துக்கு மாற்றீடாக, நீதியும் நியாயமும் நிறைந்த தீர்வைக் காண்பதற்கு -

அரச கட்டிலில் அமரவுள்ள சிங்கள அரசை வலியுறுத்துவதற்கு முன்வரும் வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வதன் மூலம் -

அழிவுக்கு வழிவகுக்கும் பயங்கரச் சண்டைக்கு முற்றுப்புள்ளியிட்டு - நாட்டிலே நீடித்த - நிரந்தரமான சமாதானத்தையும் சந்தோஷத்தையும் சமத்துவத்தையும் நிலைநாட்டுவதற்கு தமிழ் மக்கள் முன்வரவேண்டும்.

*- சித்தன் -*

## நாளை

ஐப்பசி 27
செவ்வாய்க்கிழமை
திதி : திரயோதசி
பிற்பகல் 4.22 வரை.
நட்சத்திரம் : சித்திரை
முன்னிரவு 10.34 வரை.
சுபநேரம் : 10.37 - 12.07
ராகுகாலம் : 3.07 - 4.37
(பழைய நேரப்படி)

## விமானத்தில் பிரசுரங்கள் எடுத்துவர அனுமதி மறுப்பு!

யாழ்ப்பாணம்,நவ.12

தேர்தல் பிரசாரத்துக்கான துண்டுப் பிரசுரங்களை கொழும்பில் இருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவர பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்துள்ளது.

"துண்டுப்பிரசுரங்களை விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்ல பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி கோரினோம். ஆனால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது" என்று தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

(க)

## உதயவாக்கு

ஒழுக்கம் பிச்சைக்கார உருவிலே இருந்தாலும் கௌரவிக்கப்படும்.

## பங்கீட்டு அட்டைக்கு மண்ணெண்ணெய்

எரிபொருள் தட்டுப்பாட்டை அறிந்து பொதுமக்கள் நலன்கருதி ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் பங்கீட்டு அட்டைக்கு ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டுவருகிறது.

இங்குள்ள சில தனியார் வர்த்தக நிலையங்களில் எரிபொருள்கள் அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

(க-16)

# ஒழுக்கக் கட்டுப்பாடுதான் பிரபாவின் ஆளுமை........!



பிரபாகரன் ஒரு செயல்வீரன். வரலாற்றின் உந்துசக்தியாக விளங்குவது மனிதாபிமானச் செயல்தான் என்பது பிரபாகரனின் நம்பிக்கை.

பிரச்சினைகளைத் தத்துவார்த்த ரீதியாகப் பிரித்து ஆராய்ந்துகொண்டிருப்பதைவிட்டு செயலுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

பிரபாகரனின் இத்தகைய தன்மைதான் அவர் ஆரம்பித்த அமைப்பின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் காரணமாகும்.

தமிழ் அரசியல்வாதிகளின் வெறும் வாய்ஜாலங்களில் வெறுத்துப்போன இளைஞர்கள் பலர் தமது இலட்சியத்தை அடைவதற்கு பிரபாகரன் மேற்கொண்ட தீவிர இராணுவ ரீதியான அரசியல் இயக்கத்தினால் கவரப்பட்டனர்.

இடையூறுகள், கஷ்டங்களுக்கு மத்தியில் சிங்கள ஆட்சியாளரின் அடக்குமுறைகளை எதிர்த்து நிற்கக் கூடிய தமிழ்த் தேசிய இராணுவத்தை பிரபாகரன் வெற்றிகரமாக உருவாக்கினார்.

போராட்டத்தின் இந்தக் கட்டத்தில் பிரபாகரன் தனது இறுதி இலட்சியத்தை நிலைநாட்டவில்லை.

ஆயுதப்போராட்டத்தை மிகத் திறமையாக, நன்கு திட்டமிட்டுப் பிரபாகரன் வழிநடத்தினார். அப்படி அவர் வழிநடத்தாமல் விட்டிருந்தால் கடந்த கால்நூற்றாண்டாகக் கட்டி வளர்க்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளும் தமிழ்மக்களும் பல வருடங்களுக்கு முன்னரே அழித்தொழிக்கப்பட்டிருப்பர்.

இந்தப் போராட்டத்துடன் நான் வாழ்ந்து பெற்ற அனுபவத்தால் இந்த முடிவுக்கு வந்தேன். இதுவே தமிழ் மக்களின் பரவலான கருத்தாகவும் இருக்கிறது.

**பாலாவின் தலையீடு**

அரசியல் இலட்சியத்தை அடைவதற்குத் தேவையான ஆயுதப் போராட்டத்தை பிரபாகரன் முக்கியப்படுத்தினார். அதேசமயம் பாலாவின் தலையீடு ஆயுதப் போராட்டத்தின் அரசியல் பரிணாமத்தை வலுப்படுத்தியது.

**விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் மனைவி அடேல், புலிகள் இயக்கத்தில் பல வருடங்கள் இருந்து நேரில் தாம் கண்டவற்றை எல்லாம் 'சுதந்திர வேட்கை' என்ற தமது ஆங்கில நூலில் சுவைபடச் சொல்கிறார்.**

**பிரபாகரன், போராளிகள், போராட்டங்கள், புலிகள் இயக்கம் பறறி எல்லாம் கூறுகன்றார். அவர் வெளியிட்டிருக்கும் தகவல்கள் உணர்ச்சிபூர்வமானவை; உள்ளத்தைத் தொடுபவை. அவர் தமது நூலில் தெரிவித்துள்ள சில சம்பவங்கள் பற்றிய விவரம் கொழும்பிலிருந்து வெளியாகும் நமது சகோதரப் பத்திரிகையான 'சுடர் ஒளி' நாளிதழில் அவ்வப்போது இடம்பெறுகின்றது. யாழ். வாசகர்களின் நன்மை கருதி அவற்றை மறுபிரசுரம் செய்கிறோம்.**

ஒத்த சிந்தனையுடைய - வெவ்வேறான - இருவரினது நட்புறவும் தனித்துவமானவை. இரண்டு வித்தியாசமான ஆளுமை உள்ளவர்கள் குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் இணைந்து செயற்படுவது மரபு.

பிரபாகரனுக்கும் அவரது அமைப்புக்கும் ஆலோசகராகவும் சித்தாந்த வாதியாகவும் செயற்பட்டார் பாலா. தனக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்துக்கும் உள்ள தொடர்பு பற்றியே எப்போதும் கருதி வந்தார்.

பாலா பதவி பற்றிக் கவலைப்படவில்லை. போராட்டத்துக்குத் தன்னுடைய பங்களிப்பாக எழுதுவது, போதிப்பது, ஆலோசனை கூறுவது ஆகியவற்றுக்குப் பாலா தயாராக இருந்து அர்ப்பணிப்போடு செய்து வந்தார்.

இவை பாலாவைப் பிரபாகரனுக்கு முழு நம்பிக்கைக்குரிய - உண்மையான - ஆலோசகராக்கியது. இத்தனை வருடங்களிலும் பாலாவிடம் பிரபாகரனைக் கவர்ந்து அவர் மதித்த குணாம்சம் அவரது நம்பகத்தன்மைதான்.

**ஆலோசனைகள்**

பிரபாகரனினதும் போராட்டத்தினதும் சிறந்த நலனைக் கருத்திற்கொண்டு துல்லியமான, உண்மையான ஆலோசனையைக் கூறவேண்டும் என்ற ஒரே கொள்கையுடன் பாலா செயற்பட்டார்.

அவரது ஆலோசனைகளைப் பிரபாகரன் எப்போதும் செவிமடுத்தார். அவர் வெளிப்படையாகத் தெரிவித்தவற்றை அவர் விரும்பாமல் இருந்தாரா என்பது பற்றியெல்லாம் பாலாவுக்குக் கவலையில்லை. கசப்பானதாக இருந்தாலும் கூட அதன் உண்மையைப் பிரபாகரனுக்குச் சொல்லவேண்டியது ஆலோசகர் என்ற முறையில் தனது கடமையென்று பாலா பல தடவைகளில் எனக்குச் சொல்லியிருக்கிறார்.

தனிப்பட்ட உறவின் மூலமே அவரது உள்ளத்தை ஒருவர் தெரிந்து கொள்ள முடியும்.

வெளியுலகில் பிரபாகரனைப் பற்றிப் பரவலாக நிலவும் கருத்துக்கு மாறாக அவர் இனிமையான ஒரு சமதர்மவாதி. தனிப்பட்ட முறையிலும் சமூக மட்டத்திலும் பிரபாகரனைப் பற்றி ஒரே வார்த்தையில் சொல்வதானால் - கூடி வாழப் பிரியமுள்ள ஒரு மனிதர் அவர்.

கதைத்துப் பேசுவதற்கு மிக விருப்பமுள்ளவர் அவர். பல பிரச்சினைகளைப் பற்றி ஆர்வமுள்ள அவர், தனக்கென உறுதியான கருத்துக்களையும் கொண்டவர். சில விடயங்களில் அவரது கருத்துக்களை நான் ஏற்பதில்லை.

**விஞ்ஞானத்தில் ஆர்வம்**

விஞ்ஞானத்தில் பிரபாகரனுக்கு அளவு கடந்த ஆர்வம் உண்டு. தனது போராளிகளைப் புதிய புதிய தொழில் நுட்பங்களை அறிந்துகொள்ளுமாறும் விஞ்ஞான அறிவை விருத்திசெய்து கொள்ளுமாறும் ஊக்கமும் உற்சாகமும் அளித்தார்.

பிரபாகரனுக்கு ஆர்வமும் விருப்பமும் உள்ள மற்றொன்று, தமிழ்ப் பண்பாடு பற்றியது.

விடுதலைப் புலிகள் அமைப்பிலும் சமூகத்திலும் பல வடிவங்களில் கலாசார வெளிப்பாடுகளுக்கு அவர் ஊக்கமளித்தார்.

பயிற்சி முகாம் வாழ்க்கையில் கலாசார நிகழ்ச்சிகள் முக்கிய இடத்தைப்பெறுகின்றன. போராளிகள் பலரும் அவற்றில் கலந்துகொண்டு தமது பங்களிப்பைச் செலுத்துகின்றனர். தமிழ் விடுதலை இலக்கியங்களும் ஓவியக் கலைகளும் பிரபாகரனின் உணர்வுபூர்வமான பாராட்டைப் பெற்றிருக்கின்றன.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக பிரபாகரன் ஒரு நல்ல சமையற்கலை வல்லுனர். வெவ்வேறுவிதமான சுவையான உணவுகளைச் சமைப்பதில் அவர் ஆர்வம் காட்டியிருக்கிறார். கடந்த காலங்களில் சுவையை வளர்த்திருக்கிறார். சமையல் என்பது ஒரு கலை. உண்பது வாழ்க்கையின் அடிப்படை ஆனந்தம் என்பது அவரது கருத்து.

பச்சைக் காய்கறிகளுடனான எனது உணவுப்பழக்கம் எனக்கு எப்படி திருப்தி அளிக்கிறது என்பதை விளங்கிக்கொள்வது அடிக்கடி அவருக்குக் கஷ்டமாக இருந்தது. இருந்தாலும், நான் சாப்பாட்டுக்காக அவருடைய வீட்டுக்குப் போகும் சமயங்களில் எனக்காக என்னுடைய சுவைக்கு ஏற்ப உணவு தயாரித்துக் கொடுத்திருக்கிறார்.

எங்கள் வீட்டுக்குப் பிரபாகரன் வந்து திரும்பும் சமயங்களை மறக்காமல் எங்கள் சாப்பாடு பற்றி விசாரித்துவிட்டே செல்வார்.

தனது போர் வீரர்களுக்கு ஏதாவது விசேஷத்தின்போது உணவு தயாரித்தால் பாலாவுக்கும் அந்த உணவைத் தவறாமல் அனுப்பிவைப்பார். அதன்மூலம் எனது சமையல் செய்யும் கஷ்டத்தை நீக்கிவிடுவார்.

தாவரப் பட்சினியான எனக்கு சைவ உணவு தயாரிக்க முடிவு செய்ய முன் பிரபாகரன் கடுமையாக யோசிப்பார். அடிக்கடி இல்லாவிட்டாலும் சமையற்காரர்களைக் கொண்டு எனக்கு விசேடமாக சைவ உணவு சமைத்து அனுப்பியிருக்கிறார். பாலாவுக்குச் சாப்பாடு வரும்போது எனது சாப்பாடும் வந்துசேரும்.

இராணுவ விடயங்களில் பிரபாகரன் அதிதீவிர அக்கறை காட்டுவார். இராணுவ வாழ்க்கை முறையைக்கொண்ட போர் வீரர்களின் சீருடை, ஆயுதங்கள், போர்த் தொழில் நுட்பம் போன்றவற்றில் மாத்திரம் அவரது ஆர்வம் அடங்கிவிடவில்லை.

சில இராணுவ இலட்சியங்கள், கொள்கை என்பன ஒழுங்கான வாழ்க்கைக்கு அவசியம் என்று பிரபாகரன் கருதுகிறார் என்பது எனது கருத்து.

இந்தக் கொள்கைகள் அவரது பரந்த சமூக சித்தாந்தத்தில் அடங்கியிருக்கின்றன. பிரபாகரனது வாழ்வில் நடுநாயகமான தத்துவமாக விளங்குவது ஒழுக்கக்கட்டுப்பாடு.

இந்த ஒழுங்கு, கட்டுப்பாடுதான் அரசியல் - இராணுவ அமைப்பில், சொந்த வாழ்க்கையில், சமூகப் பார்வையில் - பிரபாகரனுடைய ஆளுமையாக இருக்கின்றது.

*(வளரும்)*

---

# தங்கள் தொண்டர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்படுவதாக ஈ.பி.டி.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,நவ.12

குடாநாட்டில் தங்களது கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக ஏனைய கட்சிகள் சிலவற்றைச் சேர்ந்தோர் தாக்குதல்களை நடத்திவருவதாக ஈ.பி.டி.பி. குற்றஞ்சுமத்தியிருக்கின்றது.

இது தொடர்பாக, பல்வேறு கட்சியினராலும் - தங்களுக்கு எதிராக - அண்மைக் காலத்தில் - நடத்தப்பட்ட தாக்குதல்களை விவரித்து அறிக்கை ஒன்றை அக்கட்சி நேற்றுமுன்தினம் வெளியிட்டிருந்தது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்த சில அம்சங்கள் வருமாறு:-

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியாகிய எங்களுக்குப் பெருகிவரும் மக்களாதரவுகண்டு கிலிகொண்டுள்ள சக்திகள் எமது ஆதரவாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் மீது மிகவும் கோழைத்தனமான முறையில் அடாவடித்தனங்களைக் கட்டவிழ்த்து விட்டு வருகின்றன என்பதைப் பொது மக்களுக்கு மிகுந்த கவலையுடன் தெரியப்படுத்துகின்றோம்.

இவ்வாறு தாக்குதல் சம்பவங்கள் தொடர்ந்தபோதும் ஈ.பி.டி.பி. இத்தேர்தல் வன்முறைகள் தொடர்பாக பொலீஸ் திணைக்களத்தின் சட்டரீதியான உதவிகளை நாடியே முறையிட்டுள்ளது. மாறுபாடான அரசியல் சிந்தனைகளை அடாவடித்தனமான அடக்குமுறைகளால் நசுக்கிவிடமுடியாது என்பதையும் அராஜகப் போக்குகளைக் கட்டவிழ்த்துவிடுவது இனத்தை வழிநடத்தும் பொறுப்பை ஏற்பதற்கு உதவப்போவதில்லை என்பதையும் சம்பந்தப்பட்டவர்கள் தெளிவாக உணர்ந்துகொள்ளவேண்டும். கருத்து ரீதியான மோதல்கள் கருவி ரீதியான மோதல்களாக மாறி பலப்பரீட்சையாகப் போய்விடுவதனால் எந்த ஆக்கபூர்வமான பயனும் விளையப்போவதில்லை. எனவே கண்ணியமான முறையில் அரசியல் கருத்துக்களையும், தத்தம் திட்டங்களையும் கொள்கைகளையும் மக்கள் முன் வைத்து வாக்குக் கேட்பதே சரியானதாக இருக்கும் என்பதை மட்டும் இப்போதைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி, கரவெட்டி, சுன்னாகம் பகுதிகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சில சம்பவங்கள் இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டிருந்தன.

(உ)

# அட்டாளைச்சேனை அலுவலகம் மீது நேற்றுமுன்தினம் குண்டுத் தாக்குதல்!

கொழும்பு,நவ.12

அட்டாளைச்சேனைப் பகுதியில் இயங்கும் சமூகசேவை அமைப்பான சமூக நலன்புரி (சுஷோவா) அமைப்பின் அலுவலகம் நேற்றுமுன்தினம் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானது.

ஆயுதங்களுடன் வந்த ஒரு குழுவினர் அலுவலகக் கதவை உடைத்துத் தமிழ்த் தட்டச்சு இயந்திரத்தை திருடிச் சென்றுள்ளனர் என்றும் -

அவர்கள் அலுவலகத்தை விட்டு வெளியேறும்போது குண்டு ஒன்றை வெடிக்க வைத்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

"அதிகாலை சுமார் 3.30 மணியளவில் அலுவலகத்தில் பெரும் சத்தத்துடன் குண்டு வெடித்தது. அச்சமயத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரையும் வேறு மூவரையும் கண்டேன். அவர்கள் தொப்பி அணிந்து ஆயுதத்துடன் ஓடினார்கள்".

- என்று சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் கூறினார்.

குண்டு வெடிப்பினால் அந்த அலுவலகத்தின் பின்புறமாக இருந்த 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமாகின.

(ம)

# ரணிலைக் கொல்லச் சதியா? மறுக்கிறார் இராணுவத் தளபதி!

கொழும்பு,நவ.12

நான்கு தமிழ் இளைஞர்களுக்கு ஸ்ரீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவு விசேட பயிற்சி கொடுத்து தன்னைக் கொல்வதற்குத் தயார் செய்து வருவதாக ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறிய குற்றச்சாட்டுக்களை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் எல்.பி.பலகல்ல மறுத்திருக்கின்றார்.

இந்த விடயம் தொடர்பாக ஐ.தே. கட்சித் தவிசாளர் சரித்த ரத்வத்த, பிரதித் தவிசாளர் தயா பெல்பொல ஆகியோர் எழுதிய கடிதத்துக்கு இராணுவத் தளபதி பதில் அனுப்பியிருக்கின்றார்.

"உங்கள் கடிதத்தில் குறிப்பிட்ட விடயம் குறித்து உடனடியாக விசாரணை நடத்தினேன் உங்களுக்குக் கிடைத்த தகவலில் கூறப்படுவது போன்று விடயம் ஏதும் இல்லை என்பதை உறுதிப்படுத்த விரும்புகிறேன்.

" ஐ.தே. கட்சியின் பிரசாரக் கூட்டங்களுக்கு பாதுகாப்பு வழங்கும் விவகாரம் இராணுவத்துக்குரிய விடயமல்ல.

" இந்த நிலையில் தங்களின் கடிதத்தின் பிரதியை பொலீஸ்மா அதிபரின் தகவலுக்காகவும், அவர் உரியது எனக் கருதும் நடவடிக்கைக்காகவும் அவருக்கு அனுப்பியுள்ளேன்" - இப்படி இராணுவத் தளபதி தமது கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார்.

(உ)

யாழ்.குடாநாட்டில்

# தேர்தல் சுவரொட்டிகளை அகற்றுவதற்கு உத்தரவு!

யாழ்.மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் கட்அவுட்டுக்கள் பதாகைகள் சுவரொட்டிகள் ஆகியவை உடனடியாக அகற்றப்படும். பொலீஸ மா அதிபர் லக்கி கொடித்துவக்கு வட பிராந்திய பிரதிப் பொலீஸ் மா அதிபருக்கு இதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

ராஜகிரியவில் உள்ள தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற கூட்டத்தில் பொலீஸ் மா அதிபர் இந்த உத்தரவை விடுத்தார்.

தேர்தல் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக தேர்தல் ஆணையாளரினால் இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பொலீஸ மா அதிபர் (ஐ.ஜி.பி) மற்றும் பிராந்திய பிரதிப் பொலீஸ் மா அதிபர்கள், அரசியல் கட்சிகளின் சுயேட்சைக் குழுக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குடாநாட்டில் 300க்கும் மேற்பட்ட கட் அவுட்டுக்களை ஈ.பி.டி.பி. அமைத்துள்ளது. அந்தக் கட்அவுட்டுக்களுக்கான மின்சார இணைப்பு அரச நிறுவனங்களிடம் இருந்து பெறப்பட்டுள்ளது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி சிரேஷ்ட உபதலைவர் வீ.ஆனந்தசங்கரி கட்சிப் பிரமுகர் எஸ்.பத்மநாதன் ஆகியோர் முறையிட்டனர்.

யாழ்.மாவட்டத்தில் ஜனநாயகத் தேர்தல் ஒன்று இடம்பெறுவதற்கான கடைசிச் சந்தர்ப்பம் இது என்பதை உணர்ந்து வன்செயல்கள் அற்ற தேர்தல் இடம்பெறவேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று ஆனந்தசங்கரி கோரிக்கை விடுத்தார்.

இச்சமயத்தில் ஆனந்தசங்கரிக்கும் ஈ.பி.டி.பியின் ஆலோசகர் விக்கினேஸ்வரனுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது. (ம)



**வங்கிச் சேவையில் 25 வருடங்களைப் பூர்த்தி செய்த ஊழியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் மக்கள் வங்கியின் பிராந்திய தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.**

**வடபிராந்திய முகாமையாளர் மு.க.சிவபாதவிருதயர், வடவலய உதவிப் பொது முகாமையாளர் எஸ்.இளம்பிறைநாதன், மக்கள் வங்கியின் ஓய்வூதிய நலன்புரிச் சங்கத் தலைவர் ஆர்.சுந்தரலிங்கம் ஆகியோருடன் விழாவில் கௌரவிக்கப்பட்ட ஒன்பது பணியாளர்களையும் படத்தில் காணலாம்.**

*(படம்:- அலுவலகச் செய்தியாளர்)*



# அமெரிக்கர்களின் அவலச்சாவில் மனநிறைவு காணும் பின்லேடன்

## அகிலத்தை உலுக்கிவிட்ட அமெரிக்கா மீதான தாக்குதலும் அதன் தொடர் நிகழ்வுகளும்

5

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் கலங்கிய விழிகளுடன் ஸ்தலத்திற்கு ஹெலிக்கொப்டரில் வந்து இறங்கினார். அவரை அங்கு வரவேற்ற நியூயோர்க் மேயர் ருடி கில்யானியும் **(Rudy Giuliani)** ஆளுநர் ஜோர்ஜ் பட்டகியும் **(George Pataki)** சோகம் ததும்ப அவரைத் தழுவிய காட்சி அமெரிக்கர்களை உறைய வைத்திருக்கும்.

மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த தீயணைப்புபடை படை வீரர்களைத் தோளில் தட்டிக்கொடுத்தார் புஷ். இந்தக் கட்டடங்களைக் கொட்டுப்பட வைத்தவர்கள் எம்மிடமிருந்து விரைவில் பாடம் படிப்பார்கள் என்



தெம்பு கொடுக்கும் புஷ்

றார் அவர். என்னதான் வீரம் பேசினாலும் நாட்டு மக்களுக்கான தனது உரையில் அவர் தனது அச்சங்களை வெளியிடத் தவறவில்லை. அடுத்தது என்ன என்கின்ற ஏக்கம் அவரிடம் தென்படத்தான் செய்தது. இத்துடன் எல்லாம் முடிந்துவிட்டது என்று நிம்மதிப் பெருமூச்சுவிட அவர் தயாரில்லை.

இதைவிடப் பாரதூரமாகக் கூட அடுத்த தாக்குதல் அமையலாம். அது எந்த வடிவத்தில் எங்கே எப்படி வந்து தாக்குமோ தெரியவில்லை என்றார் அவர். உயிரியல், இரசாயனவியல் அல்லது அணு ஆயதங்களாகவும் அவை இருக்கலாம் என அச்சம் தெரிவித்தார் புஷ்.

வெள்ளை மாளிகையில் விமானம் விழுந்திருந்தால் அழிவுகள் பாரதூரமாக இருந்திருக்கும் என்றார் அவர். அது ஒரு மிகப் பழைய கட்டடம். செங்கட்டிகளால் கட்டப்பட்டது. அங்கு கொங்கிறீட் மற்றும் உருக்கு வேலைப்பாடுகள் கிடையாது. அது விமானம் பட்டதும் தவிடுபொடியாகி இருக்கும். தனது மனைவிகூட அப்போது அங்கேதான் இருந்தா. அவ மட்டுமல்ல இன்னும் ஏராளமானவர்கள் இறந்திருப்பார்கள் என்றார் மேலும்.

தொலைக்காட்சியில் பார்ப்பதை விட நேரில் பார்க்கும்போது அழிவு



ஜனாதிபதி புஷ் மேயருடனும் ஆளுநருடனும் சோகத்தைப் பகிரும் காட்சி

கள் மிக மோசமாகவே இருக்கின்றன என்றார் நியூயோர்க் நகர மேயர். ஹெலிக்கொப்டரில் இருந்து பார்த்த புஷினால் நிலைமையை ஜீரணிக்க இயலவில்லை. இப்படியோர் அழிவைத் தான் பார்த்ததில்லை என்கிறார். உலகின் பல்வேறு பாகங்களிலும் அழிவு நடைபெற்ற இடங்களுக்கெல்லாம் விஜயம் மேற்கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதியின் மனைவி ஹிலரி கிளின்ரன்.

மேயர் சம்பவம் நடைபெற்றபோது மயிரிழையில் உயிர் பிழைத்திருக்கிறார். தீயணைக்கும் வீரர்களுக்கு வேண்டிய கட்டளைகளை அவர் பிறப்பித்துக் கொண்டிருந்தார். அனுபவம் வாய்ந்த எவரும்கூட எரியும் கட்டடங்கள் கொட்டுப்படும் எனக் கனவிலும் நினைத்திருக்கவில்லை. மேயர் சற்று விலகிய பத்து நிமிடங்களில் சற்றும் எதிர்பாராமல் முதலாவது கோபுரம் தகர்ந்து கொட்டுப்படலானது. அத்தனை எடை கொட்டுப்பட்ட தாக்கம் எல்லாம் ஒரு பூகம்பம்போல நகரத்தை அதிரவைத்தது. திசைஎங்கும் புழுதிப்படலம், தூசிப்படை, சாம்பற்கரி, புகைமண்டலம் என்று கண்களை மறைக்கும் காட்சிகள் மூச்சை அடைக்கும் வதை சொல்லிமாளாது.

அவசரமாக ஒரு தொலைபேசி அழைப்பைப் பெற மேயர் அருகிலுள்ள ஓர் அலுவலகத்துக்குச் சென்றிருந்தார். அவரது இராஜதானி எரிந்துகொண்டிருக்கின்றதல்லவா? அப்போதும் - முதலாவது கட்டடம் கொட்டுப்பட்ட நிலையிலும் - இடிபாடுகளுக்கு இடையில் பலர் அகப்பட்ட நிலையிலும் தீயணைக்கும் வீரர்கள் மீட்புப் பணிகளை மேற்கொள்ளத் துடித்துக்கொண்டிருந்தனர். இரண்டாவது கட்டடமும் கொட்டுப்படத்தான்



எரிகின்ற நகரத்தில் இடநெருக்கடி ஆபத்து

போகின்றது என்பது இப்போது எதிர்பார்க்கப் படும் நிலையில்கூட அந்த மீட்புப் பணியாளர்கள் தம்மைப் பாதுகாக்க ஓடி ஒளியவில்லை என்கிறார் மேயர்.

இரண்டாவது கோபுரமும் இடி யோசையுடன் பேரிரைச்சலுடன் நியூயோர்க் மண்ணை நோக்கி வருகின்றபோது தப்பி ஓடிவிடும்படி பலரும் கத்துகின்ற ஓசை மேயரின் காதுகளில் கேட்கின்றது. மீட்புப் பணியாளர்களின் சீருடையில் தானுமாகி இருந்த மேயர் தான் தப்பிவிட நினைக்கவில்லை. வாயிலை நோக்கி அவர் ஓடிவருகின்றவேளையிலே அகிலமெல்லாம் அதிர அக்கோபுரமும் மண்ணை மோதிவிடுகின்றது. வாயிலிலே கண்தெரியாத புழுதி மண்டலத்தினூடே ஓடிவரும் மேயரின் கண்முன்னே கொட்டுப்பட்டுவிட்ட கோபுரத்தின் சிதறல்கள் இன்னமும் பறந்து ஓயவில்லை. இடிபாடுகள் கொட்டுப்படாத இடங்களில்கூட அடிக்கணக்கில் தூசிப்படை படிவுகளாகக் காணப்பட்டது.

எங்கும் புழுதியும் கரியும் புகையுமாகி மனற்றன் பகுதி முழுவதையுமே கோரமும் சோகமும் ஆக்கிவிட்டிருந்தது அந்தச் சம்பவம். எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் அமெரிக்கா அதனை மறக்க முடியுமா? என்னதான் வசதிகள் இருந்தாலும் பழைய நகரத்தைக் கட்டி எழுப்பிவிடல் சாத்தியம் ஆகுமா? கட்டி முடித்துவிட்டால்கூட அதனைக் காத்திடல் முடியுமா?

உலகின் முன்னணி நகரமான நியூயோர்க்கில் பல அலுவலகங்கள் தம்மை இழந்துவிட்டன. கிட்டத்தட்ட 500 அலுவலகத் தளங்கள் அழிந்துவிட்டன. ஆயிரக்கணக்கானோர் தமது வேலைத்தளம் சூனியமாகிவிட்ட அதிர்ச்சியில் இருக்கிறார்கள். நிலைமை வழமைக்குத் திரும்பினாலும் இட நெருக்கடியை இனிச் சரிக்கட்ட இயலாது. எங்காவது சற்று விலகி ஓர் இடத்தில் ஆதல் கட்டடங்களைப் பிடிக்கப் பல நிறுவனங்கள் போட்டி போடப்போகின்றன. நெருக்கடியான நியூயோர்க் நகரத்தில் முன்னணி நிறுவனங்கள் பலவும் கிடைக்காத இடம் தேடி அலையப்போகின்றன.

உடனடியாக அமெரிக்காவின் கவனம் ஆப்கானிஸ்தான் மீதும், தீவிரவாதி ஒஸாமா பின்லேடன் மீதும் திரும்பியிருக்கிறது. பின்லேடனை அழிப்பதற்காக ஆப்கான் மீது தாக்குதல் தொடுக்க அமெரிக்கா ஆரம்பத்தில் அவசரப்பட்டது. எனினும் உடனடியாக அந்த முயற்சி கைகூடவில்லை. 70 வீதமான அமெரிக்க மக்களும் அழிவைக் கண்டதும் அந்தப் போரை ஆதரித்து நின்றார்கள். எடுத்ததற்கெல்லாம் பத்திரிகைகள் கருத்துக் கணிப்பை நடத்தன. எந்த வகையில் எப்படித் தாக்குவது எந்தத் தளங்களைப் பாவிப்பது யார் எவர் எல்லாம் இதற்கு ஆதரவும் ஒத்தாசையும் தருவார்கள் எவரெல்லாம் இதை எதிர்ப்பார்கள் என்று கணக்குப் பார்ப்பதற்குள் நாள்கள் நகரத் தொடங்கிவிட்டன.

> மதம் சாராத கலாசாரத்தையும் ஆன்மீக திருப்தி இல்லாத வாழ்க்கையையும் ஆபாசத்தையும் போதைப் பாவனையையும் போலி வசதிகளையும் உலகெங்கும் பெருக்கி எவர் எக்கேடு கெட்டாலும் தன் பொருளாதாரத்தை உச்சத்தில் பேணுவதையே அமெரிக்கப் பயங்கரவாதம் குறியாகக் கொண்டுள்ளது என்று தலிபான்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். தமது போரை மதத்தின் பெயரால் புனிதப் போர் என்றே அவர்கள் நியாயப் படுத்துகிறார்கள். இஸ்லாத்தில் புனிதப்போர் நியாயப்படுத் தப்பட்டிருக்கின்றது. குர்ஆன் அதனை வலியுறுத்துகிறது.

இதழ் தவழும் இளங்கீற்றான புன்னகை, மென்மையான குரல், இனிமையாகப் பழகும் சுபாவம், ஆரவாரம் இல்லாத தன்மை இவைதான் பின்லேடனின் பண்புகள். ஆறு அடிக்கும் மேலான உயரம் ஆனால் அதிகம் பருக்காத உடல் எடை 70 கிலோவைத் தாண்டாது. அதிகம் வசதி கொண்ட குடும்பத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட சகோதரர்களுடன் பிறந்துவிட்ட பின்லேடன் ஒரு வணிக நிர்வாக பட்டப் படிப்பிற்காகப் பல்கலைகழகம் புகுந்திருந்தார்.

பின்லேடனின் அகராதியில் புனிதப்போர் என்று கருதப்படும் தாக்குதல்கள் மனநிறைவைக் கொடுக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கின்றது. 2001இன் ஆரம்பத்தில் யு.எஸ்.எஸ். ஹோல் **(USS Cole)** என்ற அமெரிக்கக் கடற்படைக் கப்பலை பின்லேடனின் சகாக்கள் தாக்கியதாகக் கூறப்பட்ட சம்பவம்பற்றிக் கருத்துத் தெரிவித்த பின்லேடன், சிதறிப் பறக்கும் சதைத்துண்டங்களின் காட்சி கண்களுக்குக் குளிர்ச்சியானது என்றும் இதயத்தைப் பரவசத்தால் நிரப்புகிறது என்றும் வருணித்து இருக்கிறார். அத் தாக்குதலில் 17 அமெரிக்க மாலுமிகள் கொல்லப்பட்டனர். அப்படியானால் உலக வர்த்தக நிலையத் தாக்குதல் அவரது மனதை எப்படி நிறைத்திருக்குமோ?

உலக வர்த்தக நிலையம் மீதான தாக்குதல் நடந்த மறுகணமே அமெரிக்கா போரைத் தொடுத்திருந்தால் அந்த உணர்ச்சிகரமான செயலுக்கு அப்பாவி ஆப்கானியர்களின் உயிரிழப்புக்களுக்கும் உடைமைச் சேதங்களுக்கும் அது ஓரளவுக்கு நியாயம் கற்பித்திருக்க முடியும். காலம் கடந்த தாக்குதல்கள் நிதானமாகவும் அப்பாவிகளின் உயிரிழப்புக்களை தவிர்த்தும் மேற்கொள்ளப்படல் வேண்டும். அநியாயமான உயிரிழப்புக்களினால்



இடிபாடுகளுக்கு மத்தியில் இராணுவப் பயிற்சிகள்

வெறும் பழியே எஞ்சும்.

ஆப்கானை மட்டும் அமெரிக்கா தாக்க இயலாது. அதன் ஆதரவு நாடுகள் நீண்ட காலத்திற்கு பார்த்துக் கொண்டிருக்கமாட்டா. 71 வீதமான அமெரிக்கர்கள் சிவிலியன்கள் இறப்பதையும் பொருட்படுத்தாது ஆப்கான மீது தாக்குதல் தொடுக்கப்பட்டாக வேண்டும் எனக் கருத்துத் தெரிவித்து இருந்தனர். ஆனால் அதனை ஏற்கமுடியாது. 100 வீதம் அமெரிக்கர்களும் அப்படியொரு போரை வரவேற்றாலும்கூட அதை ஏனையவர்கள் ஏன் ஏற்கவேண்டும்?

நடத்தப்படும் தாக்குதல் கைமேல் பலனைக் கொடுத்தாக வேண்டும். அது வேலை செய்யாதபோது வெறுமனே தாக்குவதால் நன்மை ஏதும் விளையப் போவதில்லை என்றும் 60 வீதமானோர் கருத்துக்களை வெளிப்படுத்தி இருந்தனர்.

ஒஸாமா பின்லேடன் அமெரிக்காவைப் பொறுத்தவரையில் மிகவும் அவசரமாக வேண்டப்படும் தீவிர



நியூயோர்க் வான் பரப்பில் புஷ்ஷைத் தாங்கிய ஹெலி

வாதி. அவரை உயிருடனோ அன்றிப் பிணமாகவோ பிடித்துவிடல் வேண்டும் என்ற அவசரம் தற்போது அமெரிக்காவிடம் தெரிகிறது. தலிபான் கடும்போக்கு முஸ்லிம் கோட்பாட்டாளர்களின் கையில் ஆப்கான் ஆட்சி சிக்கியிருக்கிறது. அவர்கள் கடுமையான மதவாதப் போக்குடைய சட்டங்களை நாட்டில் பின்பற்றி வருகிறார்கள்.

சாதாரணமாக முஸ்லிம் மக்களும் பகட்டு வாழ்க்கைக்கு எடுபட்டுவிடுகிறார்கள் என்பது தீவிரவாதிகளுக்குக் கவலை தரும் விடயம் ஆகிறது. அமெரிக்காவின் உலக மயமாக்கல் மற்றும் இடாம்பீக போக்கு அவர்களுக்கு சற்றும் ஒத்துவராத காரியம். தமது மதத்தை இத்தகைய போக்குகள் அழித்துவிடுமென தலிபான்கள் அஞ்சுகிறார்கள்.

மதம் சாராத கலாசாரத்தையும் ஆன்மீக திருப்தி இல்லாத வாழ்க்கையையும் ஆபாசத்தையும் போதைப் பாவனையையும் போலி வசதிகளையும் உலகெங்கும் பெருக்கி எவர் எக்கேடு கெட்டாலும் தன் பொருளாதாரத்தை உச்சத்தில் பேணுவதையே அமெரிக்க பயங்கரவாதம் குறியாகக் கொண்டுள்ளது என்று தலிபான்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். தமது போரை மதத்தின் பெயரால் புனிதப் போர் என்றே அவர்கள் நியாயப் படுத்துகிறார்கள். இஸ்லாத்தில் புனிதப்போர் நியாயப்படுத்தப்பட்டிருக்கின்றது. குர்ஆன் அதனை வலியுறுத்துகிறது.

புனிதப் போரில் மரணத்தைத் தழுவுகின்ற போராளிகள் அது தற்கொலையாக இருந்தால்கூட அல்லாவிடமே போய்விடுகிறார்கள் என்கின்ற நம்பிக்கை மதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இத்தகைய பிரசாரங்கள் மசூதிகளில் தொழுகைக்காக கூடும் முஸ்லிம்களிடம் எடுத்துரைக்கப்படுகின்றன. அத்தோடு நவீன போராளிகள் தமது பெயர்கள் வரலாற்றில் இடம் பிடிக்க வேண்டும் எனவும் கருதிச் சாதனைகளைச் செய்ய முன்வருகிறார்கள். உயிரைத் துச்சமென மதித்து தமது தலைவர்களின் ஆணையைச் செயற்படுத்த முனைகிறார்கள். இத்தகைய போக்குகளுக்கு அமெரிக்கா யுத்தத்தினால் தீர்வு காணுவது கடினமே.

ஆப்கானிஸ்தானின் ஆட்சி தலிபான் தீவிரவாதிகளிடம் 1996 இல் வந்திருந்தது. ஆட்சித் தலைவர் முல்லா மொகமட் ஓமர் எப்படி இருப்பார் என்றே எவருக்கும் தெரியாது. அவரது வலது கண் சோவியத் துருப்புக்களுடனான மோதலில் ஓர் ஏவுகணை வெடிப்புச் சிதறல்களினால் சிதைந்து போனது.

மெலிந்த முகமும், அடர்ந்த தாடியும் கொண்ட அவரது தோற்றம் ஒரு சாதாரண தலிபான் போராளியைப் போலவே இருக்கும். வரட்சியும வறுமையும் அழிவுகளும் நிறைந்த ஆப்கானில் அவரது ஆட்சி மிகவும் கடும்போக்கானது. 1400 ஆண்டுகள் பழைமைவாய்ந்த புத்தர் சிலை உடைப்பு, முஸ்லீம் அல்லாதவர்களுக்கான அடையாளப் பட்டி அணிவிப்பு, பெண்களுக்கான கல்வி உரிமைகள் மறுப்பு, அவர்கள் வெளியே தலைகாட்ட முடியாத நிலைமை, நவீன யுகத்துக்கும் இணையப் பாவனைக்கும் வழிவிடாத போக்கு, புகைப்படம் எடுக்கவும் தொலைக்காட்சி

**மு. சிவநேசன்**

பார்க்கவும் தடை என்பன மக்களால் எவ்வளவு தூரம் விரும்பப்படும் எனக் கூறமுடியாது. மதத்தின் பெயரால் இவ்வசதிகளையெல்லாம் தியாகம் செய்ய மக்கள் தயார்தானா என்பது சுதந்திரமாக வாக்கெடுப்பிற்கு விட்டால்தான் தெரியும்.

ஓமரின் கலங்கலான புகைப்படம் ஒன்றை பி.பி.ஸி. அண்மையில் வெளியிட்டு இருந்தது. கந்தகாரில் நடைபெற்ற ஊர்வலம் ஒன்றில் படம் எடுக்கப்பட்டிருந்தது. அதைவைத்து ஆளை அடையாளம் காண இயலாது. சில வருடங்களுக்கு முன்னர் பீ.பீ.ஸி. செய்தியாளருக்கு பேட்டியளிக்க முன்வந்த ஓமர் ஒரு திரைக்குப் பின்னால் இருந்து பேசியதாக கூறப்படுகின்றது. தனது இயக்கத்துக்கு ஆதரவு தராத எவரையும் தான் கண்ணால் காண்பதில்லை என அவர் அங்கு விளக்கம் சொல்லியிருந்



போருக்குத் தயாராகும் தலிபான்

தார். இவரது இயக்கம் சோவியத்தினால் சின்னாபின்னமாக்கப்பட்டிருந்த ஆப்கானில் 1994இல் துளிர் விட்டிருந்தது. (வளரும்)

(ரணில் வெளிநாட்டுச் செய்தியாளருக்கு விளக்கம்)

# ஆட்சி மாறியதும் எம்மிடம்தான் தீர்மானிக்கும் பொறுப்பு இருக்கும்!

## ஜனாதிபதி முரண்டு பிடித்தால் நம்பிக்கையில்லாப் பிரேரணை!!

கொழும்பு,நவ.12

★ ஆட்சி மாறிய பின்னர் ஜனாதிபதி அமைச்சரவைக்குத் தலைமை வகிப்பார். ஆதலால் அமைச்சரவையே தீர்மானங்களை நிறைவேற்றும்.

★ ஆட்சிபீடம் ஏறியதும் நாட்டுப் பிரச்சினை குறித்துப் பேச்சுக்கள் உடனடியாக ஆரம்பிக்கப்படும். அதனூடாக நிரந்தரத் தீர்வு எட்டப்படும்.

இப்படித் தெரிவித்திருக்கின்றார் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

தனது பிரசார வாகனத்தில் நடத்திய செய்தியாளர் மாநாடு ஒன்றிலேயே அவர் இதனைக் கூறினார்.

வெளிநாட்டுச் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்து ரணில் மேலும் சொன்னதாவது:-

"ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மக்கள் மனதைத் திசை திருப்புவதற்கூகத் தேவையற்ற விடயங்களைப் பிரசாரம் செய்கிறார்.

எமது கட்சியின் தலைமையிலான ஆட்சி வந்தவுடன் பின்வருவனவற்றைச் செய்வோம்.

★ வன்னிக்குச் சீராகப் பொருள்கள் அனுப்பப்படும்.

★ போரிடும் தரப்புகளுக்கு இடையிலான வேறுபாடுகளைக் களையும் பொருட்டு முதலில் பேச்சுக்கள் நடதத்தப்படும்.

★ நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் முதற்கட்ட நடவடிக்கையாகத் துறைமுகங்கள், விமான நிலையம் என்பன துரிதமாகச் சீர் செய்யப்படும்.

'அக்கினிச் சுவாலை' நடவடிக்கை படுதோல்வியில் முடிந்துபோனதால் இலங்கையில் சமாதானத்தை நிலை நிறுத்துவேன் என்று வெளிநாடுகளுக்கு வழங்கிய உத்தரவாதம் உருக்குலைந்துவிட்டது. நோர்வே அரசின் முயற்சிகளும் முடக்கப்பட்டுவிட்டன. அவை மீளத் துரிதப்படுத்தப்படும்.

நாட்டின் சகல பகுதிகளும் ஒரே அதிகார இயந்திரத்தின் கீழ் செயற்படும். வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படும். அது அரச அதிபர்களால் நிர்வகிக்கப்படும். அதன் நிர்வாக மேம்பாட்டைப் பொறுத்துப் புதிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்படும்.

ஆட்சி மாறிய பின்னர் ஜனாதிபதி அமைச்சரவைக்கு தலைமை வகிப்பார். அமைச்சரவையே தீர்மானங்களை நிறைவேற்றும்.

இது விடயத்தில் ஜனாதிபதி முரண்டு பிடித்தால் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை உடனடியாகக் கொண்டுவரப்படும்.

உலக பயங்கரவாதத்துக்கு எதிரான போர் கடந்த செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதிக்குப் பின்னரே தீவிரமாகியுள்ளது. அதற்கும் இலங்கையின் உள்நாட்டுப் போருக்கும் சம்பந்தமில்லை.

- இவ்வாறு ரணில் விக்கிரமசிங்க கூறினார். (க)


## தீபாவளியை முன்னிட்டு!...

03.11.2001 முதல் 14.11.2001 வரை

ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸின்

## மாபெரும் மலிவு விற்பனை

சாறிவகைகள்

| | | |
|---|---|---|
| ☆ நவின் சாறிவகைகள் | 2250/- | 1800/- |
| ☆ பொண்டாட்டி சொன்னாளே (சில்க்) | 1250/- | 1000/- |
| ☆ புது மனசு | 1000/- | 850/- |
| ☆ புது வருஷம் | 1350/- | 1050/- |
| ☆ மாப்பிள்ளைவீட்டுப் பெண் | 1300/- | 1200/- |
| ☆ கோப்றா சில்க் | 1000/- | 700/- |
| ☆ யப்பான் சாறி | 850/- | 750/- |

☆ பட்டு சாறிகள் குறித்த விலையில் 15% கழிவு தரப்படும்.

| | | |
|---|---|---|
| ☆ பட்டுக்குயின் 1M. | 140/- | 90/- |
| ☆ சூட்டிங் வகைகள் | 400/- | 350/- |
| ☆ பட்டசில்க் பிளேன் | 90/- | 77.50 |
| ☆ டயானா பிறின்ற் (40") | 150/- | 135/- |
| ☆ டயானா பிறின்ற் (44") | 130/- | 125/- |
| ☆ சைனீஸ் சீத்தை | 75/- | 65/- |

☆ ஸ்கேட் அன் பிளவுஸ் (இம்போட்) குறித்தவிலையில் 15% கழிவு தரப்படும்.

☆ பேபி சூட் வகைகள் 10% கழிவு தரப்படும்.

☆ சேட் வகைகள் (இம்போட்) குறித்த விலையில் 15% கழிவு தரப்படும்.

மற்றும் இந்தியன் சாறி, கவுண் வகைகள், இம்போட் சூட்டிங்ஸ், லேடிஸ் T.சேட்ஸ், வொயில் சாறி, ரங்குலர் கறுப்பு, வெள்ளை, பிளேன் மற்றீரியல்ஸ், இந்தியன் சாரங்கள், டெனிம் ரவுசர் என்பனவற்றை மலிவு விலையில் விசேட கழிவுடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:-

## ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

இணை நிறுவனம்:- யோகாஸ் ஆடையகம்


இல.18, நவீன சந்தை, (C-18956) யாழ்ப்பாணம்.



## 45ஆம் நாள் நீங்காத நினைவஞ்சலியும்

ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மலர்வு 27 - 05 - 1982



உதிர்வு 03 - 10 - 2001

## செல்லத்துரை கிருபாகரன்

*ஓயாது எம் துயரம் கதறி*
*அழுதாலும் எம் துயரம் தீராது*
*பாதியில் காலன் உன்னைப் பறித்து*
*ஏனோ இருளில் தவிக்கின்றோம்?*
*காலமெல்லாம் உன் நினைவில் வாழ்கின்றோம்!*
*ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (12.11.2001) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கப்புதூ, கரவெட்டி. (94,399) ஆ.செல்லத்துரை குடும்பம்.


## விளையாட்டுப் போட்டிகள் ஒத்திவைப்பு

வலிகாமம் தெற்கு,நவ.12

கந்தரோடை ஸ்கந்தா விளையாட்டுக் கழகமும், சர்வோதயமும் இணைந்து எதிர்வரும் 19,20ஆம்திகதிகளில் நடத்தவிருந்த வலி.வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சிறுவர் பாடசாலைகளுக்குமிடையேயான விளையாட்டுப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-152)

## நாளை மாணவர்களுக்கு உபகரணங்கள் கையளிப்பு

வலிகாமம்,நவ.12

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ்வாழும் குடும்பங்களைச் சேர்ந்த 18 வயதுக்கு உட்பட்ட 107 மாணவர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் மூலம் பாடசாலை உபகரணங்கள் மற்றும் காகிதாதிகள் என்பன வழங்கப்படவுள்ளன.

நாளை செவ்வாய்க்கிழமை காலை வலிகாமம் தெற்கு பிரதேச செயலக மண்டபத்தில் வைத்து இவை வழங்கப்படும். (க-152)

## கடலில் போட்ட வலைகள் வெட்டி நாசம்!

தென்மராட்சி,நவ.12

பருத்தித்துறை கடற்பகுதியில் படையினரால் அனுமதிக்கப்பட்ட எல்லைக்கு அப்பால் சென்று போடப்பட்டிருந்த வலைகள் விசைப் படகில் வந்தோரால் வெட்டப்பட்டதாக கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசத்தில் மீனவர்கள் முறையிட்டுள்ளனர்.

கடந்த வியாழன், வெள்ளி ஆகிய தினங்களிலேயே வலைகள் வெட்டப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதென சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

கடற்கரையிலிருந்து 500 மீற்றர் தூரம் வரையிலான கடலில் தற்போது மீன்பிடிக்கப் படையினர் அனுமதி வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (க-117)


## சுடர் ஒளியினதும் யாழ்.றோட்டரிக் கழகத்தினதும்

ஆதரவுடன்

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்க தூய விஞ்ஞானப் பிரிவினர்

நடத்தும்

பாடசாலை மாணவர்களுக்கான

## இளம் ஆய்வாளர் விருது

*இளம் ஆய்வாளர் விருதினைப் பெறுவதற்குரிய விதிகள்:*

- க.பொ.த. (உயர்தர) விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள் மட்டும் பங்குகொள்ளலாம்.
- பங்குபற்றுவோர் பாடசாலையை விட்டு விலகாத மாணவர்களாக இருத்தல் வேண்டும். (இரண்டாம் முறை பரீட்சைக்குத் தோற்றுவோரும் இதில் பங்குகொள்ளலாம்.)
- கீழ்த்தரப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்தினைத் தயாரித்துப் பூர்த்திசெய்து அதிபரினால் உறுதிப்படுத்தி *கார்த்திகை மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர்* கிடைக்குமாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

செல்வி தி.இரட்ணசபாபதி,
செயலாளர்,
யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம்,
தூய விஞ்ஞானப் பிரிவு,
விலங்கியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

✂ - - - - - - - - - - - - - - - -

### மாதிரி விண்ணப்பப் படிவம்

பாடசாலை:......................................................

முழுப்பெயர்:......................................................

வதிவிட முகவரி:......................................................

க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றிய/தோற்றும் ஆண்டு:.................

விண்ணப்பிக்கும் பாடம்:......................................

(உயிரியல், பௌதிகவியல், இரசாயனவியல்)

..................................................

விண்ணப்பதாரியின் ஒப்பம்

மேற்படி .......................................... எமது பாடசாலையில் தற்சமயம் விஞ்ஞானப்பிரிவு மாணவராக உள்ளார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: அதிபரின் ஒப்பம்

☆ விண்ணப்பித்த மாணவர்களுக்கு எவ்விடயம் சம்பந்தமாக செயற்றிட்டம் மேற்கொள்ள வேண்டும் என்பது பற்றிய தொனிப்பொருளும் (உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் ஆகிய பாடங்களில்) அதற்குரிய அறிவுறுத்தல்களும் காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப்படும்.

☆ தூயவிஞ்ஞானப்பிரிவினரின் அறிவுறுத்தற்கமைய ஒவ்வொரு மாணவரும் தனித்தனியே செயற்றிட்டத்தை மேற்கொண்டு அதன் பெறுபேறுகளை செயற்றிட்ட அறிக்கையாக அறிவுறுத்தல்கள் கிடைத்த பத்துக் கிழமைகளுக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

☆ செயற்றிட்ட அறிக்கையானது மாணவரினால் எழுதப்பட்டு விஞ்ஞானப் பிரிவு ஆசிரியரினால் உறுதிப்படுத்தப்பட்டு அதிபரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு பாடசாலை இலச்சினையுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

☆ மிகச்சிறப்புடைய செயற்றிட்ட அறிக்கைக்கு வெற்றிக்கேடயமும் சிறப்புடையவற்றுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

(C-19250)



## மாபெரும் மலிவு விற்பனை!

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு!!

## விநாயகர் புடைவை நிறுவனத்தின் மலிவு விற்பனை

வாடிக்கையாளர்களின் நலன் கருதி தீபாவளிப் பண்டிகைக்கென விசேடமாக இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து ரக புடைவைகளும் விநாயகர் புடைவையகத்தில் மலிவு விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

☆ முகூர்த்தப் பட்டுப் புடைவைகள் ☆ விதவிதமான சாறிகள்

☆ சாறிக்கேற்ற பிளவுஸ் வகைகள் ☆ மங்கையர் மனங்கவர் கவுண்கள், பஞ்சாபி வகைகள், வெல்வெட் ஸ்கேட் & பிளவுஸ் வகைகள்

☆ ஆடவர் மனசுக்கேற்ப சேட், 'T' சேட், ஜீன்ஸ் துணிவகைகள்

அனைத்தையுமே மலிவான விலையில் ஒரே இடமாகப் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

## விநாயகர் புடைவையகம்

61A, 62A, 63A, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.

(C/19247)

# திருமறைக் கலாமன்ற கலைப்பாலம் நிகழ்வுகள்

குருநகர்,நவ.12

யாழ்.திருமறைக் கலாமன்றம் நடத்தும் கலைப்பாலம் - 2001 நிகழ்ச்சிகள் தீபாவளித் தினமான நாளை மறுதினம் புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு திருமறைக் கலாமன்ற அரங்கில் அரங்கேற உள்ளன.

தென்னிலங்கை திருமறைக் கலாமன்ற கலைஞர்கள் பங்குகொள்ளும் சிங்கள பாரம்பரிய கலை வடிவங்களான கண்டிய நடனம், கோலம், புத்தாக்க நடனங்கள், நாடகம் ஆகியவைகள் முக்கிய நிகழ்ச்சிகளாக நடைபெறவுள்ளன. (க-51)

## மாணவருக்கு கருத்தரங்கு

புன்னாலைக்கட்டுவன் கணேசா ச.ச.நிலையத்தால் நடத்தப்படும் ஜி.சீ.ஈ.சாதாரணதர வகுப்பு மாணவர்களுக்கான இலவச பாடக் கருத்தரங்கு தொடரில் நாளைமறுதினம் பி.ப. 3மணிக்கு 'விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்' என்ற கருப்பொருளில் கருத்தரங்கு இடம்பெறும். (க-133)


# தென்னிலங்கைக் கார்ட்டூன்கள்




நன்றி : லங்காதீப




அனுரா விளக்குப் பிடிக்க, மங்கள தூசு தட்ட, பூதக்கண்ணாடி மூலம் ஐ.தே.க. - விடுதலைப் புலிகள் பற்றி ஆராய்கிறார் பிரதமர் ரத்னசிறி.



நன்றி : டெய்லி மிரர்

தெற்கு அரசியலைப் படம் பிடித்துக்காட்டும் இந்தக் கார்ட்டூனின் அர்த்தம் புரிகின்றதா? புரியாவிட்டால் 6ஆம் பக்கம் பாருங்கள்.

### வேறு சான்றுகள் இருக்கும் பட்சத்தில்

# விசேட அ.அட்டை இல்லையென எவரையும் கைது செய்யக் கூடாது

## பொலீஸாருக்கு நீதிவான் எச்சரிக்கை

தென்மராட்சி,நவ.12

சோதனைச்சாவடியில் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கும் எவரையும் விசேட அடையாள அட்டை இல்லையெனக் கூறி கைது செய்யக்கூடாது என பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் பொலீஸாரைக் கடுமையாக எச்சரித்துள்ளார். அத்துடன் சோதனைச்சாவடிகளில் சோதனை நடவடிக்கையில் பொலீஸாரே ஈடுபட வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் பருத்தித்துறையிலிருந்து நீர்வேலிக்கு சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவர் வல்லை சோதனைச்சாவடியில் விசேட அடையாள அட்டை இல்லையென்ற காரணம் காட்டி படையினரால் கைது செய்யப்பட்டு நெல்லியடிப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவர் தேசிய அடையாள அட்டையை வைத்திருந்த போதும் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இந்த இளைஞரை பொலீஸார் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். அப்போதே நீதிவான் பொலீஸாரை மேற்கண்டவாறு எச்சரித்ததுடன், இளைஞரை விடுதலை செய்தார். (க-117)

### மேலதிகக் கொடுப்பனவு இல்லையென

# சுன்னாகம் வர்த்தக நிலைய ஊழியர்கள் முறைப்பாடு

வலிகாமம் தெற்கு,நவ.12

சுன்னாகம் வர்த்தக சங்கத்தின் எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு சனிக்கிழமை பிற்பகலிலும் ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களிலும் வியாபார நிலையம் திறக்கப்பட்டு வேலை செய்யும் போது ஏற்கனவே உறுதியளிக்கப் பட்டபடி மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படுவதில்லை என ஊழியர்கள் சார்பாக முறைப்பாடுகள் செய்யப்படுகின்றன.

வார முடிவில் சனிக்கிழமை பிற்பகல், ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் போயா விடுமுறை தினங்களில் வர்த்தக நிறுவனங்கள் திறக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றால் அங்கு வேலை செய்யும் ஊழியர்களுக்கு மேலதிக சம்பளம் வழங்கப்படும் என சுன்னாகம் வர்த்தக சங்கத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது வர்த்தக உரிமையாளர்களால் உறுதியளிக்கப்பட்டிருந்தது.

ஆனால் பல வர்த்தக உரிமையாளர்கள் இம்மேலதிக சம்பளத்தை வழங்குவதில்லை என ஊழியர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

ஊழியர்கள் ஓய்வெடுக்கவும் தம் சொந்த அலுவல்களைக் கவனிக்கவும்தான் விடுமுறைகள் விடப்படுகின்றன. எனினும் 'மேலதிக சம்பளம்' பெறும் நோக்குடனேயே ஊழியர்கள் இத்தினங்களில் வேலைக்கு வருகின்றனர். எனவே வர்த்தக சங்கம் இவர்களுக்குரிய மேலதிக சம்பளத்தைப் பெற்றுக்கொடுப்பதில் கவனம் செலுத்தவேண்டும் என ஊழியர்கள் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை -

யாழ்ப்பாண நகரில் உள்ள வியாபார நிறுவனங்கள் பல, குறிப்பிட்ட நேரத்துடன் மூடப்படாமையால் ஊழியர்கள் தம் இருப்பிடங்களைச் சென்றடைவதிலும், தமது ஏனைய கருமங்களைச் செய்வதிலும் பெரும் சிரமத்தை அனுபவிப்பதாகத் தெரிவிக்கின்றனர். மாலை ஐந்து மணிக்குப் பின்னரும், சனிக்கிழமைகளில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னரும் வர்த்தக நிறுவனங்கள் திறக்கப்பட்டு செயற்படுவதாக ஊழியர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (க-152)

### பொதுமக்கள் பலரைக் காவு கொண்ட

# குருநகர் யாகப்பர் ஆலயம் மீதான குண்டுவீச்சின் 8ஆம் ஆண்டு நினைவுநாள்

## நாளை விசேட திருப்பலி நடக்கும்

குருநகர்,நவ.12

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் மீது விமானக் குண்டுவீச்சு நடத்தப்பட்டு எட்டாவது ஆண்டு நினைவுநாள் நாளை செவ்வாய்க் கிழமையாகும்.

1993 நவம்பர் 13ஆம் திகதி நடத்தப்பட்ட 'சுப்பர் சொனிக்' விமானக் குண்டுவீச்சினால் கொல்லப்பட்ட பொது மக்களை நினைவு கூரவும், நாட்டில் அமைதியுருவாகவும் வேண்டி அன்று நோன்பு இருக்குமாறு குருநகர் மக்களை குருநகர் பங்குத் தந்தை அருட் திரு.அ.ஜெயசேகரம் அடிகள் கேட்டுள்ளார்.

அத்துடன் அன்று மாலை 5.00 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். யாகப்பர் ஆலயத்தின் மீது விமானக் குண்டு வீச்சு நடைபெற்ற நேரத்தை நினைவு கூருமுகமாக அன்று காலை 7.25 மணிக்கும் பின்னர் நண்பகல் 12 மணிக்கும் துக்க மணி அடிக்கப்பட உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (க-51)

### குறை நிவர்த்தி சேவையில்

# தென்மராட்சி மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்

யாழ்ப்பாணம்,நவ.12

நேற்றுமுன்தினம் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற ஆரம்பநாள் மக்கள் குறைநிவர்த்தி சேவையில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டபோதிலும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாத நிலையில் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

தென்மராட்சி மற்றும் பச்சிலைப்பள்ளிப் பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கான நஷ்டஈட்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் நேற்றுமுன்தினம் காலை பல சிரமங்களுக்கு மத்தியில் வந்திருந்தனர்.

இந்த விண்ணப்பப் படிவங்களை பெறுவதற்கு மக்கள் முண்டியடித்தனர். அவற்றைப் பூரணப்படுத்தும் முறைகள் சரிவரத் தெரியாமல் அவர்கள் தடுமாறியதையும் காணமுடிந்தது. அந்த விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்தி தத்தமது பகுதி கிராம அலுவலர்களிடம் ஒப்படைக்குமாறு கடமையில் ஈடுபட்டிருந்த சுகாதாரத் தொண்டர்கள் கூறிக்கொண்டிருந்ததைக் காண முடிந்தது.

"இந்தப் படிவங்களை நாங்கள் கிராம அலுவலர்கள் மூலம் பெற்றுக்கொண்டிருந்தால் சுலபமாக இருந்திருக்கும். இதற்காக இவ்வளவு தூரம் அலைக் கழிந்திருக்கத்தேவையில்லை" என்று பலரும் முணுமுணுத்ததையும் கேட்கமுடிந்தது.(ம-10-180)

### பொலீஸார், இராணுவத்தினர் உள்ளனர் என ஒதுங்காமல்

# சமூகச் சீர்கேடுகளை ஒழித்துக் கட்டுவதற்கு நாமே முனைப்புடன் செயற்பட வேண்டும்

### கருத்தரங்கில் நீதிவான் விக்னராஜா தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.12

சமூகச் சீர்கேடுகளை ஒழிப்பதற்கு பொலீஸார், இராணுவத்தினர் உள்ளனர் என யாரும் ஒதுங்கிவிட முடியாது. எமது சமூகச் சீர்கேட்டை ஒழிதது்க் கட்டுவதற்கு நாமே முன்வந்து முனைப்புடன் செயற்படவேண்டும்.

அவர்களுக்குரிய பாதுகாப்பை நீதிமன்றம் வழங்குமென நான் உறுதி கூறுகின்றேன். நான் மட்டுமல்ல எனது சகோதர நீதிபதிகளும் இதை வலியுறுத்துகின்றனர்.

இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற 'சமூகச் சீர்கேடு ஒழிப்பு'ப் பற்றிய கருத்தரங்கில் சிறப்புரையாற்றிய யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் -

சமூகத்தில் உள்ள நாம் அனைவருமே சமூக சீர்கேட்டுக்கு பொறுப்பானவர்கள். மாணவர் சமூகத்தைப் பொறுததவரையில், ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையேயான உறவு வலுப்படுத்தப்பட வேண்டும்.

ஆசிரியர்களும், பெற்றோர்களும் பிள்ளைகளின் கருத்துக்கு மதிப்பளிக்க வேண்டும். நவீன விஞ்ஞான விருத்திக்கேற்ப மனிதனுடைய சிந்தனை மாறுபடுவதுபோல் பெற்றோர், ஆசிரியர்களுடைய சிந்தனையும் மாறுபட வேண்டும்.

சமூகச் சீர்கேட்டிலிருந்து மாணவ, மாணவிகளைத் தத்தெடுப்பதற்கு பெற்றோர்கள், ஆசிரியர்கள் முனைப்புடன் செயற்படவேண்டும். எமது கலாசாரம், பண்பாடு சீரழியாதவகையில் மாணவ, மாணவிகள் நடந்துகொள்ள வேண்டும். உரிய பதவிகளில் இருப்பவர்களும் முன்மாதிரியாக இருந்து சமுதாயத்தை வழிநடத்த வேண்டும்.

சமுதாயத்தில் உள்ள பெரியவர்கள் சமூகச் சீரழிவுகளை வெளிக்கொணர்ந்து அவற்றைக் களைவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். குறிப்பாக கிராம அலுவலர்களுக்கு பொலீஸாருக்கு உரிய சில அதிகாரங்கள் உள்ளன. அவற்றை பிரயோகிக்கும்படி நான் பல தடவைகள் வலியுறுத்தியுள்ளேன். தற்போது சில கிராம சேவையாளர்களும் பொது மக்களும் இதை நடைமுறைப்படுத்தியுள்ளனர்.

அண்மையில் திருட்டு வழக்கொன்றில் நீதிமன்றில் சாட்சியமளித்த கோப்பாய் பகுதிப் பொதுமக்கள் தாம் இப்போது இரவில் எதுவித அச்சமும் இன்றி தூங்குவதாகத் தெரிவித்தனர். இதற்குக் காரணம் அப்பகுதிக் கிராம சேவையாளர்களின் முயற்சியினால் இத்திருட்டுக்களுக்கு காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள் யாழ்.சிறைச்சாலையில் தற்போது தூங்கிக்கொண்டிருப்பதே ஆகும்.

இவ்வாறு எல்லாக் கிராமசேவையாளர்களும் திரண்டால் எமது சமூகத்தில் உள்ள சீரழிவுகளை நிச்சயமாகத் தடுக்க முடியும். இதற்கான பாதுகாப்பையும், நீதியையும் வழங்க நீதித்துறை என்றும் தயாராக உள்ளது என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வுக்கு தலைமைவகித்த சுகாதாரக் குழுத் தலைவர் மனுவல் மங்களநேசன் உரையாற்றுகையில -

யாழ்.மண்ணில் இன்று கொலை, கொள்ளை, கற்பழிப்பு என்பன மிகப் பெரிய அளவில் விஸ்வரூபமெடுத்துள்ளன. குறிப்பாக யாழ்.மாணவர் சமூகம் ஆபாசத் திரைப்படங்கள் மற்றும் சீரழிவுகளில் மூழ்கி அமிழ்ந்து கொண்டிருக்கின்றது எனத் தெரிவித்தார்.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ.தெய்வேந்திரன் தனது உரையில் -

தற்போது எமது மண்ணில் உளவியல் ரீதியான நோய்களே பெருகி வருகின்றது. இதற்குக் காரணம் இங்கு தலைதூக்கியுள்ள சமூகச் சீரழிவுகளே. எமது சமூகத்தைக் கட்டிக்காக்க வேண்டியவர்கள் நாமே. இப்படியான கருத்தரங்குகளைத் தொடர்ந்து நடத்துவதன் மூலமே சமூகச் சீரழிவை ஓரளவேனும் தடுக்க முடியும். அதேவேளை சமூக மட்டத்தில் ஒரு கட்டமைப்பு வந்தால் மட்டுமே சமூகச் சீரழிவை முற்றாக நிறுத்தமுடியும் என்றார்.

வடக்குக் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் வே.பொ.பாலசிங்கம் தனது உரையில் -

எமது மூதாதையரின் காலத்தில் சமூகத்தில் நிலவிய அன்பு, நீதி என்பன இப்பொழுது எமது சமூகத்திலிருந்து தூக்கி எறியப்பட்டு விட்டன. இதற்குக் காரணம் எம்மத்தியில் உள்ள சீர்கெட்ட நடத்தைகளே. சீரழிந்து கொண்டிருக்கும் எமது சமூகத்தை மீட்டெடுப்பதற்கு - ஒரு காத்திரமான சமூகத்தை அமைப்பதற்கு - எமது இளம் சமுதாயம் முன்வர வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் மாநகர சபை உறுப்பினர்களான த.சுபத்திரன், மு.தவநாதன், எஸ்.முகுந்தன் உட்பட மற்றும் பல பிரமுகர்களும் தமது கருத்துரைகளை வழங்கினர்.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், குடும்பநல உதவியாளர்கள், அரச அதிகாரிகள் உட்பட மற்றும் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (க-ரி)

## 'மெய்வண்ணம்' நூல் வெளியீட்டு விழா

தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனையின் சுகாதாரம், உடற் கல்வி மன்றத்தின் 'மெய்வண்ணம்' (இதழ் 4) நூல் வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெறவுள்ளது.

சுகாதாரம், உடற்கல்வி மன்றத் தலைவர் க.குமாரசாமி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த நூலின் வெளியீட்டுரையை தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் மு.வ.செல்வராசாவும் வாழ்த்துரையை யாழ்பல்கலைக்கழக உடற்கல்வி அலகின் இணைப்பாளர் க.கணேசநாதனும் நிகழ்த்தவுள்ளார். (க-4)

# தீபாவளியன்று இணுவிலில் பக்தி எழுச்சிப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம்,நவ.12

நாட்டில் போர் ஓய்ந்து சாந்தி, சமாதானம், அமைதி ஏற்படவேண்டி யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் நாளைமறுதினம் புதன்கிழமை தீபாவளி தினத்தன்று காலை 9 மணிக்கு இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் விசேட பக்தி எழுச்சிப் பிரார்த்தனை ஒன்று நடைபெறவுள்ளது.

விசேட பூஜை வழிபாடுகள், நாமஜெபம், திருமுறைப் பாராயணம் என்பவற்றுடன் நடைபெறவுள்ள இந்தப் பக்தி எழுச்சிப் பிரார்த்தனையில் இந்து சமயப் பேரவையின் தலைவர் அருட்கவி சீ.விநாசித்தம்பி சமாதானத் தீபத்தை ஏற்றிவைத்து அருளுரை வழங்குவார். நண்பகல் 12 மணிக்கு இவ்விழா இடம்பெறும்.

தொடர்ந்து ஓய்வுபெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு, பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் ஆகியோர் பிரார்த்தனை உரைகளை நிகழ்த்தவுள்ளனர். (க-4)

## வாசகர் திருமுகம்

### உண்மையான திருப்பணி...!

26.10.2001ஆம் திகதிய 'உதயன்' பத்திரிகையின் விளம்பரப் பகுதியில் வெளியான கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்மன் ஆலய திருப்பணி வரவைப் பார்த்து நான் மிகவும் சந்தோசப்பட்டேன். ஏனென்றால் இன்று ஆலயங்களுக்கு அள்ளிவீசும் கட்சிகளின் காலில் விழாது அவ்வூர் மக்களிடமே ஆலயத்திருப்பணிக்கு நிதி சேகரித்து திருப்பணி வேலைகளைச் செய்த பெருமை இவ்வாலயத்தின் சிறப்பையும், புனிதத் தன்மையையும் எடுத்துக்காட்டுவதோடு ஆலயத் திருப்பணிச் சபையினரின் பெரும் முயற்சியினையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

இப்படியான செயற்பாடுகள் ஏனைய ஆலயங்களுக்கும், கட்சி அடிவருடிகளுக்கும் ஓர் எடுத்துக்காட்டாக அமைவதுடன் இன அழிப்புச் சட்டத்துக்கு கை உயர்த்திப் பெற்ற பணத்தை ஆலயங்களுக்கு வழங்கி தம பாவத்தைப் போக்க எங்களை ஒரு கருவியாகப் பயன்படுத்தும் இவர்களின் திட்டத்துக்கு துணைபோகாது மக்களின் உழைப்பில் உயர்ந்த இவ்வாலயம் எத்துணை பெரியது.

*தென்மராட்சி.* **பா.வாகீசன்.**

### யாழ்.சிவகுருநாதர் வீதியின் அவலம்

யாழ்.குடாநாட்டில் கடந்த சில ஆண்டுகளாக புனர்நிர்மாணப் பணிகள் என்றுமில்லாதவாறு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வேளையில் யாழ்நகரத்தை அண்டிய பகுதியில் - கஸ்தூரியார் வீதியையும், பிறவுண் வீதியையும் இணைக்கும் குறுக்கு வீதியான சிவகுருநாதர் வீதி இதுவரை காலமும் புனரமைக்கப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது.

இவ்வீதியானது யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை, இந்துக் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை போன்றவற்றின் மாணவர்களும் மற்றும் பொதுமக்களும் நாள்தோறும் பயன்படுத்தும் ஒரு வீதியாகும்.

மழைகாலங்களில் இவ்வீதியில் பெருமளவு நீர் தேங்கி நின்று போக்குவரத்துக்கு மிகவும் இடையூறாக உள்ளது. இது பற்றி பலரிடமும் எடுத்துக் கூறியும் இதுவரை பலன் ஏதும் கிடைக்கவில்லை. எனவே இனி வரும் காலம் மழைகாலம் என்பதை கருத்திற் கொண்டும், இவ்வீதியின் பயன்பாட்டைக் கருதியும், சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், சபைகள், அமைச்சுக்கள் போன்றவற்றின் அதிகாரிகள் இவ்வீதி புனரமைப்பில் கவனம் செலுத்தி மிகவிரைவில் திருத்தி அமைத்துத் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*நீராவியடி யாழ்ப்பாணம்.* **பாதிக்கப்பட்ட வீதியின் பாவனையாளர்கள்.**

# யாழ்.விவசாயிகள் உருளைக்கிழங்கை முன் பின்னாக நடுகை செய்வதே நல்லது

**குடாநாட்டில் உருளைக் கிழங்குப் பயிர்ச் செய்கைக் காலம் நெருங்குவதை ஒட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**

யாழ்.மாவட்ட விவசாயிகள் உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கையில் ஆரம்ப காலம்தொட்டே (1960களில் இருந்து) பாண்டித்தியம் பெற்றவர்கள என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. 1970களில் யாழ்.மாவட்டம் இலங்கையின் உருளைக்கிழங்கு உற்பத்தியில நுவரெலியா, பதுளை என்பவற்றுக்கு அடுத்தபடியாக இருந்ததுடன் விவசாயிகள் அதிகளவு இலாபத்தையும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. எனினும் காலப்போக்கில் நாட்டு நிலைமைகள் காரணமாக இப்பயிர்ச் செய்கை மிக மோசமான விளைவுகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில உற்பத்தியாளர்கள் பெரும் நஷ்டமடைய வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. இக்காலகட்டத்தில நிலைமைக்கேற்ப சில தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் இப்பயிர்ச் செய்கையை ஓரளவுக்கேனும இலாபகரமானதாக மாற்றியமைக்க முடியும். இதற்காக விளைவைக் கூட்டுதல், உற்பத்திச் செலவைக் குறைத்தல் அல்லது உயர் சந்தை விலை நிலைமையில் விளைவைச் சந்தைப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

இலங்கையின் மலைநாட்டுப் பிரதேசங்களில் ஒரு வருடத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் இப்பயிர்ச செய்கை மேற்கொள்ளப்படுகின்றபோதிலும் யாழ்.மாவட்டத்தின் கால நிலையின் அடிப்படையில் ஒரு போகத்துக்கு மாத்திரமே செய்கைபண்ண முடியும். இங்கு நவம்பர் தொடக்கம் பெப்ரவரி வரையான காலமே இப் பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமான காலமாகும். எனினும் இக்காலப் பகுதியினுள் நடுகைக் காலத்துடன் இப் பயிரின் விளைவு பெரிதும் வேறுபடும ஒன்றாகக் காணப்படுகின்றது. யாழ். மாவட்ட காலநிலை நிலைமைகளின கீழ் நவம்பர் மாதம் இரண்டாம் கிழமையளவிலான நடுகைக் காலமே அதிகவிளைவைப் பெற்றுத்தரக் கூடிய தொன்றாகக் காணப்படுகின்றது. எனினும் எல்லா விவசாயிகளும் இக்காலப் பகுதியைத் தமது நடுகைக் காலமாகத் தெரிவுசெய்தால் விளைவையும் ஒரே காலத்திலேயே பெறவேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. ஆனால் யாழ்.சந்தை நிலைமையை எடுத்துக் கொண்டால் அது ஒரு மூடிய அமைப்புடையதாகவே காணப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் விளைவுகளை வேறு மாவட்டங்களுக்கு அனுப்பிவைப்பதற்கான வசதிகள் மிகவும் அரிதாகவே உள்ளன. இக்காரணங்களினால் உருளைக்கிழங்கின் சந்தை விலை அதன் உற்பத்திச் செலவைவிட குறையவேண்டிய நிலைமைகள் ஏற்படுகின்றன. எனவே விவசாயிகள் அனைவரும் ஒரு குறித்த காலப்பகுதியில் நடுகையை மேற்கொள்வதைத் தடுத்து சிறந்த நடுகைக் காலத்துக்கு முன் பின்னாக நடுகையை மேற்கொள்வதன் மூலம் சந்தையில் ஏற்படவிருக்கும் தேக்கநிலையைத் தடுத்து நியாயமான விலையைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்காக நவம்பர் மாத ஆரம்பத்தில் இருந்து டிசெம்பர் மாதம் மூன்றாம் கிழமை வரையான காலப்பகுதியில் தமது நடுகைக் காலத்தைத் தெரிவுசெய்யலாம். இதைவிடப் பிந்திய நடுகைக் காலத்தைத் தெரிவுசெய்தால் மார்ச் மாதமளவிலேயே கிழங்கு வளர்ச்சியும் முதிர்ச்சியும் அடைய வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றது. இக்காலப்பகுதியில் அதிக வெப்பநிலை நிலவுவதனால் வளர்ச்சி அடைகின்ற, வளர்ச்சியடைந்த கிழங்குகளின் சுவாசவீதம் அதிகரிக்கின்றது. இதன் காரணமாகக் கிழங்கின் சேமிப்புணவில் குறைவேற்பட்டு விளைவைக் குறைக்கும் நிலைமை ஏற்படும்.

### 'டிசிறி' இனம்

உருளைக்கிழங்கு இனங்களைப் பொறுத்தமட்டில் காடினல், எஸ்ரா, விக்காறோ, ஆர்க்கா போன்ற பல இனங்கள் முன்னைய காலங்களில் செய்கை பண்ணப்பட்ட போதிலும் தற்போது 'டிசிறி' எனப்படும் போலந்து நாட்டில் இருந்து அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைகிழங்காக இறக்குமதி செய்யப்படுகின்ற ஒரேயொரு இனமே குறிப்பிடத்தக்களவில் நடுகைக்குக் கிடைக்கக்கூடியதொன்றாக உள்ளது. இது 105 நாள் வயதுடைய, உயர் விளைவைத் தரக்கூடிய ஓர் இனமாகும். இவ்வினமானது போலந்து, நுவரெலியா போன்ற இடங்களில் (சராசரி வெப்பநிலை 18°C) நடுகையில் இருந்து 105 நாள்களில் பூரண உடற்றொழிலியல் ரீதியான முதிர்ச்சியை அடைகின்றபோதிலும் யாழ்.மாவட்டத்தில் காணப்படும் உயர் வெப்ப நிலை காரணமாக (சராசரி வெப்ப நிலை 25°C) 75 நாள்களிலேயே பூரண முதிர்ச்சியை அடையக்கூடியதொன்றாகக் காணப்படுகிறது. இது யாழ். விவசாயபீட ஆய்வுகளினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இயல்பானது சிறந்த நடுகைக் காலத்துக்குப் பிந்திய நடுகையை மேற்கொண்டாலும் குறித்த பருவகாலத்தினுள் அறுவடையை மேற்கொள்வதற்கு ஏதுவாக அமைகின்றது.

நடுகைக் கிழங்குகளை நடுகைக்கு முன்னர் முளைகட்டலுக்குட்படுத்துவது அத்தியாவசியமான ஒரு செயல் முறையாகும். இதன்மூலம் முளைத்தலைத் துரிதப்படுத்தவும், சீரான முளைத்தலை அடையக்கூடியதாகவும் இருக்கும். அத்துடன் நீர் தேங்கும் இடங்களில் நடுகைக்குழிகள் வெற்றிடம் ஆவதையும் குறைக்கின்றது. பொதுவாக உருளைக்கிழங்குப் பயிரின் வளர்ச்சியை முளைத்தலும் பதிய வளர்ச்சியும் கிழங்கின் உருவாக்கம், கிழங்கின் வளர்ச்சியும் முதிர்ச்சியும் எனப் பிரிக்கலாம். பெருமளவில் இப் பயிரின் விளைவைத் தீர்மானிக்கும் காலம் கிழங்கின் உருவாக்கத்திற்கும கிழங்கின் முதிர்ச்சிக்கும் இடைப்பட்ட காலமாகும். (கிழங்கின் வளர்ச்சிக் காலம்). எனவே இக்காலப்பகுதியை விரிவடையச் செய்வதன் மூலம் விளைவை அதிகரிக்கமுடியும். முளைகட்டல் மூலம் முளைத்தலைத் தூண்டுவதால் முளைத்தலுக்கும் கிழங்கின் உருவாக்கத்திற்கும் இடைப்பட்ட காலமானது குறைவடையும். அதே நேரம் கிழங்கின் வளர்ச்சிக் காலமானது அதிகரிக்கிறது. விதை கிழங்குகளை இருளான - கிட்டத்தட்ட 22 - 25°C வெப்பநிலை, 85வீத ஈரப்பதன் உள்ள ஓர் இடத்தில் 5 - 6 தினங்களுக்குப் பராமரிப்பதன் மூலம் அவற்றின் முளைகொள்ளலைத் தூண்டலாம். இதற்காக தயோ யூரியா, யிபரலிக் அமிலம் போன்ற இரசாயனங்களையும் பயன்படுத்த முடியும். இப்பயிரின் விளைவைத் தீர்மானிப்பதில் ஒரு நடுகைக் கிழங்கில் இருந்து உருவாக்கப்படும் பிரதான தண்டுகளின் எண்ணிக்கையும் ஒரு செல்வாக்குச் செலுத்தும் காரணியாகும், ஆய்வுகளின்படி நான்கு தொடக்கம் ஐந்து வரையான தண்டுகளை உருவாக்குகின்ற ஒரு விதைகிழங்கில் இருந்தே குறிப்பிடத்தக்க பருமனுடைய கிழங்குகளுடன், கூடிய விளைவைப் பெற முடியும். பொதுவாக விதை கிழங்குகளைப் பொறுத்தமட்டில் அவற்றில் முதலில் தோற்றுவிக்கப்படும் முளை உச்சி ஆட்சி உடையதாகக் காணப்படுவதால் அதனை அடுத்துத் தோன்றுகின்ற முளைகளின் விருத்தியை நிரோதிப்பவையாகவும் காணப்படுகின்றன. எனவே முதலில் தோன்றும் முளைகளைக் கிள்ளி அகற்றுவதற்கும் குறிப்பிடத்தக்களவு முளைகளின் விருத்தியைத் தூண்ட முடியும்.

(வளரும்)

**செ.சத்தியசீலன்**
உதவி விரிவுரையாளர்,
பயிரியற்றுறை, விவசாய பீடம்

### கமமும் புலமும்

தயாரிப்பு: ஜெயஸ்ரீ

# பிரபாவை ஏமாற்ற முடியாது என்பதால்

# ஈ. பி. டி. பியை வளர்த்து வருகிறார் சந்திரிகா

## சுன்னாகம் ஐ. தே. க. கூட்டத்தில் மகேஸ்வரன்

வலி. வடக்கு, நவ. 12
தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனை ஏமாற்ற முடியாது என்பதை சந்திரிகா அம்மையார் நன்கு அறிந்தும், உணர்ந்தும் உள்ளார். அதனாலேயே ஈ. பி. டி. பி. கட்சியினருக்கு பெருந்தொகைப் பணத்தைக் கொடுத்து தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று கூறிக் கொள்வதற்காக அவர்களை வளர்த்து வருகின்றார்.

—இவ்வாறு யாழ். மாவட்ட ஐக்கியதேசியக்கட்சிமுதன்மை வேட்பாளர் தி. மகேஸ்வரன் குறிப்பிட்டார்.

ஐ. தே. கட்சியின் தேர்தல் பிரசாரக்கூட்டம் வேட்பாளர் மா. செல்வராசா (சித்தியர்) தலைமையில் சுன்னாகம் சிவன் கோயிலுக்கு அருகில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய மகேஸ்வரன் கூறியதாவது :-

இன்று ஈ. பி. டி. பி. கட்சியினருக்கு பின்னால் சமுர்த்தி அபிவிருத்தியாளர்கள், அபிவிருத்தித் தொண்டர்கள், தொண்டர் ஆசிரியர்கள், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் என்று கட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

அவர்களுக்கு நான் ஒன்று கூறுகின்றேன். இம்மாதச் சம்பளம் நீங்கள் எடுக்கலாம். ஆனால் அடுத்தமாதச் சம்பளம் பெறுவதற்கு ஐ. தே. கட்சியிடம்தான் செல்ல வேண்டும். ஆகவே இத்தகைய தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடாதீர்கள்.

நீங்கள் மீறிச் செயல்படுவீர்களாக இருந்தால் கட்டாயம் 6 ஆம் திகதி வேலை இழப்பீர்கள். பின் எக்காலத்திலும் உங்களுக்கு வேலை வழங்கப்படமாட்டாது. நான் இதனை உறுதிபடக் கூறுகின்றேன்.

டக்ளஸ் தேவானந்தாவைப் பொறுத்தவரையில் மோசடிகள் செய்துகொள்வதற்காகவே புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சைப் பெற்றுக் கொண்டார். இன்று பெருந்தொகைப் பணத்தை மோசடி செய்து அவரும், அவருடைய



சகாக்களும் பயன்படுத்திக் கொள்கின்றார்கள்.

ஆலயங்கள், சனசமூக நிலையங்கள், பாடசாலைகள் போன்றவற்றின் பிரதிநிதிகள் மற்றும் பலதரப்பட்டவர்களையும் அழைத்து, நிதி வழங்குவதாகக் கூறி, வவுச்சர்களில் கையொப்பம் பெற்றுக் கொள்கின்றார். ஆனால் அதிகளவு தொகைக்கு கையொப்பம் பெற்றுவிட்டு ஒரு லட்சம் ரூபாவே வழங்குகின்றார்.

வவுனியாவில் பலருக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அவற்றில் அடுத்தமாதம் 9 ஆம், 10ஆம், 11 ஆம் திகதிகளே இடப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் பல இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள் ஆனால் இவர்களின் விடுதலைக்காக எந்தவகையான முன்முயற்சி நடவடிக்கையிலும் இன்று வரை ஈ.பி.டி.பி ஈடுபடவில்லை. தெல்லிப்பழையில் புற்றுநோய் வைத்தியசாலை இருக்கக்கூடியதாகவே யாழ்ப்பாணத்து மக்கள் வைத்தியத்திற்கு கொழும்பு செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை காணப்படுகின்றது.

அமைச்சரவையில் இருந்த ஒருவர் இவ்வைத்திய சாலையை இயங்க நடவடிக்கை எடுத்திருக்கலாம். தமிழ் மக்களின் நலனின் மீது அக்கறை இன்மையாலேயே இவை பற்றி எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ள முன்வரவில்லை.

மக்கள் குறைநிவர்த்தி சேவை நடத்தப்படுகின்றது. ஆனால் இங்கு மக்களுக்கு வெற்று விண்ணப்பப்படிவங்களே வழங்கப்படுகின்றன. மக்கள் ஏமாற்றப்பட்டே வருகின்றார்கள்.

பன்னாலையில் உள்ள ஒரு வீட்டில் இருந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும், பிரேமச்சந்திரனின் முகாம் பொறுப்பாளர் பொஸ்கோ என்பவரினால் அண்மையில் நான்கு ஏ.கே.47 துப்பாக்கிகள், நான்கு கைத்துப்பாக்கிகள், (10) பத்து கைக்குண்டுகள் எடுத்து 513 ஆவது படைத்தளபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இதனை இவர்கள் புலிகளிடம் கையளித்து இருக்கலாம் தானே? இந்திய இராணுவம் இந்த மண்ணில் நிலை கொண்டிருந்தபோது, அட்டகாசம் புரியும் போது பயன்படுத்திய ஆயுதங்கள் இவை எனக்கூறி கையளிக்கப்பட்டுள்ளன.

வன்னியில் தமிழீழ விடுதலை இயக்கத்தினர் கப்பம் வாங்கி வருகின்றார்கள். மல்லாவியில் பிள்ளையார் ஸ்ரோர்ஸ் என்னும் கடை வைத்திருக்கும் எனது உறவினரிடம் ஒன்றரை லட்சம் ரூபா கப்பம் பெற்றுள்ளார்கள். இதனை எனக்கு தொலைபேசி மூலம் அவர் அறியத் தந்துள்ளார். நான் ரெலோ தலைவரிடம் இது பற்றிக் கூறியபோது பாராளுமன்றத்தில் கூற வேண்டாம் நான் அதனைக் கொடுக்கக் கூறுகின்றேன் என்று கூறினார் — எனவும் குறிப்பிட்டார்.

மற்றும் வேட்பாளர்களான க. திலகநாயகம் போல், சி. கணபதிப்பிள்ளை உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள்.

(க-86)

## விடைத்தாள் திருத்தும்பணி 15 இல் ஆரம்பம்

தென்மராட்சி, நவ. 12
தற்போது நடைபெற்று வரும் தரம் 9 மாணவர்களுக்கான மாகாண மட்டப் பொதுப் பரீட்சையின் விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களின் பரீட்சை விடைத்தாள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி ஆகிய இடங்களில் பின்வரும் விபரப்படி திருத்தும் பணி இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் 15, 16 ஆகிய திகதிகளில் தமிழ், விஞ்ஞானம், சமயம் ஆகிய பாடங்களின் விடைத்தாள்களும், 19, 20 ஆகிய திகதிகளில் சமூகக்கல்வி, கணிதம், ஆங்கிலம் ஆகிய பாட விடைத்தாள்களும், 21, 22 ஆகிய திகதிகளில் தொழில்நுட்ப பாடங்களின் விடைத்தாள்களும் திருத்தும் பணி நடைபெறவுள்ளதால் இப்பாடங்கள் கற்பிக்கும் வலயப்பாடசாலைகளின் ஆசிரியர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (க-117)

## வாழைச்சேனையில் இரவில் மக்கள் நடமாடுவதற்குத் தடை

வாழைச்சேனை, நவ. 12
வாழைச்சேனைப் பகுதியில் இரவு 7 மணிக்குப் பின்னர் பொது மக்கள் எவரும் வீதியில் நடமாடக் கூடாதென இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

வெள்ளிக்கிழமை காலை வாழைச்சேனை, கற்குடா வீதியில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலை அடுத்தே இராணுவத்தினர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(க)

## வலி. தெற்கு பிரதேச செயலர் பிரிவில்

## முகாம்களில் வசித்து வரும் 40 குடும்பங்களுக்கு வீடுகள்

வலிகாமம் தெற்கு, நவ. 12
வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள பெரிய மதவடி, ஆலடி, மட்டக்கச்சி, நலனோன்பு நிலையங்களில் தங்கிவாழும் 40 குடும்பங்களுக்கு அரை நிரந்தர வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட உள்ளன.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் மற்றும் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு—றான்—நிதியில் இருந்து இவ்வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் இதற்கென 10 லட்சம் ரூபாவையும், 'றான்' 10 லட்சம் ரூபாவையும் வழங்கியதோடு பயனாளிகள் பங்களிப்பாக 38 ஆயிரத்து 475 ரூபாவுடன் சேர்த்து மொத்தம் 2 லட்சத்து 38 ஆயிரத்து 475 ரூபா செலவில் இவ்வீடுகள் அமைக்கப்பட்டுவருகின்றன. (க-152)

## இரு கிளர்ச்சிகளை நினைவு கூர்ந்து ஜே.வி.பி. கூட்டம்

கொழும்பு, நவ. 12
1991, 1989 ஆம் ஆண்டுகளில் ஜே. வி. பியின் கிளர்ச்சிகளில் உயிரிழந்த உறுப்பினர்களின் நினைவாக நாளை செவ்வாய்க்கிழமை கொழும்பில் விகாரமகாதேவி பூங்காவில் கூட்டம் நடைபெறவுள்ளது.

கட்சித் தலைவர்கள் பலரும் இக்கூட்டத்தில் உரையாற்றவுள்ளனர் உயிரிழந்த உறுப்பினர்களின் நினைவாக மலர் ஒன்றும் அன்று வெளியிடப்படும்.

(க)

## இராணுவக் கட்டுப்பாடற்ற

## மட்டு. நாவற்காடு பகுதியில் கிளைமோர் புலிகளால் மீட்பு!

மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத நாவற்காடு கிராமத்தில் மற்றுமொரு கிளைமோர் குண்டு விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

வெள்ளிக்கிழமை மாலை இக்குண்டை விடுதலைப்புலிகள் கைப்பற்றியதோடு குண்டு கொண்டு வந்தவரையும் கைது செய்துள்ளதாகத் தெரிகின்றது.

இதனையடுத்து வவுணதீவுப் பாதையூடாக நாவற்காடு மற்றும் ஆயித்தியமலை செல்லும் வீதிகளுக்கூடான போக்குவரத்துத் தற்காலிகமாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் வவுணதீவுப் பாதையூடான போக்குவரத்து, கன்னன்குடா வீதியூடாகத் தொடர்ந்து நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

## அபராதம்

வரணி, முத்தெட்டுப் பகுதியில் கசிப்புக் குகை ஒன்றை நடத்திவந்த இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளார்.

கொடிகாமம் பொலீஸாரும் வரணிப்பகுதி படையினரும் இணைந்து நடத்திய திடீர் வேட்டையில் இந்தக் கசிப்புக் குகை கண்டு பிடிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலீஸார் இந்த இருவரையும் நீதிமன்றில் ஆஜர் செய்தபோது இருவரும் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இருவரையும் கடுமையாக எச்சரித்து நீதிவான் மேற்படி தொகையை அபராதமாக விதித்தார். (க-117)

## பேசாலைப் பகுதி மீனவர்கள் 8 பேருக்கு விளக்க மறியல்

மன்னார், நவ. 12
அரசினால் தடை செய்யப்பட்ட பொருள்களை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குக் கடத்திச்சென்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் பேசாலையைச் சேர்ந்த 12 மீனவர்களைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

மன்னார், பேசாலை கடற்பரப்பில் வைத்து கடந்த 8 ஆம் திகதி 4 படகுகளுடன் கைது செய்யப்பட்ட இந்த 12 பேரையும் கடற்படையினர் மன்னார் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர். இவர்களில் 8 பேர் வெள்ளிக்கிழமை மன்னார் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரையும் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

ஏனைய 4 மீனவர்களையும் மன்னார் கிளர்ச்சித்தடுப்புப் பொலீஸார் தொடர்ந்தும் விசாரணை செய்து வருவதாகக் கூறப்பட்டது.

(க-6)

## குருநகரில் கலை அரங்கு புனரமைப்பு

குருநகர், நவ. 12
சேதமடைந்த குருநகர் கலை அரங்கு குருநகர் ஐக்கிய முன்னணி அமைப்பினால் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றது.

இத் திருத்த வேலைகளுக்காக வடக்குப் புனர்வாழ்வு-புனரமைப்பு அமைச்சு முதற்கட்டக் கொடுப்பனவாக 1 லட்சம் ரூபா வழங்கியுள்ளதாக குருநகர் ஐக்கிய முன்னணி அமைப்பின் செயலாளர் அ. குயின்ரன் தெரிவித்தார். (க-51)

## மழையால்சேதமுற்ற 65 குடிசைகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், நவ. 12
பருவமழையால் சேதமடைந்த 65 குடிசைகளை மனித முன்னேற்ற நடு நிலையம் கடந்த ஒரு மாதகாலப் பகுதியில் புனரமைத்துக் கொடுத்துள்ளது.

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சிப் பகுதியில் வசித்து வந்த 15 குடும்பங்களுக்கும், குருநகரில் 35 குடும்பங்களுக்கும், காரைநகரில் 15 குடும்பங்களுக்குமே குடிசை வீடுகள் புனரமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு குடிசைகளையும் புனரமைக்க மனித முன்னேற்ற நடு நிலையம் தலா இரண்டாயிரத்து 500 ரூபா வீதம் ஒதுக்கீடு செய்திருந்ததாக மனித முன்னேற்ற நிலையத்தின் இயக்குநர் தெரிவித்தார்.

(க-6)

## உரும்பிராய்ப் பகுதி கடைகளில் காலாவதியான பொருள்கள்

### திடீர்ப் பரிசோதனையில் சிக்கின

வலி. கிழக்கு நவ. 12
உரும்பிராய்பகுதியில் திடீர்ச் சோதனையின் போது வர்த்தக நிலையங்களில் இருந்து மனித பாவனைக்கு ஒவ்வாத பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

கடந்த வெள்ளிக்கிழமை திடீர்ப் பரிசோதனைகளை மேற் கொண்ட கோப்பாய் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் சுகாதாரப் பரிசோதகர்களே நான்கு வர்த்தக நிலையங்களில் இருந்து காலாவதியான பொருள்களைக் கைப்பற்றி யாழ் நீதிமன்றில் அவற்றை ஒப்படைத்துள்ளனர்.

இப்பகுதியில் அண்மையில் சுகாதாரச்சீரின்மை காரணமாக இரு பேக்கரிகள் மற்றும் இரு கடைகள் மீது சுகாதாரப் பகுதியினர் வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-180)

# நெஞ்சகலாத நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

மலர்வு
09
.
10
.
1959



உதிர்வு
15
.
10
.
2001

## அமரர் இராசரத்தினம் பவானந்தன் (பவா)

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து மறைந்த
உங்களை எம்மால் மறக்க முடியவில்லையே!
சிரித்த முகமும் பண்பான பேச்சும் எம் நெஞ்சை விட்டகலாது!
*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (12.11.2001) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணம் மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் வந்து கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*"துவாரகா"*
*இணுவில் மேற்கு,*
*இணுவில்.* (94446)

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கனகாம்பிகை திருமேனி

கரம்பன் கிழக்கு, கரம்பனைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும்கொண்ட திருமதி கனகாம்பிகை திருமேனி 10.11.2001 சனிக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்கிருஷ்ணர் திருமேனியின் அன்பு மனைவியும், பத்மாவதி (பிரான்ஸ்), ரேவதி, சிவயோகவதி (லண்டன்), நந்தாவதி (ஆசிரியை - யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தி.), கமலாவதி, சித்திராவதி (பிரான்ஸ்), காலஞ்சென்ற பரமநாதன் மற்றும் காசிநாதன் (மலிபன்கொம்பனி), ஜெகநாதன் (கல்கமுவ) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவநேசன் (பிரான்ஸ்), சுவாமிநாதன், லிங்கேஸ்வரன் (கொழும்பு), மகேந்திரராஜா (ஆசிரியர் - யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2001) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(94350)

*"மகேந்திரபதி"*
*கே.கே.எஸ்.வீதி, இணுவில்*

தகவல்:
**க.மகேந்திரராஜா** (மருமகன்)

## கந்தையா தேவராசா

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மக்கள் வங்கி முன்னாள் முகாமையாளர் கந்தையா தேவராசா 09.11.2001 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பராசக்தியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மாசிலாமணி மற்றும் அரியமலர், மகிழ்மலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் புரந்தகி (மக்கள் வங்கி, வெள்ளவத்தை), ஜானகி (ஆசிரியை, அவிசாவல), ஸ்ரீவாணி (அமெரிக்கா), சபேசன் (பொறியியலாளர், நோர்வே), சபேசினி, செந்தூரன் (லண்டன்), சண்முகப்பிரியன் (மாணவன், இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபதேவன் (சாபி ரேடர்ஸ், கொழும்பு), ஸ்ரீ காந்தன் (களுபோவில வைத்தியசாலை), ஜெயரஞ்சன் (பொறியியலாளர், அமெரிக்கா), வர்சிகா (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுபனா, சுபனன், ஸ்ரீ கருணி, லக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2001) திங்கட்கிழமை மாலை 3.00 மணியளவில் 71/2, பாமன்கடை வீதி, வெள்ளவத்தை வாசஸ்தலத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கனத்தை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சு.கமலநாதன் (மைத்துனர்),
*நாகபூஷணி வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*

*71/2, பாமன்கடை வீதி,*
*கொழும்பு - 11*
*T.P.593847* (94449)

## ஆறுமுகம் தணிகாசலம்

(மண்டைதீவு)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் தற்போது கிளிநொச்சி, கனகாம்பிகைக்குளம், இரணைமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தணிகாசலம் 2001.11.10 சனிக்கிழமை அன்று வன்னியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - தில்லையம்மா தம்பதியினரின் அன்புமகனும், வள்ளியம்மையின் (கிளி - புங்குடுதீவு) அன்புக்கணவரும், ராகுலன் (இந்தியா), ரமணி, வாணி, சாவித்திரி, வாசுகி ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜயகுமாரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் நாகேஸ்வரி, ஆனந்தம், குணம் (சபீதா உணவகம், சாவகச்சேரி), தையல்நாயகி, கலாமணி (குஞ்சுமணி), பரமேஸ்வரி (கிளி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் , காலஞ்சென்ற வல்லிபுரம் மற்றும் மகேசன், புவனேஸ்வரி, ராணி, வைகுந்தராஜா (பிரபல புகையிலை வியாபாரி), சிவகுருநாதன் (அப்பு), தியாகலிங்கம் (ரெலிகொம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*கேணியடி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* (94447)

தகவல்:
க.வைகுந்தராஜா
(மைத்துனர்).

## பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம்,நவ.12

எதிர்வரும் டிசெம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நன்மைகருதி கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி இன்ரறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் தினசரி காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இந்தப் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்குத் தொடரில் முதல் நாள் சமூகக் கல்வியும் 16ஆம் திகதி விஞ்ஞானமும் தொழில் நுட்பவியலும் 17ஆம் திகதி கணித பாடமும் இடம்பெறும்.

தொடர்ந்து 19ஆம் திகதி தமிழும், 20 ஆம் திகதி விவசாயம் மற்றும் மனைப்பொருளியல், வர்த்தகம் ஆகிய பாடங்களும், 21ஆம் திகதி ஆங்கில பாடமும் இடம்பெறும்.

இந்த வழிகாட்டல் கருத்தரங்குகளில் திறமையும் அனுபவமும் மிக்க ஆசிரியர்கள் விரிவுரைகளை ஆற்றுவர். இந்த கருத்தரங்குகளில் பங்குபற்ற விரும்பும் அனைத்து மாணவர்களையும் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் வகுப்புகளுக்கு சமுகம் அளித்து பயன் பெறுமாறு இன்ரறக்ட் கழக பொறுப்பாசிரியர் எஸ். சிவநேசராசன் தெரிவித்தார். (க-6)

## இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி சந்திக்கு அண்மையில் வீதியோரத்தில் மோட்டார் சைக்கிளுடன் நின்ற இளைஞர் ஒருவரை அந்த வீதி வழியாக வந்த "பீல்ட் பைக்" இராணுவத்தினர் மோதி வீழ்த்திவிட்டுச் சென்றனர்.

கச்சேரி - நல்லூர் வீதியைச் சேர்ந்த கணேஸ் ரங்கன் (வயது 24) என்ற இளைஞர் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் நண்பர் ஒருவருடன் வீதியோரத்தில் உரையாடிக் கொண்டிருந்த சமயம் அந்த வீதி வழியாக மூன்று மோட்டார் சைக்கிள்களில் படையினர் அடுத்தடுத்து வந்தனர் என்றும், அந்த மோட்டார் சைக்கிள்களில் ஒன்றே தமது மோட்டார் சைக்கிளையும் மோதி தன்னையும் கீழே வீழ்த்திவிட்டுச் சென்றது என்றும் அந்த இளைஞர் தெரிவித்தார்.

முகம் மற்றும் காதுப் பகுதியில் இவருக்குக் காயங்கள் ஏற்பட்டுள்ளன. இவரது மோட்டார் சைக்கிளும் சேதமடைந்துள்ளது. (க-6)

## காலமானார்

சுதுமலையைச் சேர்ந்த கலைமணி சு.வடிவேலு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தனது இல்லத்தில் காலமானார். சிறந்த நாடக நடிகரும் வில்லிசைக் கலைஞருமான இவர் இலங்கையில் பல இடங்களிலும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி, ரசிகர்களின் உள்ளங்களைக் கவர்ந்தவர்.

இவரது நிகழ்ச்சிகள் வானொலி, ரூபவாஹினி என்பவற்றிலும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## விளையாட்டு நிகழ்வு

கந்தரோடை, ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஏற்பாட்டில் நான்கு பாடசாலைகள் பங்குபற்றும் 18வயதிற்கு உட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் அளவெட்டி அருணோதயக் கல்லூரி.

★ கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.(ம-86)

## விண்ணப்பத் திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம்,நவ.12

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் கடமைபுரியும் நிரந்தர ஆசிரியர்களுக்கு நடத்தவிருக்கும் விளையாட்டுப் போட்டிகளுக்கு விண்ணப்பிக்கும் இறுதித் திகதி 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருப்பதாக மாவட்டச் செயலாளர் தி.க.குமாரசாமி அறிவித்துள்ளார். கரபந்தாட்டம், உதைபந்தாட்டம், கிரிக்கெட் (மென்பந்து), சதுரங்கம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவிருப்பதாகவும் -

இப்போட்டிகளுக்கான விண்ணப்பப் படிவங்களை சகல கிளைச் செயலர்களிடமும் பெற்றுக்கொள்ளலாமெனவும் - அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# கல்விச்சாலைக் காட்சிகள்



கோப்பாய் கண்ணகை அம்மன் முன்பள்ளி நிலையத்தின் வருடாந்த விளையாட்டுப்போட்டி கோப்பாய் 'கோல்ட் ஸ்ரார்' விளையாட்டரங்கில் நடைபெற்றது.

வலி.கிழக்கு பிரதேச சபையின் உபதலைவர் யு.எல்.ஏ.ரவி மங்கள விளக்கேற்றி போட்டியை ஆரம்பித்துவைப்பதைப் படத்தில் காணலாம். பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ.பி.கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் படத்தில் உள்ளனர். (ஐ)



கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் நடந்த ஆக்கத்திறன் கண்காட்சியை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கின்றார். அருகில் பாடசாலை அதிபர் க.பொன்னையா, அழகியற்பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் சிவசுப்பிரமணியம், வரணிமகாவித்தியாலய அதிபர் நவரத்னராசா ஆகியோரும் காணப்படுகின்றனர்.



வடமராட்சி வடக்கு பிரதேச முன்பள்ளிகளின் விளையாட்டு விழாவை முன்பள்ளி ஆசிரியர்சங்க ஆலோசகர் த.என்.எஸ்.திருச்செல்வம் கொடியை ஏற்றி ஆரம்பித்து வைப்பதையும், பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரி அதிபர் செல்வி அ.கனகரத்தினம் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி, முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவர் திருமதி சற்கோணராணி அழகரத்தினம் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

(படம்:வடமராட்சி செய்தியாளர்)



ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் சர்வதேச ஆசிரியர்தின விழா அண்மையில் நடைபெற்றது. அதிபர், ஆசிரியர்கள் மாலை அணிவித்து மண்டபத்துக்கு மாணவர்களால் அழைத்து வரப்பட்ட காட்சி இது.

# நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் ஐந்நூறு கோடி ரூபா நிதி துஷ்பிரயோகம்

## ஏழு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறது ஐ.தே.க.

கொழும்பு,நவ.12

"நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் இன்றி ஐந்நூறு கோடி ரூபாவை துஷ பிரயோகம் செய்ததாக ஏழு சிரேஷ்ட அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பான விவரங்களை சட்ட ஆலோசகர்கள் திரட்டி வருகின்றனர். டிசம்பர் 5ஆம் திகதிக்குப்பின் இவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்."

- இவ்வாறு ஐதேகட்சிப் பேச்சாளா கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

"நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின் எந்த ஒரு நியமனத்தையும் வழங்க முடியாது. திறைசேரியில் இருந்து மேலதிக நிதியை எடுக்க முடியாது. நாடாளுமன்றம் இயங்கும்போது கூட மேலதிகச் செலவினங்களுக்கு நாடாளுமன்றத்தில் குறைநிரப்பு பிரேரணை மூலம் அனுமதி பெற்றே நிதியைப் பெறவேண்டும். இதுதான் நடைமுறை.

"ஆனால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டபின் நவம்பர் முதலாம் திகதி திட்ட அமுலாக்கல் அமைச்சின் ஊடாக 500 கோடி ரூபாவுக்கு மேல் நிதி எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் தலா 50 லட்ச ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதிகளில் அரசுத் தரப்பு ஆதரவாளர்களின் சிபார்சுகளுக்கு அமைய சிறு பாலங்களை அமைத்தல், பாதைகளைத் திருத்துதல், கிணறுகளைத் துப்புரவு செய்தல், சிறு சமூக அபிவிருத்தி நிலையங்களை அமைத்தல், விவசாயிகளுக்கு கிருமிநாசினி, உர வகைகளை இலவசமாக வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை அரசுத்தரப்பு செய்து வருகின்றது. இந்த நிதித் துஷ்பிரயோகம் குறித்து நாம் ஆட்சிக்கு வந்ததும் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுப்போம்" - என்றார். (உ)

# விளக்கமறியலில் இருந்த சிறுவன் வலிப்பினால் மரணம்

யாழ்ப்பாணம்,நவ.12

யாழ். சிறைச்சாலையில் இருந்து நேற்றுமுன்தினம் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுவன் ஒருவன் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று வைத்தியசாலையிலேயே உயிரிழந்தான்.

தென்மராட்சிப் பகுதியில் இருநது இடம்பெயர்ந்து வடமராட்சியில் வசித்து வந்த நடராசா கமலராஜ் (வயது-12) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தான்.

இந்தச் சிறுவனும் இவனது தாயாரான நடராசா சாந்தினியும் வடமராட்சிப்பகுதியில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பாக ஊர்மக்களால் பிடிக்கப்பட்டு பருத்துறை பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

பிடிபட்ட சமயம் இவர்கள் தாக்குதலுக்கு உள்ளானதாகக் கூறப்படுகின்றது.

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட இவர்கள் இருவரையும் விசாரணை முடியும் வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்து யாழ்.சிறைசசாலையில் தடுத்துவைக்கப்பட்டிருநத இந்தச் சிறுவனுக்கு நேற்றுமுன்தினம வலிப்புநோய் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. உடனே சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சிறுவனை யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்குச் சேர்த்தனர்.

சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று சிறுவன் உயிரிழந்தான். சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

திருட்டுச் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட இவரது தாயார் தொடர்ந்தும் யாழ்.சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அண்மைக் காலங்களில் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின்போல் பொது மக்களிடம் அகப்பட்டவர்கள் பின்னர் உயிரிழந்த இரண்டாவது சம்பவம் இதுவாகும்.

(உ-4-6-15-139)

# சிமெந்து ஊழியர் போராட்டத்துக்கு தமிழர் ஆசிரியர் சங்கமும் ஆதரவு!

காங்கேசன்துறை லங்கா சிமெநது நிறுவன ஊழியர்கள் மூன்று அம்சக் கோரிக்கையை முன்வைத்து நடத்தி வரும் தொழிற்சங்கப் போராட்டத்திற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளது.

கடந்த 12ஆண்டுகளில் ஏனைய பகுதி ஊழியர்கள் பல சம்பள உயர்வுகளையும் அதன் நிலுவைகளையும் பெற்றுக்கொண்டுள்ள போதிலும், காங்கேசன் சிமேந்து நிறுவன ஊழியர்கள் முன்னைய சம்பளத்தின் அரைப்பகுதியையே இன்னும் பெற்றுக்கொண்டிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாது.

இவர்களின் இந்தப் போராட்டம் தீவிரமடையும் பட்சத்தில் அவர்களோடு இணைந்து அவர்களுக்கு ஆதரவு வழங்க எமது சங்கம் தயாராக இருக்கிறது.

- இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

# நிலைமையை விளக்கி ஜனாதிபதிக்கு மகஜர்

## வடபிராந்திய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அனுப்பியது

யாழ்ப்பாணம்,நவ.12

நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து மறியற்போரில் ஈடுபட்டுள்ள காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களின் நிலைமையை விளக்கி வடபிராந்திய தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பி உள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மேற்படி நிறுவனம் யுத்தநிலைமையைக் காரணங்காட்டி 16.06.1990 இலிருந்து உற்பத்தி நடவடிக்கையை இடைநிறுத்தியுள்ளது. அன்றிலிருநது தொழிற்சாலை ஊழியர்களுக்கு 1989 ஆம் ஆண்டு சம்பளக் கணிப்பீட்டுக்கு அமைவாக காற்பங்கு சம்பளம், மூன்றிலொரு பங்கு சம்பளம். தற்போது அரைப்பங்கு சம்பளம் என வழங்கப்பட்டு வந்தது. அதாவது 11 வருடத்துக்கு முன்பு வழங்கப்பட்ட சம்பளத்தின் அரைப்பங்கே தற்போது வழங்கப்படுகிறது. மேற்படி நிறுவன ஊழியர்களுக்கு 1991ஆம் ஆண்டுக்குப் பின்னர் தலைமைச் செயலக ஊழியர்களுக்கு மீளாய்வு செய்யப்பட்டு வழங்கப்பட்ட அதிகரிப்புக்கள் எதுவும் வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

1996 பிற்பகுதியில் இருந்து இப்பிரதேசத்தில் ஏற்பட்ட நிலைமைகள் காரணமாக மேற்படி தொழிற்சாலையை மள இயக்குவது தொடர்பான - சாத்தியமான நிலைமைகள் உருவாகியதாகக் கருதப்பட்டு பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் பாதுகாப்புக் காரணங்களுக்காக தொழிற்சாலையை மீள இயக்குவது தொடர்பான முயற்சிகள் பிற்போடப்பட்டு, ஊழியர்களுக்கு சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெறும் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

மிக நீண்டகாலமாக மிகக் குறைந்தளவு சம்பளம், அதுவும் கால தாமதமாக வழங்கப்பட்டு வந்ததால் ஊழியர்களில் ஒரு பகுதியினர் அவர்களது வறுமை நிலை காரணமாக சுயவிருப்பின்பேரில் ஓய்வுபெறும் திட்டத்துக்கு விண்ணப்பிக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். அத்துடன் சுயவிருப்பின் பேரில் ஓயவுபெற விருப்பம் தெரிவிகாத, ஊழியர்கள் வழமைபோல் ஊழியர் வரவுப் பதிவேட்டில் கையொப்பமிடுவதற்கு தற்போது அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து நிறுவனத்தில் இயங்கும் கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் கிளை கடந்த 8 ஆம் திகதியிலிருந்து 4 கோரிக்கைகளை முன்வைத்து மறியற், போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றது.

வடபிரதேசத்திலுள்ள பாரிய தொழிற்சாலை ஒன்றை புனரமைக்காமல், தொடர்ச்சியாகப் பல ஆண்டுகள் வேலைசெய்த - இன்னமும் வேலை செய்யத் தயாராகவுள்ள - ஊழியர்களின் வேலை செய்யும் உரிமையை மறுப்பது, எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாதென எமது அமைப்புக் கருதுகின்றது.

எனவே எமது கூட்டமைப்பில் இணைந்துள்ள ஓர் அமைப்பான கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் - லங்கா சிமெந்து லிமிடெட் கிளை முன்வைத்துள்ள கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பணிவாகக் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ம)

### அறக்கொடை நிதி வழங்க முடிவு

இடம்பெயர்ந்து தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கற்கும் வசதி குறைந்த மாணவருக்கு இந்த வருட சிவத்தமிழ்ச்செல்வி பிறந்த நாள் அறக்கொடை நிதிவழங்க சபையினர் முடிவுசெய்துள்ளனர்.

வலயப் பாடசாலைகளில் தற்போது தரம் 10இல் கல்வி பயிலும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் நல்ல பெறுபேற்றுடன் சித்தியடையக்கூடிய வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற 150 மாணவர்களின் விவரங்களை இதற்கென அனுப்பி வைக்குமாறு அறக்கொடை சபையினர் வலயக் கல்விப் பணிப்பாளரைக் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

சம்மாந்துறையில் இன்று முதல்

# தொண்டர் ஆசிரியர்கள் உண்ணாவிரதப் போர்

சம்மாந்துறை கல்வி வலயத்துக்கு உட்பட்ட இருநூறுக்கும் மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் மூன்று கோரிக்கைகளை முன்வைதது இன்றுமுதல் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

சம்மாந்துறைக் கல்வி வலய தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நிலையத் தலைவர் ஏ.ஏ.ஜாபீர் தலைமையில் இந்தப் போராட்டம் நடைபெறும்.

சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலக முன்றிலில் உண்ணாவிரதத்தில் ஈடுபடுவோம் என்று சங்கச் செயலாளர் வீ.வேந்தன் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் தொண்டர் ஆசிரியர் நியமனம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை முரண்பாடு நீக்கப்படவேண்டும். இடைநிறுத்தப்பட்டுள்ள தொண்டர் ஆசிரியர்களை மீண்டும் சேவையில் அமர்த்தவேண்டும். நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் கல்வித் தகைமை உள்ள அனைவருக்கும் நியமனம் வழங்க வேண்டும். இக்கோரிக்கைகளையே அவர்கள் முன்வைத்துள்ளனர்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்துக்கு இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் முழு ஆதரவு தெரிவித்துள்ளது. (ம)


## மரண அறிவித்தல்

### திருமதி மனோன்மணி அருணாசலம்

மூளாயைச் சேர்ந்த திருமதி மனோன்மணி அருணாசலம் 09.11.2001 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அருணாசலத்தின் அன்பு மனைவியும், கண்ணம்மா (முல்லை), சகுந்தலை, பூங்கோதை (ஆசிரியை, விவேகானந்தா கல்லூரி - கொழும்பு), காலஞ்சென்ற மைதிலி ஆகியோரின் அன்புத் தாயாரும், நீலயினார் (வரணி), தியாகலிங்கம் (இலங்கை வங்கி, சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஏரகன், சேந்தன், துவாகரன், றாஜிதா, வரதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2001) திங்கட்கிழமை 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மூளாய் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
தியாகலிங்கம் (மருமகன்)
ஆஸ்பத்திரி வீதி, மூளாய்.
(C/19267)

நாகம்ஸ் சுன்னாகம்
13-11-2001 வரை
THE PLOT
(ரீல்ஸ்)
இதுவரை கண்டிராத ஆண்கள், பெண்களுக்கிடையிலான விறுவிறுப்பான கராட்டிச் சித்திரம்
காட்சிகள்:– 11.00. 2.30 (புதிய நேரம்)
எமது தீபாவளி வெளியீடு
12-பி
(தமிழ்த் திரைப்படம்)
(94148)

ராஜா யாழ்ப்பாணம்
சரத்குமார், சுகன்யா, கவுண்டமணி மற்றும் பலர் நடித்த
இளவரசன்
தினசரி 10.30, 2.30, (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.5 (புதிய நேரம்)
14.11.2001 முதல்
ஆளவந்தான்
டிக்கற்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளலாம்.
(C/18920)

நிறைஞ்சனாஸ் சங்கானை
குணால், மோனல், கரண் நடித்த
பார்வை ஒன்றே போதுமே
(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.)

மாபெரும் மலிவு விற்பனை!
தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு
ராசி சில்க்ஸ் ஸ்தாபனத்தாரின்
மலிவு விற்பனை
❖ சுபமுகூர்த்தப் பட்டுப்புடைவைகள் உட்பட இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன சாறிவகைகளும் பிளவ்ஸ் தினிசுகளும்
❖ நங்கையர் விரும்பும் ஸ்கேட் அன் பிளவ்ஸ், புறொக்ஸ், பினபோம், சல்வார் கமிஸ்
❖ ஆடவர் விரும்பும் சேட், 'T' சேட் வகைகளும் மற்றும்
❖ சிறுவர், சிறுமியர்களுக்கான நவீன ஆடைத் தெரிவுகளுக்கும்
இன்றே நாடுங்கள்!
ராசி சில்க்ஸ்
70, 71A, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.
(C/19266)



☛ மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தை உத்தரவாதப்படுத்த....
☛ தமிழீழ விடுதலைப் புலிகள் - ஸ்ரீலங்கா அரசு பேச்சுக்குக் குரல் கொடுக்க....
ஆதரிப்பீர் தமிழர் கூட்டணியை!
சுரேஷ் பிரேமச்சந்திரன்
தமிழர் விடுதலைக் கூட்டணி
(93901)



# பனம் கைப்பணிப் பொருள் உற்பத்தியாளருக்குப் பயிற்சி

## கொழும்பில் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,நவ.12

"பனம் கைப்பணிப் பொருள் உற்பத்தி தொடர்பான தொழில் நுட்ப பயிற்சிகளைப் பெறுவதற்காக பனை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் சுமார் 50பயிற்சியாளர்கள் விரைவில் கொழும்பு செல்லவுள்ளனர்.

"அங்கு ஒரு மாதகாலப் பயிற்சியைப் பெறவுள்ள இவர்களுக்கு போக்குவரத்துச் செலவுகள் உட்பட அனைத்துச் செலவுகளையும் பனை அபிவிருத்திச் சபை வழங்கும்.

"குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் சில வகையான பனம் கைப்பணிப் பொருள்கள் தென்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் கைப்பணிப் பொருள்களைவிடத் தரம் குறைந்தவையாகக் காணப்படுகின்றன.

"எனவே குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட 50 பயிற்சியாளர்களை கொழும்புக்கு அனுப்பி அங்கு பயிற்சிபெற ஏற்பாடு செய்துள்ளோம். அவ்வாறு பயிற்சி பெற்றவர்களை குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் உள்ள பனம் கைப்பணிப் பொருள் உற்பத்தி நிலையங்களில் பயிற்றுவிப்பாளர்களாக நியமிப்பதன் மூலம குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் கைப்பணிப் பொருள்களின் தரத்தை அதிகரித்துக்கொள்ள முடியும் இதன் மூலம் கைப்பணியாளர்களின் வருமானத்தையும் அதிகரித்துக் கொளள முடியும்."

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ம-4-6)

### கட்சி மாறும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினரான டாக்டர் ஜயசித டி கொஸ்டா, முன்னாள் அமைச்சரான லக்ஷ்மன் ஜெயக்கொடியின் மனைவி பமித்தா ஜெயக்கொடி, பொ.ஐ.முன்னணியின் மத்திய மாகாண முன்னாள் அமைச்சரான எஸ்.பி.சேமசிங்க ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

### பொ.ஐ.மு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குண்டாந் தடியடிப் பிரயோகமும் நடத்தினர்.

இந்த மோதல்களில் பொது மக்கள் 3பேர் காயமடைந்தனர்; பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் தாக்கப்பட்டுக் காயமடைந்தார்; பொலீஸ் ஜீப் ஒன்றும் தீமூட்டி எரிக்கப்பட்டது.

தற்போது நிலைமை கட்டுக்குள் இருப்பதாக பொலீஸ் அத்தியட்சகர் டபிள்யூ. திபயநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை -

கண்டியில் ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் சென்று கொண்டிருந்த வாகனத் தொடரணி ஒன்றும் தாக்குதலுக்கு இலக்கானது.

புசல்லாவில் இ.தொ.காங்கிரஸ் ஆதரவாளர்களின் வாகன அணி மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்தவர்களே இந்தத் தாக்குதலை நடத்தியதாக இ.தொ.கா. குற்றஞ்சாட்டியுள்ளது. (ம-9)

### உயர் நீதிமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலுக்கு முன் - நீதி வழங்கப்படுவதில் - உரிய தீர்வுகாணப்படுவதில் - உயாநீதிமன்றம் அதிக அக்கறை செய்யவில்லை என்று ஐ.தே.கட்சி அதிருப்தி கொண்டிருக்கின்றது.

கரு ஜயசூரியவின் மூன்று மனுக்களில் ஒன்றை தேர்தலின் பின்னர் ஒரு திகதியில் விசாரிக்க உயர் நீதிமன்றம் திகதி நிர்ணயித்திருக்கினறது.

மற்றைய மனுவின் விசாரணை நவம்பர் 29 ஆம் திகதி - தேர்தலுக்கு 5 நாள்களுக்கு முன் - நடைபெறும் என பிரதம நீதியரசர் திகதி நிர்ணயத்திருக்கின்றார்.

இந்தத் திகதிக்குப் பின்னர் வாதிட்டு, தேர்தலுக்கு முன்னர் தகுந்த தீர்வைப் பெற்றுக்கொள்வது இலகுவில் சாத்தியமாகக் கூடியதல்ல என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் குற்றவிசாரணைப் பிரேரணையைச் சமர்ப்பித்து அதில் ஒப்பமிட்டவாகளில் ஐ.தே.கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய முக்கியமானவர்.

அவரின் மனுக்களை பிரதம நீதியரசர் நேரடியாகத் தமது விசாரணைக்கு எடுத்துக் கொண்டதும் -

பொதுத்தேர்தலுக்கு முன் இந்த மனுக்கள் மீது தீர்ப்புக் கிட்டாத விதத்தில் மனுக்கள் மீதான விசாரணையை ஒத்திவைத்திருப்பதும் -

ஐ.தே.க. வட்டாரங்களில் பெரும் அதிருப்தியையும் சீற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (உ)

### தான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனை அடுத்து இ.தோ. தொ. காங்கிரஸ் நிறைவேற்றுக்குழு தற்போதைய நிலைமை குறித்து நேற்றுக் கூடி ஆராய்ந்தது. கட்சியின் ஒழுக்க விதிகளை மீறி நடந்து கொண்டமைகாக செல்லச் சாமியை கட்சியிலிருந்து வெளியேற்றுவது எனக் குழு தீர்மானித்தது.

கட்சியின் பிரதிச்செயலர் கே.அருள் சாமி இனிமேல் கட்சித் தலைமைப் பதவியை வகிப்பார் என்றும் குழு முடிவு செய்தது. (ம)

### கருத்துக்கணிப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.வி.பி., தங்களது கட்சியை நோக்கி மக்களின் ஆதரவு பெருமளவில் திரும்பியிருப்பதை இது எடுத்துக் காட்டுகின்றது என்று கூறியுள்ளது.

ஆரம்பக் கட்டத்திலேயே ஐ.தே. கட்சி முன்னிலையைப் பெற்றுவிட்டதைக் கருத்துக் கணிப்பு காட்டினாலும் -

ஜே.வி.பிக்கான மக்கள் ஆதரவு அதிகரித்திருப்பதும், சுமார் பதினொரு சதவீதமான மக்கள் யாரை ஆதரிப்பது என்பதை இன்னும் தீர்மானிக்காதிருப்பதும் -

அடுத்த ஆட்சியை எந்தக் கட்சி அமைக்கப் போகின்றது என்ற கேள்விக்கு விடை இன்னும் தீர்மானிக்கப்படாமலேயே - திறந்தே - உள்ளது என்பதைக் கோடிட்டுக் காட்டுவதாக அவதானிகள், ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஜே.வி.பியை 12.8 வீத மக்கள் ஆதரித்தால், 225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில், கடந்த பொதுத்தேர்தலில் அக்கட்சிக்குக் கிடைத்த பத்து ஆசனங்களை விட அதிக இடங்கள் இம்முறை கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி கணிப்பின் போது கருத்து வெளியிட்டோரிடம் கடந்த ஏழு ஆண்டுகால அரசின் தகுதி குறித்தும் வினாவட்டப்பட்டது.

மிகச்சிறந்தது என 6 வீதத்தினரும், சிறந்தது என 23 வீதத்தினரும், நல்லது அல்லது கூடாதது என்று கூறமுடியாது என 46 வீதத்தினரும், கூடாதது என 16 வீதத்தினரும், மிகக் கூடாதது என பத்து வீதத்தினரும் தெரிவித்துள்ளனர். (உ)


பௌதிகவியல்
திரு.குகன் B.Sc.
A/L 2002, 2003
சட்டமும் கதிர்ப்பும்
திங்கள் ~ 4.00 மணி
A/L 2003
உயிரியல்
திரு. தர்பரன் B.Sc.
அனுமதிகளைப் பெற்றுகொளளவும்
(94453)
BARATHY
சித்தன்கேணி.

மீசாலை புத்தூர்ச் சந்தி
வணிகர் மன்ற
பொதுக்கூட்டம்
காலம் :- நாளை (13.11.2001) செவ்வாய் காலை 10.00 மணி.
இடம் :- யாக்கரு பிள்ளையார் கோயில் முன்.
குறிப்பு:- சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகம் தரவும்.
- தலைவர்.
(94454)

SALE! SALE! SALE!
தீபாவளியை முன்னிட்டு
சங்கமம் ரெக்ஸ்
வழங்கும் மாபெரும் சிறப்புத் தள்ளுபடி விற்பனை!
14.11.2001 வரையுமே இத்தள்ளுபடி!
இப்போது எழில்மிகு தீபாவளி புடைவைகள்
உங்களது அபிமான "சங்கமம்" ரெக்ஸில்
கண்கவரும் அணிவகுப்பில் பவனி வருகின்றன.
கலர்களோ ஏராளம்...!
விலைகளோ நீங்கள் சந்தோசத்துடன்
கொடுத்திடும் அளவே! பல்வேறு புதிய
டிசைன்களிலும் நவீன ரகங்களிலும்
உங்கள் வரவுக்குக் காத்திருக்கின்றன!
சங்கமம் ரெக்ஸ்
(C/18977) 54 A, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.

SALE! SALE!!
இதோ! முந்துங்கள்!!
உள்ளம் துள்ளும் தீபாவளிப் பரிசு!
மகாநதி
வழங்கும் மாபெரும் சிறப்புத் தள்ளுபடி
இத்தள்ளுபடி 14.11.2001 வரை மட்டுமே!
நதிகளின் சங்கமம் கடலில்!
சகலவிதமான புடைவைகளின் சங்கமம் மகாநதியில்
புதிது புதிதாய்ப் பூத்திருக்கும் தீபாவளிப் புடைவைகளுக்கு ஆம்!
மகாநதி புடைவை அகம்
முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான நிறுவனம்
சாறி பிளவுஸ் பீஸ் துணி வகைகளுக்கு பிரத்தியேகக் காட்சி அறைகள்
16, நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம்.
T.P. - 2552 (C/19112)
16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

ரவி அன் ராஜ் சில்க்ஸ்
தீபாவளியின்
மாபெரும் விஷேட சலுகை விற்பனை
சாறி வகைகள்
- விப்றோசி
- மழைத்துளி
- சூரி
- திராங்
- நவீன்
- கொட்டன் செக்
- றிச் கொட்டன்
- மைகோ
- றஞ்னா
- நீலம் (மல்ரி கொட்டன்)
- மூன் லைட்
- கடற் பூக்கள்
- றேமன்ட் கிறேப் சாறி
- மிலேனியம் கிவ்ற்
- அனமிகா
- றங்கீலா
- மறீஸ்ஜ் கில்ட் [f]
- லீப்[b]ரா சில்க்ஸ்
ரீசேட்ஸ்
- [f] பிளெப் அப் ரீசேட்ஸ்
- போலோ ரீசேட்ஸ்
- அடிடாஸ் (வீனெக்)
- ஒன்லி யூ
- அலிசீஸ்
- ரச் மீ
- செமைஸ் லாகோஸ்ற்
- லாஞ் மென் (வெல்வெற்)
- [B] பி கிறேற் (வெல்வெற்)
சேட்ஸ்
- புளூ புளெட்
- லான்ட் என்ட்
- சிற்றி சேட்
- றிச் லுக்
- றெட் லீவ்
- லிமிரெட்
- மக்றோ சேட்
- சமர் லைன்
- ஸ்பென்ஸர்
- அலெக்ஸான்டர் யூலியன்
- அன்ஸ்
- றேடியன்ட்
மற்றும் ஆடவர், பெண்கள், சிறுவர், சிறுமிகளுக்கேற்ற
புதிய டிசைன்களில் றெடிமேட் ஆடைகள் அனைத்தும் தற்போது
விஷேட சலுகை விற்பனையில் விற்பனையாகிக்கொண்டிருப்பதால்
உங்கள் தெரிவுகளுக்கு இன்றே விரையுங்கள்....!
ரவி அன் ராஜ் சில்க்ஸ்
(C-19163) 77, பெரிய கடை, யாழ்ப்பாணம் T.P:2469


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.11.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.